KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
AAXEL

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

மலர்:- 33, 17 April 2026 இதழ்:- 15

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# அரசின் பயங்கரவாதத் தடைச்சட்டம் நாட்டின் சட்டங்களுக்கு ஒரு அவமதிப்பு!



## ஈழநாடு பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிரெஞ்ச் தெரிவிப்பு!

பயங்கரவாதத் தடைச் சட்டம் கடந்த காலங்களிலும் சரி, அண்மைக் காலங்களிலும் சரி, பயன்படுத்தப்பட்ட விதம் நாட்டின் சட்டங்களுக்கு இழைக்கப்பட்ட அவமதிப்பாகவே நான் கருதுகிறேன். இந்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. இந்தச் சட்டத்தினால் பல அத்துமீறல்களும் மனக்குறைகளும் ஏற்படுகின்றன. இது தொடர்பில் அரசாங்கம் ஏற்கனவே வாக்குறுதி அளித்துள்ளது. அரசாங்கம் இந்தச் சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டத்தைக் கொண்டு வர விரும்பினால், அது சர்வதேச தரத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். இது ஐக்கிய நாடுகள் சபையையோ அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தையோ திருப்திப்படுத்துவதற்காக அல்ல, மாறாக, இது நீதிக்கான ஒரு விடயமாகும் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் ஐ.நா.வின் இலங்கைக்கான (5ம் பக்கம் பார்க்க)

## வடக்கில் இளம் பெண்களை வேட்டையாடும் மத போதகர்களும் பௌத்த பிக்குகளும் முல்லைத்தீவில் மத போதகரும் நாவற்குழியில் பௌத்த பிக்குவும் கைது!






## அவசரகாலப் பிரகடனம் நீடிப்பு:- வாக்கெடுப்பில் பங்கேற்காத எதிரணி உறுப்பினர்கள் வெளியே எதிர்ப்பை வெளிப்படுத்தி என்ன பயன்?

அவசரகால பிரகடனத்தைத் தொடர்ந்து நீடிப்பது குறித்து கடந்த வாரம் பாராளுமன்றத்தில் கோரப்பட்ட வாக்கெடுப்பில் அதற்கு எதிராக 27 வாக்குகள் மாத்திரமே அளிக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 66 ஆக இருக்கையில், வெறுமனே 27 பேர் மாத்திரமே அதற்கு எதிராக வாக்களித்திருக்கிறார்கள். அவ்வாறெனில் (24ம் பக்கம் பார்க்க)

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representative*

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

RE/MAX ACE REALTY INC., BROKERAGE — EXPERIENCE THE DIFFERENCE — INDEPENDENTLY OWNED & OPERATED — we are ace




**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com





MLS


23 Years Real Estate Experience


150 Consumers Rd #109, North York, ON M2J 1P9, Canada


Bus: 416-293-4500


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


## Adelaide Ave E / Simcoe St

**Oshawa** $699,000
3+2 Beds • 2 Baths • 9 Rooms
high-demand rental area


## Kingston Rd & Sheppard Ave E

**Scarborough** $710,000
3+2 Beds • 3 Baths • 8 Rooms
open living and dining area


## Islington Ave / Steeles Ave W

**Toronto** $749,000
4 Beds • 2 Baths • 8 Rooms
Corner Condo Townhouse

## Neilson Road & Sheppard

**Scarborough** $839,000
4+1 Beds • 3 Baths • 7+3 Rooms
Location, location, location!

## Danforth and Dawes

**Toronto** $839,999
2+1 Beds • 2 Baths • 7 Rooms
Corner suite, unobstructed views

## Williamson & Westney

**Ajax** $849,000
3 Beds • 3 Baths • 7 Rooms
Detached 2-storey home

## Rogers and Dufferin St

**Toronto** $849,999
3 Beds • 2 Baths • 6+1 Rooms
fully renovated from top to bottom


## Markham Rd & Lawrence Ave

**Scarborough** $999,000
3+3 Beds • 4 Baths • 6+5 Rooms
fully renovated bungalow


## Harmony Road / Conlin Road

**Oshawa** $999,000
4 Beds • 3 Baths • 9 Rooms
Upgraded from top to bottom

## Cameo St / Burkolder Dr


**Pickering** $999,900
3 Beds • 3 Baths • 7 Rooms
Newly built detached home

## Hwy10 / Hwy 89

**Shelburne** $999,900
5 Beds • 5 Baths • 10 Rooms
Luxurious savile row model home

## Markham/Steeles

**Markham** $999,999
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Fin.basement with sep.entrance

## Markham Rd/ Lawrence Ave E
FOR LEASE

**Scarborough** $2,700
3 Beds • 1 Baths • 6 Rooms
Recently refreshed with new paint

## Markham Rd & Sheppard Ave
FOR LEASE

**Scarborough** $2,250
1+1 Beds • 1 Bath • 5 Rooms
Open concept w/ natural sunlight

## Simcoe St/ Windfields Farm Dr
FOR LEASE

**Oshawa** $1,500
1 Bed • 1 Bath • 3 Rooms
Basement with sep entrance

## Markham & Denison
FOR LEASE

**Markham** $1,450
1 Bed • 1 Bath • 4 Rooms
Basement with sep entrance

EELANADU
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தைகளின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்படவாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும், கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.com என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் விடயத்தில் தமிழரசுக்கட்சியின் முடிவுக்காக ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி காத்திருப்பு!



இலங்கைத் தமிழரசுக்கட்சியும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒன்றிணைந்து பயணிப்பதாக இருந்தால் பொதுக்கட்டமைப்பை உருவாக்குதல், பொதுச்சின்னத்தைப் பயன்படுத்தல் ஆகிய விடயத்தில் தெளிவானதொரு ஏகோபித்த நிலைப்பாட்டை எடுக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில் குறித்த விடயம் சம்பந்தமாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியானது தற்போது இலங்கைத் தமிழரசுக்கட்சியின் உத்தியோக பூர்வமான முடிவுக்காக காத்திருப்பதாக அதன் உள்ளகத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நிறைவின் பின்னர் தொடர்ச்சியாக இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடை பெற்று வருகின்றன.

இதன்விளைவாக மாதந்தம் இருதரப்புச் சந்திப்புக்களும் நீடித்துக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான நிலையில் இறுதியாக நல்லூரில் உள்ள இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் அலுவலகத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும், தமிழரசுக் கட்சிக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றிருந்தது.

இந்தச் சந்திப்பின் போது இலங்கைத் தமிழரசுக்கட்சியும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் இணைந்து செயற்படுவதற்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்குதல், பொதுச்சின்னத்தின் அடிப்படையில் கூட்டணியை அறிவித்தல், அதன் பெயர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று தொடர்வதில் பிரச்சினைகள் இல்லை ஆகிய விடயங்கள் சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இச்சமயத்தில் இவ்விடயம் சம்பந்தமாக இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தினைக் கூட்டி தீர்மானம் எடுத்ததன் பின்னர் தமது நிலைப்பாட்டை அறிவிப்பதாக பதிலளிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், குறித்த விடயம் சம்பந்தமாக ஆராய்வதற்காக இன்னமும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கூட்டப்படவில்லை என்பதோடு ஆறு மாத காலமாக அக்கட்சியின் மத்தியகுழு கூட்டம் தாமதமாகி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இறுதி முடிவினை எதிர் பார்த்து ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி காத்திருக்கின்ற சூழலில் அக்கூட்டணியின் தலைமைக்குழுக் (18ம் பக்கம் பார்க்க)

# கிளம்பியது கடும் எதிர்ப்பு:- பின்வாங்கினார் ட்ரம்ப்



போப் ஆண்டவரை ட்ரம்ப் விமர்சித்ததற்கும், இயேசுவாக தன்னை சித்தரித்த படத்திற்கும் பல்வேறு தரப்பில் இருந்து கடும் எதிர்ப்புகள் கிளம்பின. அமெரிக்காவில் உள்ள மூத்த கத்தோலிக்கத் தலைவர்களும் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த நிலையில் இயேசு தன்னை சித்தரித்த புகைப்படத்தை ட்ரம்ப் தனது சமூகவலைதள பக்கத்தில் இருந்து நீக்கினார்.

அந்த புகைப்படம் குறித்து ட்ரம்ப் கூறும்போது, இயேசுவாக சித்தரித்த அந்த படம் என்னை ஒரு மருத்துவராகவே சித்தரிப்பதாகத் தான் கருதுகிறேன்.

அது செஞ்சிலுவைச் சங்கத்துடனும் நாங்கள் ஆதரிக்கும் ஒரு செஞ்சிலுவைச் சங்கப் பணியாளருடனும் தொடர்புடையது. அந்தப் படத்திற்குத் தவறான அர்த்தம் கற்பிக்கப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# நம்பிக்கைத் துரோகம் செய்யாதீர்கள்! தையிட்டி காணி விடுவிப்பு குறித்து உரிமையாளர்கள் உருக்கம்




எமது காணிகளை விகாரைக்காக சுவீகரிக்க மாட்டோம் என தந்த உறுதிமொழியை அடுத்தே காணிகளை அளவீடு செய்ய சம்மதித்துள்ளோம். நம்பிக்கை துரோகம் செய்யாது வெசாக் தினத்திற்கு முன்னர் எமது காணிகளை கையளிப்பார்கள் என நம்புகிறோம் என காணி உரிமையாளர்களில் ஒருவரான சாருஜன் சுகுமாரி தெரிவித்துள்ளார்.

தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி உரிமையாளர்களுக்கும், கடற்றொழில் அமைச்சர், மாவட்ட செயலர், தெல்லிப்பழை பிரதேச செயலர், நில அளவை திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டவர்களுடன் மாவட்ட செயலகத்தில் 11 ஏப்ரல் 2026 சனிக்கிழமை விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் எமது காணி விடுவிப்பு தொடர்பில் கொழும்பில் மூன்று தடவைகள் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தியுள்ளனர். அவை எதற்கும் எம்மை அழைக்கவில்லை. இந்த முறை குறுகிய கால அறிவித்தல் தந்து எம்மை மாவட்ட செயலகத்திற்கு அழைத்து கடற்தொழில் அமைச்சர் தலைமையில் பேசினார்கள்.

எமது காணிகளை கையளிப்பதற்காக தாம் முயற்சிகளை முன்னெடுத்துள்ளதாகவும் உறுதிகளை உறுதிப்படுத்தி கொண்டுள்ள நிலையில் காணியின் வரைபடங்கள் தேவையாக உள்ளதால் காணிகளை அளவீடு செய்து காணி வரைபடம் வரைவதற்கு காணிகளை அளவீடு செய்ய அனுமதிக்க வேண்டும் என கோரினார்கள்.

அதற்கு நாம் விகாரையின் பிக்கு தனது விகாரைக்குரிய காணி எது என்பதனை காண்பிக்குமாறு கேட்குமாறும் அவரிடம் ஆவணங்கள் எவற்றையும் இது வரையில் இவர்கள் கேட்கவில்லை. எம்மை மட்டுமே எல்லா ஆவணங்களையும் கொண்டு வா என அலைக்கழிக்கின்றனர். தற்போது கூட எமது காணிகளை நாம் அடையாளம் காட்டி காணிகளை அளவீடு செய்ய சம்மதித்து காணி அளவீட்டு பணிகளை மேற்கொண்டு எமது காணிகளை சுவீகரிக்கும் முயற்சியா? என்ற சந்தேகம் உண்டு.

எமது சந்தேகத்தை நாம் கேட்ட போது, இது நிச்சயமாக காணியை அடையாளம் கண்டு கையளிப்பதற்காவே அளவீடு செய்கிறோமே தவிர காணிகளை சுவீகரிக்கவில்லை என கடற்றொழில் அமைச்சர் உறுதியளித்துள்ளார். அவரை நம்பி காணி அளவீட்டு பணிக்கு சம்மதம் தெரிவித்துள்ளோம். காணி அளவீட்டு பணிகள் முடிவடைந்ததும் காணிகளை எப்போது விடுவிப்பீர்கள் என கேட்ட போது , இரண்டு கிழமைக்குள் அதனை விடுவிப்போம் என தெரிவித்தனர். மேமாதம் முதலாம் திகதி வெசாக் தினம். அன்றைய தினத்திற்கு முன்னர் காணிகளை விடுவிக்கப்படும் என நம்பி எதிர்பார்க்கிறோம் என தெரிவித்தார்.

அதேவேளை மற்றுமொரு காணி உரிமையாளரான பாஸ்கரன் தெரிவிக்கையில், எமது காணிகளை விட்டு நாம் வெளியேறி 36 வருடங்கள் ஆகின்றன. காணிகளை அடையாளம் காண்பது என்பது மிக சவாலான விடயம்

எமது காணிகளின் எல்லைகள் அழிக்கப்பட்டுள்ளன. அவற்றினை மீள அடையாளம் கண்டு அளவீடு செய்ய வேண்டும். இந்த காணி அளவீட்டு பணியானது எமது காணிகளை விகாரைக்காக நிரந்தரமாக சுவீகரிக்க எடுக்கும் முயற்சியாக இருக்க கூடாது என வலியுறுத்தினோம். கடந்த கால கசப்பான அனுபவங்களை கூட நாம் தெரிவித்தோம். இந்த காணி அளவீடானது காணிகளை மீள கையளிப்பதற்கான நடாவடிக்கையே என எமக்கு உறுதியளித்துள்ளனர். அவர்கள் அதனை மீற மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் ,காணிகளை அளவீடு செய்து எல்லைப்படுத்த சம்மதித்துள்ளோம் என தெரிவித்தார்.

தையிட்டி விகாரை அமைந்துள்ள பகுதியில் உள்ள காணிகளை அளவீடு செய்யாமல் காணிகளை விடுவியுங்கள் என கேட்டோம். அதற்கு அவர்கள் காணிகளை அளவீடு செய்து உறுதியில் உள்ள காணிகளின் அளவின் அடிப்படையிலையே காணிகளை உரியவர்களிடம் கையளிப்போம் என கூறினார்கள்.

தற்போது 17 பேர் மாத்திரமே காணி உறுதிகளை கொடுத்து எமது காணிகளை மீட்க தொடர்ந்து போராடி வருகிறோம். ஆனால் விகாரை அமைந்துள்ள பகுதியில் எமது 17 பேரின் காணிகளை தவிர மேலும் சிலரின் காணிகளும் உண்டு. எனவே விகாரை அமைந்துள்ள பகுதிக்குள் தமது காணிகள் காணப்படுமாயின் அவர்கள் தமது உறுதிகளுடன் வந்து காணிகளை அடையாளம் காட்டி உங்கள் காணிகளை உறுதிப்படுத்தி கொள்ளுங்கள்.

இந்த சந்தர்ப்பத்தை தவற விட்டால், மீண்டும் நீங்கள் உங்கள் காணிகளை பெற 10 வருடங்களுக்கு மேலாக பாராட வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே தையிட்டி விகாரை பகுதிக்குள் காணி உள்ளவர்கள் தமது காணிகளை உறுதிப்படுத்த கூடிய ஆவணங்களுடன் வருகை தந்து காணிகளை அடையாளம் காட்டுமாறு கேட்டுக்கொள்கிறோம் என தெரிவித்தார்.



# அரசின் பயங்கரவாதத் தடைச்சட்டம் நாட்டின் சட்டங்களுக்கு ஒரு அவமதிப்பு

## ஈழநாடு பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிரெஞ்ச் தெரிவிப்பு!



பயங்கரவாதத் தடைச் சட்டம் கடந்த காலங்களிலும் சரி, அண்மைக் காலங்களிலும் சரி, பயன்படுத்தப்பட்ட விதம் நாட்டின் சட்டங்களுக்கு இழைக்கப்பட்ட அவமதிப்பாகவே நான் கருதுகிறேன். இந்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. இந்தச் சட்டத்தினால் பல அத்துமீறல்களும் மனக்குறைகளும் ஏற்படுகின்றன.

இது தொடர்பில் அரசாங்கம் ஏற்கனவே வாக்குறுதி அளித்துள்ளது. அரசாங்கம் இந்தச் சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டத்தைக் கொண்டு வர விரும்பினால், அது சர்வதேச தரத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

இது ஐக்கிய நாடுகள் சபையையோ அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தையோ திருப்திப்படுத்துவதற்காக அல்ல, மாறாக, இது நீதிக்கான ஒரு விடயமாகும் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிரெஞ்ச்.

ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அண்மையில் யாழ்ப்பாணத்துக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இந்த விஜயத்தின் போது அவர் ஈழநாடு பத்திரிகை அலுவலகத்துக்கும் வருகை தந்திருந்தார். அங்கு ஈழநாடு வுக்குவழங்கிய பிரத்தியேக செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார். அவரது செவ்வியின் முழு விவரம் வருமாறு:–

கேள்வி:– தற்போது இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபை முன்னெடுத்து வரும் பிரதான செயற்பாடுகள் எவை?

பதில்:– ஐக்கிய நாடுகள் சபை இலங்கையில் கால்பதித்து தற்போது 70 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இந்த நீண்ட காலப்பகுதியில் இலங்கைக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் இடையில் மிகவும் வலுவான மற்றும் நிலையானதொரு பங்களிப்பு பேணப்பட்டு வருகின்றது. கடந்த ஏழு தசாப்தங்களாக இலங்கை அரசாங்கத்துடனும் சமூகங்களுடனும் நாங்கள் இணைந்து பணியாற்றி வருகின்றோம்.

யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் போன்ற இக்கட்டான காலப்பகுதிகளிலும் சரி, முன்னேற்றகரமான காலங்களிலும் சரி, நாம் எப்போதும் இலங்கையுடன் உறுதியாக நின்றிருக்கிறோம். இலங்கையின் அபிவிருத்தி வரலாற்றிலும் அதன் வளர்ச்சிப் பாதையிலும் ஐக்கிய நாடுகள் சபை நீண்டகாலமாக ஒரு அங்கமாக இருந்து வருகின்றது.

தற்போது இலங்கையில் எமது அமைப்பு சில முக்கிய துறைகளில் விசேட கவனம் செலுத்தி வருகின்றது. குறிப்பாக பொதுச் சேவைகளின் தரம் மற்றும் வறுமை ஒழிப்பு: பொதுச் சேவைகளை மேம்படுத்துவதற்கும் வறுமையைக் குறைப்பதற்கும் நாம் பணியாற்றி வருகின்றோம். சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்: பசுமைப் பொருளாதார மாற்றத்திற்கும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறனை வளர்ப்பதற்கும் உதவி வருகின்றோம்.

பொருளாதார வளர்ச்சி வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் ஒரு ஸ்திரமான பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல். சிறந்த ஆட்சி முறை மற்றும் டிஜிற்றல் மயமாக்கல்: அரச நிர்வாகத்தை மேம்படுத்துதல் மற்றும் டிஜிற்றல் தொழில்நுட்பத்தை உள்வாங்குவதற்கு ஆதரவளித்தல்.

சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் அமைதியை நிலைநாட்டும் பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். இவை அனைத்திற்கும் மேலாக பாலின சமத்துவம் மற்றும் பெண்களை வலுப்படுத்துதல் என்பவற்றில் நாம் அதிக முதலீடு செய்கிறோம். தலைமைத்துவ பதவிகளில் அதிக பெண்கள் அங்கம் வகிப்பதையும், வேலைவாய்ப்பு, வளங்கள் மற்றும் அரசியல் என அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்கு சமமான பங்கு கிடைப்பதையும் உறுதி செய்வதே எமது நோக்கமாகும்.

கேள்வி:– பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை திருப்தியடைந்துள்ளதா?

பதில்:– 'திருப்தி' என்பது ஒரு கடினமான விடயம். எவரும் முழுமையான திருப்தியை அடைந்து விடுவதில்லை. அந்தவகையில், நாடு ஒன்றுபட்டதாக உணரவும், உண்மையான நல்லிணக்கத்தை எட்டவும் இன்னும் அதிகளவிலான பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்றே நாங்கள் கருதுகிறோம்.

ஒருபுறம், ஜனாதிபதியின் கருத்துக்கள் எமக்கு ஊக்கமளிப்பதாக உள்ளன. பாராளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரை மற்றும் யாழ்ப்பாணத்தில் அவர் நிகழ்த்திய பல்வேறு உரைகள் என்பன நாடு சரியான திசையில் பயணிப்பதற்கான சமிக்ஞைகளாகவே நான் கருதுகிறேன். இத்தகைய நகர்வுகள் நாட்டுக்கு அவசிய மானவை மட்டுமல்ல, நாட்டின் அபிவிருத்திக்கும் தார வளர்ச்சிக்கும் மிக முக்கியமானவை. இது வெறும் நீதியுடன் மட்டும் தொடர்புடையது அல்ல. நாட்டின் எதிர்கால வலிமைக்கும் அவசியமானது.

கேள்வி: நல்லிணக்கத்திற்காக அரசாங்கமும் இந்த நாடும் போதுமான அளவு செயற்பட்டுள்ளதா?

பதில்: நிச்சயமாக இல்லை. நாட்டில் இன்னும் பாரியளவிலான நம்பிக்கையீனம் நிலவுவதாகவே நான் கருதுகிறேன். சமூகங்களுக்கு இடையே இப்போதும் பரஸ்பர அவநம்பிக்கை காணப்படுகின்றது. நாட்டை ஒன்றிணைக்கக்கூடிய பாரிய சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு முன்னர், இந்த நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் அதிகம் முயற்சி செய்ய வேண்டும். உதாரணமாக, இன்று நாம் அரசியலமைப்பு சீர்திருத்தம் ஒன்றைச் செய்ய விரும்பினாலும், அந்த மேசைக்கு வருபவர்களிடையே ஒரு குறிப்பிட்ட அளவிலாவது பரஸ்பர நம்பிக்கை இருக்க வேண்டும். ஆனால், துரதிஷ்டவசமாக தற்போதைய சூழலில் அத்தகைய நம்பிக்கை இல்லை. அதனால் தான் பின்வரும் விடயங்களில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும்:

காணி உரிமை: நிலங்களுக்கான சமமான அணுகுமுறையை உறுதிப்படுத்துதல் முக்கிய வழக்குகள்: நீண்ட காலமாக நிலுவையிலுள்ள அடையாளமிக்க வழக்குகளை முன்னோக்கிக் கொண்டு செல்லுதல்.

நீதித்துறை: நாட்டின் நீதித்துறை சிறப்பாகச் செயற்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துதல்.

நினைவுகூரல்: உயிரிழந்தவர்களை நினைவு கூரும் உரிமைக்கு மதிப்பளித்தல்.

காணாமலாக்கப்பட்டோர்: காணாமலாக்கப்பட்டோர் குறித்துத் தேடும் பணிகளில் கூடுதல் கவனம் செலுத்துதல். ஆயிரக்கணக்கான மக்கள் காணாமலாக் கப்பட்டுள்ள நிலையில், அதனை நாம் அப்படியே மறந்து விட முடியாது. அவர்களைக் கண்டறியும் முயற்சிகள் அவசியம். தற்போது சில இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப்புதை குழிகள் குறித்து முன்னெடுக்கப்படும் விசாரணைகள் எமக்கு நம்பிக்கையளிக்கின்றன.

கேள்வி: பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பார்வை என்ன?

பதில்: பயங்கரவாதத் தடைச்சட்டம் கடந்த காலங்களிலும் சரி, அண்மைக்காலங்களிலும் சரி, பயன்படுத்தப்பட்ட விதம் நாட்டின் சட்டங்களுக்கு இழைக்கப்பட்ட அவமதிப்பாகவே நான் கருதுகிறேன். இந்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. இந்தச் சட்டத்தினால் பல அத்துமீறல் களும் மனக்குறைகளும் ஏற்படுகின்றன. இது தொடர்பில் அரசாங்கம் ஏற்கனவே வாக்குறுதி அளித்துள்ளது.

அரசாங்கம் இந்தச் சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டத்தைக் கொண்டு வர விரும்பினால், அது சர்வதேச தரத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். இது ஐக்கிய நாடுகள் சபையையோ அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தையோ திருப்திப்படுத்துவதற்காக அல்ல, மாறாக, இது நீதிக்கான ஒரு விடய மாகும். தனது நாட்டு குடிமக்களுக்கு நியாயமான சட்டங்களை இயற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. பயங்கரவாதத் தடைச் சட்டம் ஒரு போதும் நீதியானதாக இருக்கவில்லை. அண்மையில் கூட, இந்தச் சட்டத் தின் கீழ் பொலிஸ்துறை போலியான ஆதாரங்களை முன்வைத்ததாகவும், அதனால் ஒரு இளைஞனின் வாழ்க்கை எவ்வித காரணமுமின்றி பாழாக்கப்பட்டதாகவும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இது போன்ற பல சம்பவங்கள் நடக்கின்றன. எந்தவொரு நாட்டிலும் இத்தகைய நிலைமையை ஏற்க முடியாது. எந்த வொரு குடிமகனும் இவ்வாறான அநீதியான சட்டத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது.

கேள்வி:– தற்போதைய இலங்கை. அரசாங்கத்தின் செயற்பாடுகளை ஐக்கியநாடுகள் சபை எவ்வாறு நோக்குகின்றது?

பதில்: பொதுவாக ஒரு நாட்டில் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுப்பதை விட அந்த நாட்டை ஆட்சி செய்வது என்பது மிகவும் சவாலான விடயமாகும். பிரசாரக் களத்தை விடவும் நாட்டை நிர்வகிப்பது கடினமானது என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். எனவே, ஒரு நாட்டை ஆட்சி செய்வதில் உள்ள சிக்கல்களை நாம் மதிப்பளித்துப் பார்க்க வேண்டும்.

அதேவேளை, எந்தவொரு நாட்டிலும் அரச நிறுவனங்களில் சீர்திருத்தங்களை மேற் கொள்வது என்பது மிகவும் கடினமான காரியம். பொது நலனுக்காக உழைக்க முன்வந்துள்ள ஒரு நாட்டின் தலைவர்களிடம் நாம் ஓரளவுக்கு கனிவுடன் நடந்து கொள்ள வேண்டியது அவசியம். தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசாங்கம், பொதுமக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டே தனது இலக்குகளைக் கொண்டுள்ளதாக நான் கருதுகிறேன். அவர்கள் மக்களுக்காகவே பணியாற்றுகிறார்கள்.

உலகெங்கிலும் உள்ள ஏனைய நாடுகளிலும் பொதுநலனுக்காக உழைக்கும் இத்தகையதொரு குழுவினர் இருக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். இருப்பினும், இன்றைய சூழலில் ஒவ்வொரு இலங்கையரும் மேலதிக சீர்திருத்தங்களையும், துரிதமான முடிவுகளையும், கூடுதல் முதலீடுகளையும் எதிர்பார்க்கின்றனர்.

முதலாவதாக, இந்த அரசாங்கத்தினதும் அதன் தலைவர்களினதும் நோக்கங்கள் சரியானவை என்பதையும், அவர்கள் சரியான காரணங்களுக்காகவே பதவியில் இருக்கிறார்கள் என்பதை யும் நாம் அங்கீகரிக்க வேண்டும்.

இரண்டாவதாக, அவர்கள் இன்னும் அதிகப்படியான பணிகளை, மிகவும் வேகமான முறையில் முன்னெடுப்பதற்கு நாம் ஊக்கமளிக்க வேண்டும். இது தற்போதைய நிலையில் மிகவும் முக்கியமானதாகும்.

(அடுத்த வாரமும் தொடரும்)

# பௌத்த சாசன அமைச்சரின் கருத்துக்களுக்கு கிழக்கு மாகாண சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றியம் கண்டனம்!

வெடுக்குநாறி மலை தொடர்பாக பௌத்த சாசன அமைச்சர் சுனில் செனவி தெரிவித்த கருத்துக்களுக்கு கிழக்கு மாகாண சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றியத் தலைவர் ச.சிவயோகநாதன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.



வெடுக்குநாறி மலை தொடர்பாக பௌத்த சாசன அமைச்சர் சுனில் செனவி வியாழக்கிழமை 09.04.2026 பாராளுமன்றில் உரையாற்றும் பொழுது வவுனியா வெடுக்குநாறி மலையில் காணப்படும் தடயங்கள் அனைத்தும் பௌத்தத்திற்குரியது என தெரிவித்தது மட்டுமல்ல விரைவில் வர்த்தமாணி படுத்தப் படும் எனவும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் வெளியிட்டுள்ள இந்த கருத்தை நாம் மிக வண்மையாக கண்டிக்கிறோம். வெடுக்குநாறி மலை என்பது தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டு தளமாக நீண்டகாலமாக இருந்து வருகின்றது. இங்கு வழிபாட்டு முறைமை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயமாக நீண்ட காலமாக சைவ சமயத்தவர்களால் வழிபாடு நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அப்பகுதி மக்களின் வரலாறு, கலாசாரம் மற்றும் தொடர்ச்சியான ஆன்மீகச் செயல்பாடுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன. இவ்வாறான சூழலில், எந்தவித பரந்த ஆய்வும் இல்லாமல் ஒருதலைப்பட்சமாக இத்தளம் பௌத்த மதத்தினருக்குரியது என அறிவிப்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

இந்த ஆட்சியாளர்கள் இதன் மூலம் மிக தெளிவாக தமது இனவாத மதவாத போக்கினை கடைப்பிடிக்கிறார்கள் என்பதற்கு இதை விட ஆதாரம் தேவையில்லை. இது மிக மோசமான அதிகார துஸ்பிரயோகமாகும்.

இத்தகைய அறிவிப்புகள்: வரலாற்று உண்மைகளை மறைக்கும் முயற்சியாகும். தமிழ் மக்களினது மத மற்றும் கலாச்சார உரிமைகளை மீறும் செயலாகும். சமூக நல்லிணக்கத்தை பாதிக்கும் அபாயத்தை ஏற்படுத்தும்.

பல இன, பல மத மக்கள் இணைந்து வாழும் நாட்டில் பொறுப்பான பதவியில் உள்ளவர்கள் சமநிலையுடனும் நியாயத்துடனும் கருத்து வெளியிட வேண்டும். எந்த ஒரு சமூகம் அல்லது மதத்தினரின் உரிமைகளையும் புறக்கணிக்கும் நடவடிக்கைகள் எதிர் காலத்தில் பெரும் பாதிப்புகளை உருவாக்கக்கூடும்.

எனவே நாம் வலியுறுத்துவது: அமைச்சர் வெளியிட்ட கருத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டும். வெடுக்குநாறி மலை தொடர்பாக சுயாதீன மற்றும் உண்மையான விஞ்ஞான ரீதியான ஆய்வு நடத்த வேண்டும். அப்பகுதி மக்களின் வரலாற்று மற்றும் வழிபாட்டு உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் நீதியும் சமத்துவமும் நிலைநிறுத்தப்படும் வரை எங்களது ஜனநாயகமான எதிர்ப்பும் நடவடிக்கைகளும் தொடரும் என்றார்.

## டக்ளஸ் எச்சரிக்கை

இது இவ்வாறிருக்க வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விவகாரம் இனங்களுக்கிடையில் மீண்டும் முரண்பாடுகளையும் அவநம்பிக்கையையும் உருவாக்குவதாக இருக்கிறது என சுட்டிக்காட்டும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, இந்த விடயத்தில் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க அதிக கவனம் செலுத்தி, தீர்வு பெற்றுத்தருவது அவசியம் என்றும் தெரிவித்துள்ளார். வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய நிலப்பரப்புக்கள் பௌத்த சமயத் துக்குரியது என்றும் அந்நிலங்களை எல்லையிட்டு விரைவில் வர்த்தமானி அறிவிப்பு செய்யவுள்ளதாகவும் துறை சார் அமைச்சர் நாடாளுமன்றில் அறிவித்துள்ள நிலையில், தமிழ் மக்களிடையே அது பெரும் அதிர் வலையை உருவாக்கியுள்ளது. இந் நிலையில் இந்த விவகாரம் குறித்து கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

வெடுக்குநாறி மலையில் பௌத்த சமயத்துடன் தொடர்புடைய சான்றுகள் அதிகமாக இருப்பதாகவும் அதன் அடிப்படையில் அந்நிலங்களை பௌத்த சமயத்துக்கானதாக அடையாளமிட்டு வர்த்தமானி அறிவிப்பை அறிவிக்கவுள்ளதாகவும் துறைசார் அமைச்சர் கருத்து தெரிவித்துள்ளார். ஆனால் குறித்த அமைச்சரின் கருத்தை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

இது இனங்களுக்கிடையில் உண்மையை மறைப்பதாகவும் குறிப்பாக வரலாற்றை மறைப்பதாகவும் இனங்களுக்கிடையே சந்தேகங்களையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்துவதாக அமையும் என்று தான் நாம் நினைக்கின்றோம்.

முன்பு நாம் ஆட்சியில் இருந்தபோது வர்த்தமானி வெளியிடும் செயற்பாட்டை முன்னெடுக்காத வகையில் கையாண்டு ஒரு சுமூக நிலைக்கு கொண்டுவந்திருந்தோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இன்றைய நிலைமை, அதை முற்றாக மாற்றியமைப்பதாக இருக்கின்றது என்றார்.

கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# குண்டுகளை வீசுபவர்களின் பக்கம் எந்தக் கிறிஸ்துவின் சீடரும் இல்லை - போப் லியோ



மத்திய கிழக்கு முழுவதும் போர் பரவுவதை அபத்தமான மற்றும் மனிதாபிமானமற்ற வன்முறை என்று வர்ணித்த போப் லியோ கூறினார். இந்த மோதலில் மக்களின் உயிர்கள் அதிகபட்சமாக சுயநலத்தின் ஒரு பக்கச் சேதமாக கருதப்படுகின்றன என்றும் கூறினார்.

மிகவும் நலிந்தவர்கள், குழந்தைகள் அல்லது குடும்பங்களின் உயிரை எந்த ஆதாயமும் ஈடாகாது என்று அவர் எக்ஸ் தளத்தில் தொடர்ச்சியான பதிவு களில் கூறினார். குண்டுகளை வீசுபவர்களின் பக்கம் எந்த கிறிஸ்துவின் சீடரும் இல்லை என்று போப் லியோ அதே பதிவில் கூறினார். இராணுவ நடவடிக்கை சுதந்திரத்திற்கோ அல்லது அமைதிக் காலத்திற்கோ வழிவகுக்காது.வெளிப்புறம் என்று அவர் எழுதினார்.

# போப் லியோவிடம் மன்னிப்புக் கேட்க ட்ரம்ப் மறுப்பு!

ஈரான் மீதான தனது போர் குறித்து வளர்ந்து வரும் பிளவுகளுக்கு மத்தியில், உலகின் 130 கோடி கத்தோலிக்கர்களின் தலைவரான போப் லியோவை பகிரங்கமாகக் கடுமையாக விமர்சித்ததைத் தொட ர்ந்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் திங்களன்று (13) அவரிடம் மன்னிப்பு கேட்க மறுத்து விட்டார்.

ஞாயிற்றுக்கிழமையன்று, ட்ரம்ப் தனது `ட்ரூத் சோஷியல்' சமூக வலைதளத்தில் ஒரு பதிவை வெளியிட்டார். அதில் குற்றங்களைக் கட்டுப்படு த்துவதில் போப்பின் செயல்பாடு `பலவீனமானது' என்றும், வெளியுறவுக் கொள்கையில் அவர் `மோச மாக' இருப்பதாகவும் கூறி அவரைக் கண்டித்தார்.

மேலும் முதல் அமெரிக்க போப்பான லியோ, அமெ ரிக்க ஜனாதிபதியைத் திருப்திப்படுத்துவதற்காகவே தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றும் அவர் குறிப்பிட் டார்.

லியோவிடம் மன்னிப்பு கேட்க வேண்டுமா என்று கேட்டதற்கு, ட்ரம்ப், இல்லை, நான் அப்படி நினை க்கவில்லை. ஏனென்றால், போப் லியோ தவறான விஷயங்களைக் கூறினார்,' என்றார்.

ஈரான் விஷயத்தில் நான் செய்வதை அவர் கடுமை யாக எதிர்த்தார். அணு ஆயுத ஈரான் இருக்கக்



கூடாது. இதன் இறுதி முடிவில் போப் லியோ மகிழ்ச்சியடைய மாட்டார்,' என்று ஓவல் அலுவல கத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் அவர் கூறி னார்.

குற்றம் மற்றும் பிற விஷயங்களில் அவர் மிகவும் பலவீனமாக இருக்கிறார். நான் போப் லியோவின் கருத்துக்கு பதிலளிக்கிறேன், அவ்வளவு தான். என்றார்.

# போப்வுக்காக குரல் கொடுக்கும் ஈரான்!



வத்திக்கான் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இடையிலான வார்த்தைப் போர் தீவிரமடைந்துள்ள நிலையில் போப் லியோ XIV-க்கு ஆதரவாக ஈரான் தற்போது குரல் கொடுத் துள்ளது.

போப் லியோவை ட்ரம்ப் விமர்சித்ததை `பெரிய அவமானம்' என கண்டித்துள்ள ஈரானிய ஜனாதி பதி மசூத் பெசெஷ்கியன், அமைதி மற்றும் சகோ தரத்துவத்தின் தூதரான இயேசுவின் பிரதிநிதியை அவமதிப்பது எந்தவொரு சுதந்திர மனிதனாலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று என தெரிவித்து ள்ளார்.

பெசெஷ்கியனின் அலுவலகத் தகவல் தொடர்புத் துறை துணை அதிகாரி மெஹ்தி தபதாபாயி, போப் மீதான இந்தத் தாக்குதலை ஈரானின் முன் னாள் உச்சத் தலைவர் அயதுல்லா அலி கமேனி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் ஒப்பிட்டு ள்ளார்.

இஸ்லாமிய தலைவரைப் படுகொலை செய்த போது மேற்குலகம் மௌனமாக இருந்ததாலேயே, தற்போது கத்தோலிக்கத் தலைவரின் நற்பெயரு க்குக் களங்கம் விளைவிக்கும் துணிச்சல் அவர் களுக்கு வந்துள்ளதாக அவர் கடுமையாக விமர்சி த்துள்ளார். முன்னதாக போப் லியோவை `வெளியுறவுக் கொள்கையில் மிகவும் மோசமான வர்' என்று ட்ரம்ப் சாடியிருந்த நிலையில், அதற் குப் பதிலளித்துள்ள போப், `ட்ரம்ப் நிர்வாகத்தைக் கண்டு எனக்கு எந்தப் பயமும் இல்லை நற்செய்தி யின் செய்தியை உரக்கச் சொல்வதே எனது பணி, அதை நான் தொடர்ந்து செய்வேன்' எனத் துணிச் சலுடன் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில், அமெரிக்காவு டனான போர்ச் சூழலில் இருக்கும் ஈரான், கத்தோலி க்கத் தலைவருக்கு ஆதரவாகத் தார்மீக அடிப் படையில் களமிறங்கியிருப்பது சர்வதேச அரசிய லில் ஒரு வியக்கத்தக்க திருப்பமாகக் கருதப்படு கிறது.

இதேவேளை திருத்தந்தை குறித்து ஜனாதிபதி ட்ரம்ப் கூறிய வார்த்தைகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்று இத்தாலிய பிரதமர் ஜார்ஜியா மெலோனி கண்டனம் தெரிவித்துள்ளார். போப் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர், மேலும் அவர் அமைதிக்கு அழைப்பு விடுப்பதும், அனை த்து வகையான போர்களையும் கண்டிப்பதும் சரியானது மற்றும் இயல்பானது,' என்று மெலோனி வெளியிட்ட அறிக்கையில் கூறினார்.

ஞாயிற்றுக்கிழமை அன்று ட்ரம்ப் போப்பிற்கு எதிராக ஒரு கடுமையான தாக்குதலைத் தொடுத்த தைத் தொடர்ந்து மெலோனியின் இந்த அறிக்கை வந்துள்ளது.

கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த வரும், வலதுசாரி கூட்டணி அரசாங்கத்தின் தலை வருமான மெலோனி, டிரம்பின் நெருங்கிய கூட்டாளி ஆவார். போப் லியோ மீதான அமெரிக்க ஜனாதிபதியின் கடுமையான விமர்சனத்தைக் கண்டிக்க அவர் இதுவரை தயக்கம் காட்டி வந்தமை குறிப்பிடத் தக்கது.

# செஞ்சொற்செல்வரின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி



துர்க்கை அம்பாளின் திருவருளை வேண்டி, சித்திரை தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் ஆனந்தம் அடைகின் றேன். சைவ தமிழ் மக்கள் புதுவருடப் பிறப்பன்று மருத்து நீர் வைத்து நீராடி குலதெய்வ திருத் தலங்களை நோக்கிச் சென்று வழிபாடு செய்ய வேண்டும்.

ஆலயங்களுக்கு செல்லும் போது சகல பெற்றோர் களும் தங்கள் பிள்ளைகளை தவறாது அழைத்து செல்ல வேண்டும். பிள்ளைகளை ஆலய வழி பாட்டுக்கு அழைத்து செல்ல தவறியதன் பலாபலன் களை தற்காலத்தில் நமது சமூகத்தில் தினமும் நடைபெறும் வேதனையாக சம்பங்கள் ஊடாக நாங்கள் அனுபவிக்கிறோம்.

பெற்றோர்கள் யாவரும் தங்களுடன் பிள்ளைகளை ஆலயத்திற்கு அழைத்துச் செல்லும் பழக்கத்தை தவறாது வளர்த்துக் கொள்ள வேண்டும். எது நடந்தாலும் நமக்கு என்ன என்ற அசண்டையால் தான் நமது சமூகம் பெரும் அவலத்தை இன்று சந்தித்து நிற்கிறது.

இறை வழிபாட்டிற்கும் ஆன்மீகத்திற்கும் நெருங்கி வராத பிள்ளைகளின் நடத்தை கோலங்களை நாங்கள் மிகத் தாராளமாக தினமும் கண்டு வரு கிறோம். இந்த நிலை மாற வேண்டும். புது வருடத்தில் பெற்றோர்கள் ஆலயங்களுக்கு செல் லும் போது பிள்ளைகளையும் அழைத்து செல்ல வேண்டும்.

புதிய ஆண்டு பிறக்கின்ற போது எங்கள் அகத்தி லும் புதிய எண்ணங்கள் பிறக்க வேண்டும். கடந்த ஆண்டில் நிறைவேற்றுவதற்கு தவற விடப்பட்ட நல்ல காரியங்களை புதிய ஆண்டில் நிறைவேற்ற பாடுபட வேண்டும்.

மனித வாழ்வு மகத்துவமானது. போன நாட்கள் மீண்டும் ஒருபோதும் திரும்பி வராது. வாழக் கிடைத்த ஒவ்வொரு வினாடியையும் மிகவும் பயனுள்ள வகையில் பயன்படுத்தி வாழ்வாங்கு வாழ்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். இவ் அரிய பிறவி நமக்கு கிடைத்தது மிக அரிய வாய்ப்பு ஆகும் என்பதை உணர்ந்து இவ் அரிய வாய் ப்பை மாசுபடுத்தாது மிகப் புனிதமாக நாங்கள் பேண வேண்டும்.

புதிய ஆண்டில் கடவுளை வழிபாடு செய்கின்ற போது நமக்காக மட்டுமன்றி பிற உயிர்களும் நன்றாக வாழ வேண்டும் என வழிபாடு செய்ய வேண்டும். நாடு நன்றாக இருந்தால்தான்தான் நாங்களும் நன்றாக இருக்க முடியும். நாட்டில் தர்மம் பேணப்படல் வேண்டும்.

நாட்டில் வாழ்கின்ற அனைவரும் இன்புற்று வாழ வேண்டும். ஆட்சியில் இருப்பவர்கள் தொடக்கம் நாட்டில் வாழ்கின்ற சகல மக்களும் சகல உரிமை களும் பெற்று குறைவின்றி வாழ வழி ஏற்பட வேண்டும்.

உலகில் தற்போது பசுமைப் புரட்சியோ தொழில் புரட்சியோ வாழ்வியல் புரட்சியோ இல்லை. தற் பொழுது வல்லமை புரட்சியே நடைபெறுகிறது. இதனால் தான் வான் மழைக்கு பதிலாக குண்டு மழை பொழிகின்றது. மகிழ்ச்சியாக வாழ வேண்டிய உலகம் இன்று அபாயகரமான நிலை யில் அல்லல்படுகிறது.

வல்லரசுகள் தத்தம் வல்லமையை நிரூபிப்பதற்கு உயிர்களையும் உடமைகளையும் அழிக்கின்றார் கள் இதனை எந்தக் கடவுளும் ஏற்காது. பாடு படுவோருக்கே இந்தப் பாரிடம் சொந்தம். இன்று உயிர்களையும் உடமைகளையும் அழிப்பதற்கு மனித வலு வீணாக செலவு செய்யப்படுகிறது.

இதை யார் சிந்திக்கப் போகிறார்கள்? அறிவால், ஆளுமையால், செல்வத்தால் வளர்ச்சி பெற்ற நாடு கள் (18ம் பக்கம் பார்க்க)

# வடக்கில் இளம் பெண்களை வேட்டையாடும் மத போதகர்களும் பௌத்த பிக்குகளும்

# முல்லைத்தீவில் மத போதகரும் நாவற்குழியில் பௌத்த பிக்குவும் கைது!

முல்லைத்தீவு மல்லாவி பகுதியில் இடம் பெற்றதாக கூறப்படும் கடுமையான குற்றச்சாட்டு சம்பவம் தொடர்பில் மதபோதகர் உட்பட மூவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பெண்களுக்கு மயக்க மருந்து வழங்கி பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் இந்த மூவரும் கைது செய்யப்பட்டனர். சம்பவம், சில நாட்களுக்கு முன்பு வவுனிக்குளம் பகுதியில் நடைபெற்ற பிறந்தநாள் நிகழ்வுடன் தொடர்புடையதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.




குறித்த நிகழ்வில் பங்கேற்ற சிலர் பின்னர் தனித் தனியாக வீடு திரும்பிய நிலையில், வாகனம் இல்லாத இரு இளம் பெண்கள் (20 மற்றும் 21 வயது) மதபோதகர் இயக்கிய வாகனத்தில் பயணித்ததாக கூறப்படுகிறது. அந்த பயணத்தின் போது பெண்கள் மயக்க நிலைக்கு உள்ளான நிலையில் அவர்களிடம் பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சிக்கப்பட்டதாக மல்லாவி பொலிஸாரிடம் அளிக்கப்பட்ட முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் தமக்கு வழங்கப்பட்ட மதுபானம் காரணமாக மயக்கம் ஏற்பட்டதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் வாக்கு மூலம் வழங்கியுள்ளனர்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள் தற்போது கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பெற்றோரின் முறைப்பாட்டின் பேரில் விசாரணைகளைத் தொடங்கிய மல்லாவி பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் சாரதி மற்றும் மற்றொருவரை முதலில் கைது செய்தனர். பின்னர், மதபோதகரும் கைது செய்யப்பட்டார். இந்த மூவரும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 22ஆம் தேதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை நாவற்குழி விகாரையின் இளநிலை பிக்கு, சிறுமியை துஸ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். நாவற்குழி விகாரைக்கு அருகில் வசிக்கும் சிறுமி விகாரை வளாகத்தில் வடிகட்டிய (பில்டர்) நீரினை பெறுவதற்காக 28 மார்ச் 2026 சனிக்கிழமை சென்ற வேளை விகாரைக்கு புதிதாக வந்த இளநிலை பிக்கு சிறுமியை துஸ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளனர். இது தொடர்பில் பாதிக்கப்பட்ட சிறுமி தனது தாயாரிடம் தெரிவித்த நிலையில் தாயாரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் குறித்த இளநிலை பிக்குவை கைது செய்து இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவானின் வாசஸ்தலத்தில் முற்படுத்திய வேளை பிக்குவை எதிர்வரும் 2ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

## பிள்ளையான் மருத்துவமனையில் அனுமதி!

கடந்த 2006ஆம் ஆண்டு கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சி.ரவீந்திரநாத் கொழும்பிற்கு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிசை நீதவான் நீதிமன்றம் கடந்த 02ஆம் திகதி உத்தரவிட்டிருந்த நிலையிலேயே நேற்று சிறைச்சாலை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். கடந்த 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டிருந்த பிள்ளையான், சுமார் ஒரு வருடங்களின் பின்னர் கடந்த 02ஆம் திகதி மருத்துவ பரிசோதனைகளுக்காக சட்டவைத்திய அதிகாரியிடம் அழைத்து வரப்பட்டிருந்தார். இதனை தொடர்ந்து அன்றைய தினமே கொழும்பு கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் முன்நிலைப்படுத்தப் பட்ட நிலையில் சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்கப் பெறும் வரை யில் விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிசை நீதவான் நீதிமன்றம் உத்தர விட்டிருந்தது. முன்னதாக கடந்த ஆண்டு ஏப்ரல் 08ஆம் திகதி மட்டக்களப்பில் குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்ட பின்னர், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி தொடக்கம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 90 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. தற்போது விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ள பிள்ளையான் சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் ஜகத் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



Vivekananthan Sasitharan
Barrister, Solicitor & Notary Public



Rajabalini Sasitharan
Barrister, Solicitor & Notary Public

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையின் இலக்கும் ரில்வின் சில்வா எதிர் பார்க்கும் காலநீட்சியும்!

தமிழ்த் தேசிய கட்சிகளை இணைப்பதற்கான இன்னொரு முயற்சியை புதிதாக உருவாகியுள்ள ஒரு கூட்டு ஆரம்பித்துள்ளது. இதன் பெயர் தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை.

இனப்பிரச்சனைக்கான தீர்வு, புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒருமித்த நிலைப்பாட்டில் கொண்டு வருவதே இந்தப் புதிய பேரவையின் நோக்கம் என்று ஊடகங்களில் வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ,தற்காக அக்கறையுள்ள தமிழ்ச் சட்டத்தரணிகள் ஒன்று சேர்ந்து தம்மை ஒரு பேரவை ஆக்கியுள்ளனர்.

கடந்த காலங்களில் மட்டுமன்றி நிகழ்காலத்திலும் பேரவை என்ற சொற்பதம் நன்கு பிரபல்யமானது. தமிழ்த் தேசிய பேரவை என்று சில மாதங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட அமைப்பு ,ன்னமும் ,யங்கி வருகிறது. அது வேறு, இப்போது உருவாகியுள்ள தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை வேறு.

சட்டத்தரணிகள் பேரவை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னரான இரண்டாவது சந்திப்பு கடந்த வியாழக்கிழமை 9ம் திகதி கொழும்பில் மூடிய அறைக்குள் ,டம்பெற்றுள்ளது. இதனால் இணைய வழியில் பங்கேற்க விரும்பியவர்களுக்கு இடமளிக்கப்படவில்லை.

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் மட்டுமே பங்கு பற்றுவதாக இந்தப் பேரவை அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசிய என்ற பதம் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் தேசிய அரசியல் கட்சிகளையும், முன்னாள் ஆயுதக் குழுக்கள் சிலவற்றையும் சேர்த்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பை உருவாக்கிய பின்னரே உலகளாவிய ரீதியில் பிரபல்யமானது.

இக்கூட்டமைப்பில் ஆரம்பத்தில் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியும் மட்டுமே அரசியல் கட்சிகளாக இடம் பெற்றிருந்தன. பின்னர் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் இடத்தை தமிழரசுக் கட்சிதன தாக்கியது. ஆனால், கடந்த பதினாறு ஆண்டுகளில் பல பிளவுகளையும், வெடிப்புகளையும் சந்தித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பின்னர் வெவ்வேறானது.

இப்போது காலத்தின் தேவையை உணர்ந்து மீண்டும் ஓர் இணைப்பு தமிழ்த் தேசியம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சி எண்ணியவாறு வெற்றி பெற வேண்டுமென பலரும் எதிர்பார்க்கின்றனர்.

தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தினாலும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணம் ஒன்றை தயாரிக்கும் பணிக்காக சட்டத்துறையினர் ஐந்து பேரையும், கட்சிகளின் பிரதிநிதிகள் ஐந்து பேரையும் கொண்ட குழு ஒன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மூத்த சட்டத்தரணி கனகஈஸ்வரன் மற்றும் புகழ்பெற்ற சட்டத்தரணிகளான செல்வகுமாரன், தமிழ்மாறன், குருபரன், கலாநிதி சிவகுமார் ஆகியோர் சட்டத்தரணிகள் சார்பில் இக்குழுவில் இடம் பெறுகின்றனர். இவர்கள் ஐவரையும் தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவையே தெரிவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணியாகவுள்ள கனகஈஸ்வரன் இலங்கையில் பிரபல்யமாக விளங்கிய சட்டத்தரணியும் செனட்டருமான அமரர் எஸ்.ஆர்.கனகநாயகத்தின் புதல்வர். 1976ம் ஆண்டில் தமிழரசுக் கட்சி எம்.பிக்களுக்கு எதிரான ட்ரயல் அற் பார் வழக்கில் ஆஜரான வழக்கறிஞர்களில் கனகஈஸ்வரனும் ஒருவர். வடமாகாண முதலமைச்சராகவிருந்த சி.வி. விக்னேஸ்வரன், தமிழரசுக் கட்சியின் தேசிய பட்டியல் எம்.பியாக அரசியலில் அறிமுகமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரின் பெயர்கள் வெவ்வேறு காரணங்களால் கட்சிக்குள் பேசப்பட்ட வேளையில் அவர்கள் பிரச்சனைகளை தீர்ப்பதில் கனகஈஸ்வரன் பெரும் பங்காற்றியதாக அரசியல் விமர்சகர்களால் சுட்டிக் காட்டப்பட்டு வந்தது ஞாபகம் இருக்கிறது.








இக்குழுவில் இடம் பெற்றுள்ள மற்றைய சட்டத்தரணிகளும் சாதாரணமானவர்கள் அல்ல. அரசியலமைப்பு விவகார துறைசார் நிபுணர்களாகவும், சட்டக்கல்லூரி விரிவுரையாளர்களாகவும், பிரபல வழக்கறிஞர்களாகவும் பெயர் பெற்றவர்கள். எனவே ,வர்கள் முன்னெடுத்திருக்கும் முயற்சி குறிப்பிடத்தக்களவில் எடுத்த காரியத்தில் வெற்றியை பெற்றுக் கொடுக்குமென நம்பிக்கை கொள்ள இடமுண்டு.

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் சார்பில் தமிழரசு, தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய பேரவை, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆகியவற்றின் சார்பில் ஒவ்வொருவரும், கிழக்கு மாகாணத்திலிருந்து ஒருவருமாக அரசியல் கட்சிகள் சார்பில் இக்குழுவில் இடம் பெறுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் தேச அரசியலில் இரு துருவங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், எம்.ஏ.சுமந்திரனும் சட்டத்தரணிகளாக இருப்பதால் முறையே தமிழ்த் தேசிய பேரவை, தமிழரசு கட்சி ஆகியவை சார்பில் இக்குழுவில் இடம்பெறும் வாய்ப்பு உண்டு. கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெற இருப்பவர் தமிழரசு கட்சிக்காரராக இருப்பார் என்ற அறிவிப்பு சாணக்கியனை இக்குழுவுக்குள் சேர்த்துக் கொள்வதற்கான முயற்சியாக இருக்கலாமென அனுமானிக்கப்படுகிறது.

புதிய அரசியலமைப்பினூடாக சகலராலும் ஏற்கப்படும் இனப்பிரச்சனைக்கான தீர்வு காணப்படுமென்று ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தொடர்ந்து கூறி வருகிறார். அண்மையில் தம்மைச் சந்தித்த தமிழரசுக் கட்சி குழுவினரிடம் இதனையே ஜனாதிபதி அநுரகுமர திஸ்ஸநாயக்கவும் தெரிவித்திருந்தார். இதன் அடிப்படையிலேயே தமிழ்ச் சட்டத்தரணிகள் தம்மை ஒரு பேரவை ஆக்கி தமிழ்த் தேசிய கட்சிகளை இணைத்துக் கொண்டு புதிய அரசியலமைப்புக்கு தமிழர் தரப்பிலான பொது ஆவணத்தை வடிவமைக்க முன்வந்துள்ளனர் என்று கருதப்படுகிறது.

2009ல் முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழ்த் தேசிய அணிகளை ஒன்றாக இணைப்பதென்பது அசாத்தியமானதாகக் காணப்பட்டு வருகிறது. பல தடவைகள் பலர் இது தொடர்பாக மேற்கொண்ட முயற்சிகள் வேதாளத்தின் கதையாகப் போயிற்று. கதிரை ஆசை, பதவி மோகம், தேர்தல் வெற்றி போன்ற சுயகாரணிகள் இதற்குத் தடையாக இருந்து வந்துள்ளன. எனினும், இப்போது இம்முயற்சியை மேற்கொண்டிருப்பவர்கள் அக்கறையுள்ள சட்டத்தரணிகளாக காணப்படுவதால் ஒரு குறிப்பிட்ட எல்லை வரை குலையாது இவர்கள் செயற்படும் சாத்தியம் பெருமளவில் காணப்படுகிறது.

பிரச்சனைக்குரியவர்களான தமிழ்த் தேசிய கட்சிகளை இணைக்கும் முதற் கட்டம் வெற்றி பெற்றுள்ளது. அனைத்துக் கட்சிகளுமே சமக்ஷ்டியை ஏற்றுக் கொள்பவையாக தம்மை அடையாளம் காட்டியுள்ளன. எனினும், ஏக்கராஜ்ய இடையிடையே வந்து தலையைத் தூக்கி பிளவை ஏற்படுத்துகிறது. எதுவானாலும் தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை ஒரு கோட்டில் இவர்கள் அனைவரையும் இணைக்ககூடிய வல்லமை கொண்டவர்கள் என தமிழ் மக்கள் மத்தியில் அபிப்பிராயம் உள்ளது.

மறுபுறத்தில், ஜே.வி.பி.யும் அதன் இன்னொரு வடிவமான தேசிய மக்கள் சக்தியும் இனப்பிரச்சனை தீர்வு விடயத்திலும், புதிய அரசமைப்பு உருவாக்கத்திலும் எவ்வளவு தூரத்துக்கு அக்கறை உள்ளன என்ற கேள்வி உள்ளது.

புதிய அரசியலமைப்பு உருவாகும் வரை மாகாண சபை முறைமை இருக்குமென ரில்வின் சில்வா சில வாரங்களுக்கு முன்னர் கூறியிருந்தார். ஆனால் மாகாண சபைக்கு தேர்தல் நடைபெறுமென்று அவர் கூறவில்லை. அவர் கூறும் மாகாண சபை முறைமை என்பது தற்போதுள்ள ஆளுனர்கள் நிர்வாகத்தை என்பது அப்பட்டமாகத் தெரிகிறது. சில மாகாண ஆளுனர்கள் அரசியல்வாதிகள் போலவும், அமைச்சர்கள் போலவும் கருத்துரைத்து வருகின்றனர். தங்களை நியமித்த அரச நிர்வாகத்தின் பேச்சாளர்கள் போலவும் காணப்படுகின்றனர். இதனைத் தான் ரில்வின் சில்வா குறிப்பிட்டார் அல்லது விரும்புகிறார் என்று சொல்ல முடிகிறது.

**கட்டுரையாளர்:-**
**பனங்காட்டான்**

1971ம் ஆண்டு ஏப்ரல் மாதம் சேகுவேரா புரட்சி என்று ஜே.வி.பி.யினர் மேற் கொண்ட நடவடிக்கையின் நினைவு தினம் கடந்த ஐந்தாம் திகதி ஏப்ரல் வீரர் தின நினைவேந்தல் என வவுனியாவில் மேற்கொள்ளப்பட்டது. ,தில் உரையாற்றிய ரில்வின் சில்வா என்ன சொன்னார் என்பதை சற்று நோக்க வேண்டும். அது இவ்வாறு அமைந்திருந்தது: நாட்டை ஒரே நாளில் அபிவிருத்தி செய்ய முடியாது. சமுதாயத்தை மாற்றவும் முடியாது. இன்றைய அரசை உருவாக்கிய இலக்குகளை அடையும் வரை அதனைப் பாதுகாக்க வேண்டியது அவசியம்.

76 ஆண்டுகளாக நிலவி வரும் பழைய அமைப்பை மாற்றுவது எளிதான காரியம் அல்ல. சிங்கப்பூர், சீனா போன்ற நாடுகள் தங்களது மாற்றங்களை நிறைவேற்ற பத்து முதல் இருபத்தைந்து ஆண்டுகளை எடுத்துக் கொண்டன. முழு சமுதாயத்தையும் மாற்ற எமக்கும் பல ஆண்டுகள் தேவைப்படுகிறது. ஐந்து ஆண்டுகளுக்குள் இந்தப் பணிகளை முடிக்க முடியாது. எனவே நாம் இன்றைய அரசை உருவாக்கிய இலக்குகளை அடையும் வரை அதனைப் பாதுகாக்க வேண்டும்' என்பதே ரில்வின் சில்வாவின் உரையின் முக்கிய வரிகள்.

இன்றைய ஆட்சியில் பேச்சும் போக்கும் செயலும் ஒரு கட்சி ஆட்சியை நோக்கியே செல்வதாக ஓர் அச்சம் பரவலாகக் காணப்படுகிறது. தமிழர் தரப்பிலும் இந்தச் சந்தேகம் பகிரங்கமாக தெரிவிக்கப்பட்டு வருகிறது. தேசிய மக்கள் சக்தி அரசின் பின்னணியில் இயங்கும் ஜே.வி.பி. இவ்விடயத்தில் எந்த நிலைப்பாட்டில் இருக்கிறது என்பதை ரில்வின் சில்வாவின் உரைகள் ஒளிவு மறைவின்றி தெரியத் தருகிறது.

இதன் அர்த்தம் என்ன என்பதை அலசி ஆராய வேண்டியதில்லை. தமிழர் பிரச்சனை தீர்வு விடயத்தை முன்னெடுக்க உருவாகியிருக்கும் தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை இதனை கவனத்தில் கொண்டிருப்பார்கள் என நம்புவோம்.

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

11 ஏப்ரல் 2026 முதல் 17 ஏப்ரல் 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பாக்கியம் மயில்வாகனம்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் மாங்கொல்லை காங்கேசன்துறையை வதிவிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் மயில வாகனம் அவர்களுடைய மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 12 ஏப்ரல் 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பாக்கியம் மயில்வாகனம் அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி செல்லம்மா சுப்பிரமணியம்

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி செல்லம்மா சுப்பிரமணியம் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாள் 17 ஏப்ரல் 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி செல்லம்மா சுப்பிரமணியம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு செல்லத்தம்பி வரதராஜன்

புங்குடுதீவு 10ம் வட்டாரம் கண்ணகை அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பொன்னாந்தோட்டத்தை வதிவிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு செல்லத்தம்பி வரதராஜன் அவர்களுடைய 11வது ஆண்டு நினைவு நாள் 12 ஏப்ரல் 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றையதினம் அவரது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு செல்லத்தம்பி வரதராஜன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2ம் மாத நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி கந்தசாமி

அனலைதீவு 5ம் வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களது 2ம்மாத நினைவு நாள் 18 ஏப்ரல் 2026 சனிக்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி பரமேஸ்வரி கந்தசாமி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 27வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராசம்மா நன்னித்தம்பி

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவர்களின் 27வது ஆண்டு நினைவு நாள் 19 ஏப்ரல் 2026 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவரகளை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகம் இரத்தினவடிவேல்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம், தும்பலை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களின் ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 19 ஏப்ரல் 2026 ஞாயிற்றக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர் களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



09 ஏப்ரல் 2026 வியாழக்கிழமை யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி செல்வநாயகி சோமசுந்தரம் அவர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



10 ஏப்ரல் 2026 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



11 ஏப்ரல் 2026 சனிக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



12 ஏப்ரல் 2026 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரம் கண்ணகை அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பொன்னாந்தோட்டத்தை வதிவிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு செல்லத்தம்பி வரதராஜன் 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



12 ஏப்ரல் 2026 ஞாயிற்றுக்கிழமை குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் மாங்கொல்லை காங்கேசன்துறையை வதிவிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் மயில்வாகனம் அவர்களது 3வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



17 ஏப்ரல் 2026 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி செல்லம்மா சுப்பிரமணியம் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



# ஈழத்தமிழர்கள் அரசியல் ரீதியில் படித்த சமூகமா?

சில தினங்களுக்கு முன்னர் ஒரு இராஜதந்திரியுடன் உரையாடிக் கொண்டிருந்த போது அவர் சில கேள்விகளை கேட்டார். அந்தக் கேள்விகள் எனக்கானது அல்ல – மாறாக, சமஸ்டி பற்றியும் ஒரு நாடு இரு தேசம் பற்றியும் பேசிவரும் அரசியல்வாதிகளுக்கானது. தங்களிடம் எவரேனும் சமஸ்டி பற்றி அபிப்பிராயம் கேட்டால், அது சிறந்தது – அதனை நாங்கள் வரவேற்கின்றோம் என்று தான் நாங்கள் பொதுவாக கூறுவதுண்டு.

ஏனெனில் அது உண்மையிலேயே சிறந்தது தான். அதில் சந்தேகம் வேண்டியதில்லை. எனவே நீங்கள் சமஸ்டி பற்றி எங்களுடைய அபிப்பிராயத்தை கேட்பீர்களானால் எங்கள் பக்கத்திலிருந்து, எப்போதும் உங்களுக்கு சாதகமான பதிலே கிடைக்கும் ஆனால் நாங்கள் கூடவே ஒரு கேள்வியையும் கேட்போம்

அதாவது, சமஸ்டி நல்ல விடயம் ஆனால் அதனை எவ்வாறு அடையப் போகின்றீர்கள்? தமிழ் கட்சிகளின் தலைவர்கள் எங்களிடம் வருகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம், நாங்கள் இவ்வாறு தான் பதிலளிக்கின்றோம். இலங்கையில் சமஸ்டியை அடைவது என்றால் அது நாடாளுமன்ற பலத்தின் ஊடாகத் தான் அடைய முடியும்.

அவ்வாறான பலம் தமிழ் அரசியல்வாதிகளிடம் இருக்கின்றதா? தமிழ் அரசியல்வாதிகளால் எப்போதாவது அவ்வாறான நாடாளுமன்ற பலத்தை அடைய முடியுமா?

இந்த இரண்டு கேள்விகளுக்கும் எந்தவொரு தமிழ் அரசியல்வாதியிடமும் பதில் இல்லை – ஏனெனில் இதற்கு பதிலளிக்கவே முடியாது.

அந்த ராஜதந்திரி இவ்வாறு கூறிய போது சமாதான உடன்பாட்டு காலத்தில், ஒரு கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் கூறிய விடயம் எனது நினைவில் வந்தது. அதனையும் அவருடன் பகிர்ந்து கொண்டேன்.

அதனை ஒரு ஆங்கிலப் பத்திரிகையாளர் தான் என்னிடம் கூறினார். அதாவது, அவர் சொன்னாராம் நீங்கள் உலகத்திடம் வருகின்றபோது பற்றியும் வடக்கு கிழக்கு இணைப்பு பற்றியும், தமிழர் தாயகக் கோட்பாடு பற்றியும், திருகோணமலை ஈழத் தமிழரின் தலைநகரம் – இப்படியான கற்பனைகளை கூறும் போது, தமிழர்கள் கோபப்படவில்லை. உண்மையில் இவ்வாறான அரசியல் பாதகம் புரிவோரைக் கண்டால், அவர்கள் முகத்தில் காறி உமிழும் ஆவேசம் ஏற்பட வேண்டும் ஆனால் அவ்வாறான அரசியல் சீற்றத்தை எங்குமே காண முடியவில்லை.

இதற்கு இரண்டு காரணங்கள் தான் இருக்க முடியும்! ஒன்றில் ஈழத் தமிழர்களுக்கு அரசியலில் எவ்வித கரிசனையும் இல்லை அதாவது, ஒரு திரைப்படத்தை பார்த்து விட்டு சாதாரணமாக கடந்து செல்லும் உணர்வுடன் தான் அரசியலையும் புரிந்து கொள்கின்றனர் அல்லது, அரசியல் ரீதியில் ஈழத் தமிழ் சமூகம் ஒரு படிப்பறிவற்ற சமூகமாக இருக்க வேண்டும் – அதாவது, தமிழரின் படிப்பு என்பது அவர்களின் விருப்பமும், அவர்களுடைய அழைப்பில் ஒன்றுகூடும் தமிழ் அரசில்வாதிகளின் விருப்பங்களும் பிரச்சினைக்குரியது அல்ல – மாறாக சிறந்தது, ஆனால் அதனை எவ்வாறு சாத்தியப்படுத்துவது? எந்தவொரு தீர்வு பற்றியும் கலந்தோசிக்கலாம் – அதனை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கலாம் ஆனால் அதனை ஏன் அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும் – அதற்கான நிர்பந்தம் என்ன? அரசாங்கத்தை நிர்பந்திப்பதற்கான ஆற்றல் தமிழ் அரசியல்வாதிகளிடம் இருக்கின்றதா? அவ்வாறான ஆற்றலை தமிழ் அரசியல்வாதிகளால் பெறத்தான் முடியுமா? இவை எவற்றுக்கும் இல்லை என்னும் பதிலைத் தவிர வேறு சிறந்த பதில் இல்லை.

அரசியல் தீர்வு தொடர்பில் சிந்திக்க முற்படும் படித்த சமூகத்தினர் என்போர் அரசியலை ஆழமாக உற்று நோக்க முயற்சிக்க வேண்டும். இது ஒன்றும் அணுகுண்டு தொழில் நுட்பம் அல்ல – நமது வீறாப்பை, ரும் ஒரு விடயம் அப்படியே இருக்கின்றது – அது தான் மாகாணசபை. அரசியலமைப்பின் பதின்மூன்றில் உள்ளவற்றில் எதனை, எவ்வாறு அமுல்படுத்துவது என்பதில் முரண்பாடுகள் இப்போதும் இருகின்றன.


கட்டுரையாளர்:-

தாயகத்தில் இருந்து

– யசீந்திரா –




அது இனியும் தொடரலாம் ஆனால் 38 ஆண்டுகளுக்கு பின்னரும் இப்போதும் அதனைத் தாண்டிய ஒன்றைப் பற்றி தென்னிலங்கையிடம் பதில் இல்லை. அது தோல்வியடைந்தது என்று சிலர் கூறலாம் –

அதே போன்று அதில் போதாமையுள்ளது என்று இன்னொரு தரப்பு கூறலாம் ஆனால் அவ்வாறு கூறுபவர்களிடம் அதனைத் தாண்டிச் செல்லுவதற்கான தெரிவுகள் இல்லை. அவ்வாறாயின் ஈழத் தமிழர்கள் மத்தி



மத்தியதரவர்க்க வாழ்க்கைக்கானது மட்டும் தான்? உதாரணமாக ஒரு

வைத்தியராக வருவது – பொறியலாளராக வருவது – சட்டத்தரணியாக வருவது என்னுமளவிற்குத் தான் தமிழ்சமூகம் என்பது ஒரு

சட்டச் செருக்கை புறமொதுக்கி, சற்று சிந்திக்க முயற்சிப்பதன் மூலம், இலகுவாக புரிந்து கொள்ள முடியும். வரலாற்றில், இலங்கை தமிழரசு கட்சி சமஸ்டிக்கு முயற்சித்தது, விளைவு தோல்வி. அதன் பின்னர் தனிநாடு என்றது விளைவு தோல்வி. ஆயுத

யில் அரசியலை படிக்க முயற்சிப்பவர்கள் எது பற்றி சிந்திக்க வேண்டும்? எதனடிப்படையில் தமிழ் கட்சிகள் மத்தியில் உடன்பாட்டை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்?

இலங்கையின் அரசியல் நிலைமையை பொறுத்தவரையில், சமஸ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை அடைய வேண்டுமாயின், அதற்கு ஒரேயொரு வாய்ப்புத் தான் உண்டு –

அதாவது இந்த நாட்டின் பெரும்பான்மையான சிங்கள மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் சமூகம் இணங்கினால் மட்டும் தான், அது சாத்தியப்படும் ஆனால், அந்த அதிசயம் இலங்கைத்தீவில் நிகழும் என்று நம்பினால், அது முயலில் கொம்பு கிடைக்குமென்று நம்புவதற்கு ஒப்பானது. அது ஒரு போதும் நடக்காது. அவ்வாறாயின் தமிழ் அரசியல்வாதிகளும், புத்திஜீவிகள் என்போரும், சிவில் சமூகத்தினரும், கருத்துருவாக்கிகளும் (அனைவரும் அல்லர்) எந்த அடிப்படையில் சமஸ்டி பற்றி பேசி வருகின்றனர்? இந்த இடத்தில்தான் தமிழர்கள் படித்த சமூகம் என்பதையும் தாண்டி, அரசியலை

படித்த சமூகமா என்னும் கேள்வி எழுகின்றது. அரசியலை படித்த ஒரு சமூகம் எப்படியானதாக இருக்கும் – இருக்க வேண்டும்? அந்த சமூகம், தனது கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொள்ள முயற்சிக்கும், தன்னை புதுப்பித்துக் கொள்ள முயற்சிக்கும், வெறும் கற்பனைகளுக்குள் தன்னை புதைத்துக் கொள்ளாது. யுத்தத்தின் முடிவும் அதன் பின்னரான கடந்த பதினேழு ஆண்டு கால அரசியல் அனுபவங்களையும் தொகுத்துப் பார்த்தால், ஈழத் தமிழர் சமூகம் அரசியல் ரீதியில், ஒரு படித்த சமூகம் என்பதற்கான சான்றுகளை, பெரியளவில் காண முடியவில்லை.

முழக்கங்களோடு வரக் கூடாது. யதார்த்தபூர்வமான வாதங்களுடனும், சாத்தியமான விடயங்களுடனும் வர வேண்டும்.

1976ல் வட்டுக்கோட்டையில் தீர்மானம் நிறைவேற்றினோம், 1977ல் மக்கள் ஆணை பெற்றோம் – இவ்வாறான கதைகளை கேட்க முடியும் ஆனால் அதனை ஒரு விடயமாக எடுத்துக் கொள்ள முடியாது. எப்போதும் ஒன்றைப் பெற்றுக் கொண்டு அதிலிருந்து தான் முன்னேறுவது தொடர்பில் சிந்திக்க வேண்டும். அவ்வாறில்லாது நீங்கள் ஒன்றை நினைத்துக் கொண்டு அதனை மற்றவர்கள் பெற்றுத் தர வேண்டும் என்றால், அது ஒரு போதும் நடக்ககூடிய ஒன்றல்ல எனவே முதலில் ஒன்றை பெற்றுக் கொள்ளுங்கள் – அது எவ்வளவு குறைவானதாக இருந்தாலும் கூட.

அந்த ராஜதந்திரி கூறிய விடயங்கள் தொடர்பில் இந்தக் கட்டுரையாளர் பல்வேறு சந்தர்ப்பங்களில் பதிவு செய்திருக்கின்றார். அதே போன்றுஇன்னும் சிலரும் பதிவு செய்திருக்கின்றனர். ஆனாலும் தமிழ் சமூகத்தின் மத்தியில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியளவிற்கு விழிப்புணர்வு ஏற்படவில்லை. இப்போதும் கூட சமஸ்டி

படித்த சமூகமாக இருக்கின்றது.

இந்தக் கட்டுரை பற்றி யோசித்துக் கொண்டிருந்த போது, ஒரு செய்தியை பார்க்க முடிந்தது. அதாவது, மீண்டும் மண்குதிரையில் ஆற்றைக் கடப்பதற்கான முயற்சி பற்றி ஆலோசிக்கப்படுகின்றதாம்.

இனப்பிரச்சினையில் தனித்து செயற்படுவதில்லை என்னும் அடிப்படையில், சமஸ்டி அரசமைப்புக்கான சமூக ஒப்பந்தம் ஒன்றை தயாரிப் பது தான் இந்த முயற்சியின் நோக்கமாகக் கூறப்படுகின்றது. இவ்வாறான முயற்சியை மேற்கொள்பவர்கள் அனைவருமே கொழும்பு சட்டத்தரணிகள் என்பது தான் இதிலுள்ள வேடிக்கை. இந்த இடத்தில் தான் ஒரு படித்த சமூகத்திற்கும் அரசியலை படித்த சமூகத்திற்கும் இடையிலுள்ள வேறுபாட்டை ஒருவர் புரிந்து கொள்வது இலகுவானது. இவ்வாறான முயற்சியில் ஈடுபடுவர்கள் அனைவருமே படித்தவர்கள் என்பதில் இரு வேறு கருத்துக்கள் இல்லை ஆனால் அவர்கள் அரசியலை படித்தவர்களா? ஆகக் குறைந்தது அவர்கள் அரசியலை படிக்கவும் முயற்சிப்பதாகத் தெரியவில்லை.

இவ்வாறான சட்டத்தரணிகளின்

பலத்தின் மூலம் தமிழ் மக்களுக்கான விடுதலையை அடைய முடியும் என்று தமிழ் இயக்கங்கள் முழக்கமிட்டன – விளைவு தோல்வி.

தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கம் தனி நாட்டுக்காக தனித்து யுத்தம் செய் தது. விளைவு தோல்வி. இந்தக் காலத்தில் பல சந்திப்புக்கள், திரைக்கு முன்னும், திரைக்கு பின்னும் இடம் பெற்றது ஆனால் எதுவும் சாதகமான விளைவுகளைத் தரவில்லை. இந்தக் காலகட்டத்தில் எத்தனையோ சட்ட நிபுனர்களை தமிழ் சமூகம் கண்டிருக்கின்றது. எத்தனையோ புரட்சியாளர்களை கண்டு விட்டது? தியாகங்களை கண்டு விட்டது? அர்பணிப்புக்களை கண்டு விட்டது. ஒரு சிறிய இனம் அதன் ஆற்றலுக்கும் வளத்திற்கும் அதிகமாகவே இழந்துவிட்டது. இத்தனை விடயங்களால் நடக்காத ஒன்றையா நீங்கள் நடத்திக் காண்பிக்கப் போகின்றீர்கள்? நீங்கள் சாதாரணமாக ஒருசிலர் கூடி மேற் கொள்ளும் தீர்மானங்களால் மாற்றங்கள் நிகழும் என்பதை உங்களால் கூட நம்ப முடியாத போது, அதனை மக்கள் நம்ப வேண்டும் என்று எண்ணுவது எவ்வளவு மோசமானதொரு செயல். ஆனால் யுத்தத்தின் போதும் யுத்தத் திற்கு பின்ன

# அமெரிக்காவின் மௌனம்!

மத்தள விமான நிலையத்தில் இரண்டு போர் விமானங்களை தரையிறக்குவதற்கு,அமெரிக்கா விடுத்த கோரிக்கையை தாம் நிராகரித்ததாக, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, கடந்த 20ஆம் திகதி பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தார்.

இதனை அவர் பாராளுமன்றத்தில் கூறிய போது, அதனை பக்குவமற்ற கருத்தாகவே இராஜதந்திர வட்டாரங்கள் நோக்கின. அவசரப்பட்டு இதனை வெளிப்படுத்தியிருக்கிறார் என பலரும் கருத்து வெளியிட்டிருந்தனர். ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, தற்செயலாக அதனை வெளியிடவில்லை.

அவர் பாராளுமன்றத்தில் எழுதி வைத்து உரையாற்றாத போதும், அமெரிக்க விமானங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது தொடர்பாக விபரங்களை வெளியிட்ட போது ஏற்கனவே தான் கொண்டு வந்திருந்த கடதாசிகளை எடுத்துப் பார்த்து உறுதிப்படுத்திக் கொண்டிருந்தார். எனவே அவர், முன்கூட்டியே அதனை பகிரங்கப்படுத்த தீர்மானித்திருக்கிறார் என்பது தெளிவு.

நடுநிலையாக தமது அரசாங்கம் செயற்படுகிறது என்பதை வெளிப்படுத்துவதற்காக- இதனை வெளிப்படுத்த முற்பட்டு, இக்கட்டில் மாட்டிக் கொண்டிருக்கிறார் ஜனாதிபதி.

அமெரிக்க போர் விமானங்களுக்கு இலங்கை அனுமதி மறுத்தது தொடர்பாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்திடம் கேள்வி எழுப்பிய ஊடகவியலாளர்களுக்கு எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

ஒப்பரேஷன் எபிக் பியூரி' தொடர்பான எந்த ஒரு கேள்விக்கும் அமெரிக்கப் பாதுகாப்பு திணைக்களமே பதிலளிக்க வேண்டும் என, கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரி ஒருவர் ஆங்கில ஊடகம் ஒன்றிடம் கூறியிருக்கிறார். இது சார்ந்த விடயம் பற்றி அமெரிக்கா பேச விரும்பவில்லை என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

கொழும்பில் உள்ள தூதரகத்துக்குத் தெரியாமல், இலங்கை அரசாங்கத்திடம் விமானங்களைத் தரையிறக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதற்கு வாய்ப்பில்லை. இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகரின் ஊடாகவே, அமெரிக்கா இந்த கோரிக்கையை விடுத்திருக்கும். அவசர சூழ்நிலைகளில் வேண்டுமானால் நேரடியாக கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கலாம். ஆனால், அவ்வாறான ஒரு சூழலில் இந்த கோரிக்கை விடுக்கப்படவில்லை.

இது முன்கூட்டியே விடுக்கப்பட்ட கோரிக்கை என்பதால், கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் ஊடாகவே, வெளிவிவகார அமைச்சுக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கும்.

அப்படியிருக்க, இது பற்றிய தகவல்களைப் பற்றிப் பேச கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மறுக்கிறது என்றால், இந்த விடயத்தைப் பற்றி பேசுவதை விரும்பவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. அதைவிட, இலங்கை அரசாங்கத்தின் முடிவு அமெரிக்காவுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கும். எந்தவொரு நாட்டுக்கும் இத்தகைய பதில் அதிருப்தியை கொடுக்கும்.

அதிலும் அமெரிக்காவுக்கு இப்படியொரு பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால், அது எத்தகைய உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் என்பதை புரிந்து கொள்வது கடினமல்ல. அதுவும், தெற்கு மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் சிறப்பு தூதுவர் செர்ஜியோ கோர் இலங்கையில் இருந்தபோதே, இந்த தகவலை ஜனாதிபதி பாராளுமன்றத்தில் வெளியிட்டிருந்தார்.

அவர் இதனை பாராளுமன்றத்தில் வெளிப்படுத்துவதற்கு முதல் நாள், செர்ஜியோ கோரை சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார்.



அப்போது விமானங்களை தரையிறக்க அனுமதி மறுக்கப்பட்டது பற்றி பேச்சுக்கள் எழுந்திருக்கலாம்.அதனை கண்டு கொள்ளாதது போல அரசாங்கம் நகர்ந்து சென்றிருக்க வேண்டும்.

மாறாக தாங்கள் நடுநிலையாக செயல்படுகிறோம் என்று நிரூபிப்பதற்காக முற்பட்டு, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அரசாங்கத்தை இக்கட்டான நிலைக்குத் தள்ளியிருக்கிறார்.

கொழும்பு வந்திருந்த அமெரிக்காவின் சிறப்பு தூதுவர் செர்ஜியோ கோரிடம் ஒரு முக்கியமான கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் ஆகியோரால் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளை வாங்குவதற்கு அனுமதிக்க வேண்டும் என்பதே அந்தக் கோரிக்கை. ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளை வாங்குவதற்கு அமெரிக்கா விதித்த தடையை, ஒரு மாதத்திற்கு தளர்த்தியது. தற்காலிகமாக நீக்கப்பட்ட அந்த தடை ஏப்ரல் 11ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்தது.

இந்த பத்தி எழுதப்படும் வரை, இந்த தளர்வு நீடிக்கப்பட்டதா என்ற தகவல் வெளியிடப்படவில்லை. இந்த ஒரு மாத கால அவகாசத்துக்குள், ரஷ்யாவிடமிருந்து எரிபொருளை பெற்றுக் கொள்வது தொடர்பாக தீர்மானம் ஒன்றுக்கு வருவதற்கு இலங்கையால் முடியவில்லை.

ஒரு மாத காலக்கெடுவுக்குள் இது சாத்தியமற்றது என்பதை தெரிந்து கொண்டே, செர்ஜியோ கோரிடம் அரசாங்கம் அந்த கோரிக்கையை விடுத்தது. அந்த கோரிக்கை குறித்து வொஷிங்டனுடன் கலந்துரையாடிய பின்னர், முடிவை அறிவிப்பதாக அவர் உறுதியளித்திருந்தார்.

ஆனால் இரண்டு மூன்று வாரங்களாகியும் அமெரிக்க தரப்பில் இருந்து எந்த பதிலும் வழங்கப்படவில்லை. இப்போது, ரஷ்யாவிடம் இருந்தோ அல்லது ஈரானிடம் இருந்தோ எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு அமெரிக்காவிடம் அனுமதி பெற வேண்டிய கட்டாயம் இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கைக்கு மாத்திரமன்றி இன்னும் பல நாடுகளுக்கு இந்த சிக்கல் காணப்படுகிறது. இதனை மீறி எண்ணெயை பெற்றுக் கொள்ள முடியாததால், அமெரிக்காவின் தயவை நம்பியிருக்க வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஈரான் மீதான தாக்குதல்களுக்கு இலங்கை கண்டனம் தெரிவிக்காமல் இருந்தமைக்கும், அமெரிக்காவை பகைத்துக் கொள்ளாமல் இருப்பதே முக்கியம் என்ற முன்னெச்சரிக்கையே காரணம். அமெரிக்காவின் ஆதரவைத் தக்க வைத்துக் கொள்வது இலங்கைக்கு முக்கியமான தேவையாக உள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பிக் கொள்வதற்கும், அமெரிக்காவுக்கான ஏற்றுமதியை தக்க வைத்துக் கொள்வதற்கும், அமெரிக்காவின் அழுத்தங்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கும், இது முக்கியமான தேவையாகும். உலகிலுள்ள இடதுசாரி அரசுகளின் மீது, ட்ரம்ப்பின் வலதுசாரி அரசாங்கம், கொடுக்கின்ற அழுத்தங்கள் அல்லது நடவடிக்கைகள் ஜே.வி.பி. அரசாங்கத்துக்கும் கூட வயிற்றில் புளியை கரைப்பதாகவே உள்ளது. வெனிசுவேலாவின் மீது கை வைத்த அமெரிக்கா அடுத்து கியூபாவின் மீது நடவடிக்கை எடுக்கப் போவதாக மிரட்டுகிறது. இவ்வாறான நிலையில், இலங்கையில் ஆட்சியிலுள்ள இடதுசாரி அரசாங்கம், அமெரிக்காவை பகைத்துக் கொள்வது பெரும் சிக்கலை உருவாக்கும் என அஞ்சுவது ஆச்சரியமில்லை.


அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு, அமெரிக்காவின் தேவைகளை நிறைவேற்றி, அதனுடன் இணைந்து செயற்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதே புத்திசாலித்தனமானது என அநுரகுமார அரசாங்கம் கருதுகிறது. எனவே தான் அமெரிக்காவுடன் பகைமையை ஏற்படுத்தாத வகையில், அரசாங்கம் செயற்பட்டு வந்தது.

ஆனால், அமெரிக்க போர் விமானங்களை நிறுத்த அனுமதி மறுத்ததாக பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தப்பட்ட தகவல், அமெரிக்காவுக்கு நிச்சயம் சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கும். பல நேட்டோ நாடுகளே அமெரிக்காவைக் கைவிட்டு விட்ட நிலையில் இலங்கை மறுத்தது பொருட்டான விடயம் அல்ல.

ஆனால், சின்னஞ்சிறிய நாடான இலங்கை அனுமதி மறுத்ததானது, சக்தி வாய்ந்த நாடுகளுக்கு உந்துதலாக அமைந்து விடும் என்ற சிக்கலும் அமெரிக்காவுக்கு இருக்கிறது. உலகத்தையே ஆட்டி படைக்கின்ற தனக்கு அனுமதி மறுத்த நாடுகளை ட்ரம்ப் எவ்வாறு உதாசீனம் செய்கிறார் என்பது தெரிந்தே விடயம் தான்.

இத்தாலி, ஸ்பெய்ன் போன்ற நாடுகளை மாத்திரமன்றி, தனது நேட்டோ கூட்டாளிகளைக் கூட, ஈரான் மீதான தாக்குதலுக்கு ஒத்துழைக்கவில்லை என்பதால் மிகக் கேவலமாக பதிவிட்டிருந்தார். இலங்கை விடயத்தில் அமெரிக்கா அவ்வாறு நடந்து கொள்ளவில்லை.

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



போர் விமானங்களை தரையிறக்க அனுமதி மறுத்ததற்காக, இலங்கையுடன் அமெரிக்கா மல்லுக் கட்டவில்லை. இது கவனிக்கப்பட வேண்டிய விடயம். ஏன் அவ்வாறு அமெரிக்கா அமைதியாக இருக்கிறது என்பது யாருக்கும் தெரியாது. ஆனால், இந்த அமைதி நிச்சயமாக இலங்கையின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டதற்கான அறிகுறியாகத் தென்படவில்லை.

இலங்கையின் நிலைப்பாட்டை அது ஏற்றுக் கொண்டிருந்தால், ரஷ்யாவின் எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கு காலநீடிப்பை வழங்கியிருக்கக் கூடும்.

இலங்கை அமெரிக்காவுக்கு முக்கியமான ஒரு கேந்திரம். மூலோபாய ரீதியாக, பூகோள அரசியல் ரீதியாக இலங்கையின் அமைவிடம் அமெரிக்காவுக்கு மாத்திரமல்ல, பல நாடுகளுக்கு முக்கியமானது.

இலங்கையில் நிலை கொள்வதற்கு அப்பால், அதனை தம் செல்வாக்கிற்குட்பட்ட ஒன்றாக மாற்றிக் கொள்வதற்கு, முக்கியத்துவம் செலுத்துகின்றன. அமெரிக்காவும் அவ்வாறே செயல்படுகிறது.

இவ்வாறான நிலையில், அமெரிக்கா இலங்கையை கையாளுவது தொடர்பாக தீர்க்கமான நிலைப்பாடு ஒன்றுக்கு வரவில்லை அதனால் தான், ரஷ்ய எரிபொருள் இறக்குமதிக்கான அனுமதியை வழங்குவதற்கு, அது இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், அமெரிக்கா இந்த அனுமதியை உடனடியாக வழங்கும் என எதிர்பார்ப்பதற்கில்லை.

அது இலங்கையை தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவே விரும்புகிறது. தனது விருப்பத்தை நிறைவேற்ற தயாரில்லாத இலங்கையை, அது எப்படி கையாளுவது என்று உடனடியாக வெளிப்படுத்தாமல் இருக்கவே முற்படுகிறது. அதனால் தான் இந்த விவகாரத்தில் அமெரிக்க தூதரகம் வெளிப்படையாக கருத்து தெரிவிப்பதையும் தவிர்க்கிறது.

இது இலங்கையை எப்போதும் பதற்றத்துக்குள் வைத்திருக்கும் ஒரு உத்தி. இந்த பதற்றம் தணிந்து போனால் அமெரிக்காவின் மீதான பயமும் இல்லாமல் போய்விடும்.

அவ்வாறான நிலை ஏற்படுவதை ஒருபோதும் அமெரிக்கா விரும்பாது என்பதால், ரஷ்யாவின் எண்ணெயை இறக்குமதி செய்வது தொடர்பாக அமெரிக்கா உடனடியாக பதில் எதையும் வழங்கும் வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

# சட்டத்தரணிகள் சங்கத்தின் ஒருங்கிணைப்பு முயற்சிகளும் ஒரு சமூக உடன்படிக்கைக்கான வாய்ப்புகளும்!

சட்டத்தரணிகள் சங்கம் தமிழ்க் கட்சிகளை ஒருங்கிணைக்கும் வேலைகளில் முனைப்பாக இருக்கிறது என்று தெரிகிறது. அது தொடர்பான இரண்டாவது சந்திப்பு அண்மையில் கொழும்பில் இடம் பெற்றது. மூத்த சட்டத்தரணிகள் இந்த விடயத்தில் ஆர்வமாக இருப்பதாகத் தெரிகிறது. கடந்த சந்திப்பின் போது மணிவண்ணன் அணியைச் சேர்ந்தவர்கள் அழைக்கப்பட்டு இருந்தார்கள். சட்டத்தரணிகளின் அமைப்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு நெருக்கமானது என்று ஓர் அபிப்பிராயம் இருந்தது. எனினும்.அண்மையில் நடந்த சந்திப்பில் மணிவண்ணன் அணி அழைக்கப்பட்டமையானது சட்டத்தரணிகள் சங்கத்தின் நடுநிலைத் தன்மையை உறுதிப்படுத்தக் கூடியது.




நல்ல விஷயம். தொடர்ந்து செய்யட்டும். ஒரு புதிய யாப்பை நோக்கி தமிழ் தரப்பு முன்மொழிவை ஒரே ஆவணமாக முன் வைப்பது என்ற அடிப்படையில் சட்டத்தரணிகள் சிந்திப்பது நல்லது. ஒரு புதிய யாப்பை நோக்கி பொதுவான தமிழ் முன்னொளிவை வைப்பதற்கான இந்த ஒருங்கிணைப்பை சட்டத்தரணிகளே முன்னெடுப்பது தொழிற்சார் திறன்களின் அடிப்படையிலும் பொருத்தமானது.ஏனென்றால் யாப்பு உருவாக்கம் என்பது இறுதியிலும் இறுதியாக சட்டப் பரிமாணத்தைக் கொண்டு ஒன்று தான்.

அதேசமயம் இங்கு இரண்டு பிரதானமான விடயங்களை சுட்டிக் காட்ட வேண்டும். முதலாவது, ஒரு புதிய யாப்பைக் கொண்டு வரும் நிகழ்ச்சி நிரல் ஏதும் அரசாங்கத்திடம் உண்டா என்பது. இரண்டாவது யாப்புருவாக்கம் எனப்படுவது ஒரு சமாதான முன்னெடுப்பின் கடைசிக் கட்டம் தான். தொடக்கம் எதுவென்றால், சம்பந்தப்பட்ட மக்கள் கூட்டங்களுக்கு இடையிலான ஒரு புதிய சமூக உடன்படிக்கை ஆகும். சட்டத்தரணிகள் சங்கம் அது தொடர்பாக எனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

இந்த அரசாங்கம் ஒரு புதிய யாப்பை கொண்டு வருமா இல்லையா என்பது. இந்த அரசாங்கம் எதிர்பாராமல் இரண்டு சோதனைகளை எதிர் கொள்ள வேண்டி வந்தது. ஒன்று புயல். மற்றது மேற்காசியப் போர். இரண்டிலிருந்தும் தன்னை மீட்டுக் கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்த வேண்டிய பொறுப்பு இந்த அரசாங்கத்துக்கு உண்டு. மேலும், அடுத்தடுத்த தேர்தல்களிலும் வெற்றி பெற வேண்டும். ஆட்சி செய்ய வேண்டும் என்று அரசாங்கம் சிந்திக்குமாய் இருந்தால் இதுதான் அதனுடைய முதலாவது ஆட்சிக் காலம் என்ற அடிப்படையில், இந்த முதலாவது ஆட்சி காலத்தில் ஒரு யாப்புருவாக்க முயற்சியில் ஈடுபட அரசாங்கம் தயாராக இருக்குமா?

ஒரு புதிய யாப்பு ஏன் தேவை? முதலாவது முதன்மைக் காரணம், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு. இரண்டாவது காரணம், இப்போது இருக்கும் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை நீக்குவது.

ஜேவிபியும் உட்பட தேசிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான மக்கள் அமைப்புகள் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டும் என்று கடந்த பல தசாப்தங்களாக கேட்டு வந்தவை. ஆனால் தேசிய மக்கள் சக்தியின் இதுவரையிலுமான ஆட்சிக் காலத்தை வைத்துச் சிந்தித்தால், அவர்கள் ஜனாதிபதி முறைமையை ஒழிப்பார்கள் என்று நம்பத் தக்கதாக இல்லை.

தேசிய மக்கள் சக்தி மட்டுமல்ல, இதற்கு முன்பு ஜனாதிபதி தேர்தலில் தங்களை லிபரல்களாகக் காட்டிக கொண்ட சந்திரிகாவைப் போன்ற பலரும் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை ஒழிக்கப் போவதாக மக்களுக்கு வாக்குறுதி வழங்கியிருக்கிறார்கள். ஆனால் பதவிக்கு வந்ததும் அவர்கள் சிம்மாசனத்திலேயே ஒட்டிக் கொண்டு இருந்து விட்டார்கள். அந்தச் சிம்மாசனத்தை அகற்ற வேண்டும் என்ற அவர்களுடைய வாக்குறுதியை மறந்து விட்டார்கள். மாற்றத்தை வாக்களித்து ஆட்சிக்கு வந்த ஜேவிபி இந்த மாற்றத்தைச் செய்யுமா?

அவ்வாறு யாப்பை மாற்றும் போது அங்கே இனப்பிரச்சினைக்கான தீர்வையும் இணைக்க வேண்டும். அதாவது இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண வேண்டும். தனது முதலாவது ஆட்சிக் காலத்தில் அதைச் செய்து .பின்வரக்கூடிய ஏனைய ஆட்சிக் காலங்களை இழுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்குமா?

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்று சொன்னால் ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல சம்பந்தப்பட்ட இனங்களுக்கு இடையே ஒரு சமூக உடன்படிக்கை அதாவது சமாதான உடன்படிக்கை எழுதப்பட வேண்டும். சட்டத்தரணிகள் சங்கத்தின் அறிக்கையில் அவ்வாறு கூறப்பட்டுள்ளது. ஏற்கனவே தமிழ் மக்கள் பேரவையின் முன்மொழிவிலும் அவ்வாறு கூறப்பட்டுள்ளது. அயர்லாந்தில் எழுதப்பட்ட பெரிய வெள்ளி உடன்படிக்கை அங்கே முன்னுதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது.

இப்பொழுது கேள்வி என்னவென்றால் அப்படி ஒரு சமூக ஒப்பந்தத்தை எழுதத் தேவையான அரசியல் சூழல் உண்டா ? என்பதுதான்.

ஒரு சமாதான உடன்படிக்கை எப்பொழுது உருவாக்கப்படும்? பிணக்குக்கு உள்ளாகிய அல்லது மோதலில் ஈடுபடுகின்ற தரப்புகளுக்கு இடையே அரசியல் வலுச் சமநிலை மாறும் போது அந்த புதிய வலுச் சமநிலையைப் பிரதிபலிக்கும் உடன்படிக்கையாக சமாதான உடன்படிக்கைகள் அமைவதுண்டு. அவ்வாறாயின் இப்போதுள்ள இனங்களுக்கு இடையிலான வலுச் சமநிலை தமிழ் மக்களுக்குச் சாதகமானதா?

இல்லை. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் உள்ளதில் பெரிய கட்சியாக தமிழரசுக் கட்சிக்கு கிடைத்த அதே அளவு ஆசனங்கள்தான் அரசாங்கத்துக்கும் கிடைத்திருக்கின்றன. தமிழ்த் தரப்பு நாடாளுமன்றத்தில் ஒரு பலமான தரப்பாக இல்லை. கட்சி நிலவரங்களை எடுத்துப் பார்த்தாலும் தமிழ்த் தரப்பு தன்னளவிலும் பலமான ஒரு திரட்சியாக இல்லை. இந்நிலையில் எந்தப் பலத்தின் அடிப்படையில்.எந்த வலுச் சமநிலையின் மீது, ஒரு சமாதான உடன்படிக்கையை எழுதுவது?

2009இல் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த போது உருவாகிய வலுச்ச்சமநிலையானது தமிழ் மக்களுக்குப் பாதகமானது, எதிரானது. அங்கே தமிழ் மக்கள் தோற்கடிக்கப்பட்ட தரப்பாக இருந்தார்கள். ராஜபக்சக்கள் யுத்த வெற்றிவாதத்திற்குத் தலைமை தாங்கினார்கள்.

அடுத்த கட்டமாக 2015 இல் ஏற்பட்ட ரெஜிம் சேஞ்ச் இதில் தமிழ்த் தரப்பு அந்த ஆட்சி மாற்றத்தின் பங்காளியாக இருந்தது. போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்ட தரப்பு என்ற நிலையில் இருந்து ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தத் தேவையான ஒரு தவிர்க்கப்பட வியலாத தரப்பு என்ற பேர வாய்ப்பு அப்பொழுது தமிழ் மக்களுக்குக் கிடைத்தது.


தோல்வியை ஏற்றுக் கொள்ளாத தாயகமும் புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்பும் அதற்கு முக்கிய காரணம். அதேயளவு முக்கிய காரணம், ராஜபக்சக்களின் சீனச் சாய்வு.எனவே பிராந்தியத்தில் சீனப் படர்ச்சியைத் தடுப்பதற்கு இந்தியாவுக்கும் மேற்கு நாடுகளுக்கும் ஆட்சி மாற்றம் தேவைப்பட்டது. அதற்குத் தமிழ் மக்களை அரவணைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால் தமிழ் மக்களின் பேரம் உயர்ந்தது. அதன் விளைவாக ஏற்பட்ட புதிய வலுச் சமநிலையின் விளைவு தான் நிலைமாறு கால நீதிக்கான ஐநா தீர்மானம் ஆகும்.

ஆனால் 2018ஆம் ஆண்டு மைத்திரி பால சிறிசேன அந்த வலுச் சமநிலையைக் குழப்பினார். அதன்பின் நடந்த தேர்தல்களில் ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தார்கள். எனினும் ராஜபக்சங்களுக்கு பெரிய வெற்றியை அள்ளிக் கொடுத்த அதே சிங்கள மக்கள் தன்னெழுச்சிப் போராட்டங்களின்போது ராஜபக்சக்களை மீண்டும் தோற்கடித்தார்கள். ஆட்சியிலிருந்து துரத்தினார்கள். தன்னெழுச்சிப் போராட்டங்களின் விளைவாக நாட்டின் வலுச் சமனிலை மாறியது. இப்புதிய வலுச் சமநிலையின் விளைவாகவே தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்திருக்கிறது. இங்கு கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் என்னவென்றால், இந்தப் புதிய வலுச் சமில்லை மாற்றத்தில் தமிழ் மக்கள் பங்காளிகள் இல்லை என்பதுதான்.

இப்புதிய வலுச் சமநிலையின் மீது ஒரு புதிய உடன்படிக்கையை எழுதப் போனால் அங்கே தமிழ் மக்களின் பேரம் எப்படி இருக்கும்? தமிழ்த் தரப்பில் உள்ள பெரிய கட்சிக்கும் அரசாங்கத்துக்கும் தமிழ்ப் பகுதிகளில் ஒரே அளவு ஆசனம் கிடைத்திருக்கிறது. அதனால் தமிழ்த் தேசியக் கட்சிகள் மட்டும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. தேசிய மக்கள் சக்தியும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்று அரசாங்கம் கூறும். இந்த வாதத்தின் அடிப்படையில் சிந்தித்தால்.தமிழ் மக்களின் பேரம் அதிகரித்து இருக்கிறதா? குறைந்து இருக்கிறதா? இப்புதிய



வலுச் சமநிலையின் மீது ஒரு சமூக உடன்படிக்கையை எழுதப் போனால் என்ன நடக்கும்? தமிழ்த் தரப்பிடம் இதுதொடர்பான ஆழமான உரையாடல்கள் உண்டா?




# போரில் முடியாத ஒரு போர்ப்படம்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



யாழ்ப்பாணம் கார்கில் சதுக்கத்தில் ரீகல் தியட்டரில் நீளிரா பார்த்தோம். அங்கு வந்திருந்த நடுத்தர வயதைக் கடந்த ஓர் ஆசிரியரிடம் கேட்டேன் எப்படி இருக்கிறது? நெஞ்சிடியாக இருந்தது. பழைய நினைவுகளை இரை மீட்டியது என்று சொன்னார். அவருடைய 21வயது மகளிடம் கேட்டேன். இரண்டு பகுதிக்கும் பிரச்சினை இல்லாமல் முடித்து விட்டார்கள் என்று சொன்னார். உங்களுடைய மனதில் தங்கி நிற்கும் பாத்திரங்கள் எவை? என்று கேட்டேன், முதலாவதாக தாய். இரண்டாவதாக கப்டன். மூன்றாவதாக அந்த தாத்தா என்று சொன்னார்.

எங்களோடு படம் பார்த்த மூத்த ஓய்வு பெற்ற நூலகர் ஒருவரிடம் கேட்டேன் எனக்கு தலையிடியாக இருந்தது. என்னுடைய தகப்பனார் அந்தக் காலத்தில் தான் கொல்லப்பட்டவர். அந்த நினைவுகள் எல்லாம் உயிர்த்தெழுந்து விட்டன. தலை இடிக்கிறது என்று சொன்னார்.

நீளிராவை பார்த்த ஒரு தலைமுறை தனது காயங்களின் ஊடாக அதை வாசிக்கின்றது. ஆனால் ஐபிகேஎ.ஃப் காலத்தில் பிறந்திராத அதற்குப் பின்னரும் 2009இல் சிறியவர்களாக இருந்த ஒரு தலைமுறை கூறுகிறது, இரண்டு தரப்புக்கும் நோகாமல் படத்தை முடித்து விட்டார்கள் என்று.

இது ஈழத்தமிழ்ப் பரப்பில் உள்ள இரண்டு தலைமுறைகளைச் சேர்ந்தவர்களின் ரசனைக் குறிப்புகள். ஆனால் பெருந்தமிழ்ப் பரப்பில் குறிப்பாக தமிழ்நாட்டில் அதுவும் சோமிதரன் தன் குடும்பத்தோடு வாழும் தமிழ் நாட்டில் இந்தப் படம் எப்படிப் பார்க்கப்படும்?

இந்தக் கேள்வி மிக முக்கியம். ஏனென்றால் இது ஒரு கூட்டுத் தயாரிப்பு. இது போன்ற போர்க்களத்தைப் படம் பிடிக்கும் கூட்டுமுயற்சிகள் ஏற்கனவே கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டன. அப்பொழுது விடுதலைப் புலிகளின் கருநிலை அரசு இயங்கிக் கொண்டிருந்தது. கிளிநொச்சி திருநகர் பகுதியில் திரைப்பட வெளியீட்டுப் பிரிவு இருந்தது. சமாதான காலத்தில் இந்தியாவிலிருந்து திரைக் கலைஞர்கள் அங்கே வந்து போனார்கள். வகுப்புகள் எடுத்தார்கள். இங்குள்ள கலைஞர்களோடு சேர்ந்து படங்கள் தயாரித்தார்கள்.

அவ்வாறான கூட்டுத் தயாரிப்புகளில் ஆகப்பிந்தியது நீளிரா.ஆனால் வித்தியாசம் என்னவென்றால் திருநகரை மையமாகக் கொண்டு இயங்கிய சிறிய திரைப்படத் துறை உருவாக்கிய படங்களில் முதலீடு ஈழத் தமிழர்கள். கலைஞர்களும் தொழில்நுட்ப வல்லுனர்களும் தான் தமிழ்நாட்டில் இருந்து வந்தார்கள். நீளிராவில் முதலீடு தமிழகத்துடையது. கதையும் இயக்கமும் ஒரு பகுதி கலைஞர்களும் ஈழத்தவர்கள். எனவே இது ஒரு ஈழ-தமிழக கூட்டுத் தயாரிப்பு. ஒரு கூட்டுத் தயாரிப்புக்கு கூட்டுப் பொறுப்பு உண்டு. இது போன்ற படங்களில் அது தனிய வணிகப் பொறுப்பாக மட்டும் இருக்க முடியாது. அதை விட ஆழமாக அரசியல் தார்மீகப் பொறுப்பு ஒன்று உண்டு. ஏனென்றால் இரண்டு நிலப்பரப்புகளும் – தமிழகமும் ஈழமும் – சம்பந்தப்பட்ட ஒரு கதை அது

தமிழ்நாடு ஈழப் போராட்டத்தை அடைகாத்த பின்தளங்களில் ஒன்று. தீக்குளித்துத் தீக்குளித்துத் தான் அடைகாத்த ஒரு போராட்டம் தனது நாட்டின் படையினரோடு மோதும் ஒரு போரை தமிழகம் கண்டது. அது துரோணர்கள் எதிர் அர்ஜுனர்களின் போர். அதன் பின் ஈழப் போர் தமிழகத்துக்கும் விரிவடைந்தது. அதன் விளைவாக கடந்த 16 ஆண்டுகளாக தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் இடையிலான பிணைப்புகள் முன்னெப்பொழுதையும் விட அதிகம் சோதனைக்கு உள்ளாகியுள்ளன.

இப்படிப்பட்டதோர் அரசியல் வரலாற்றுப் பின்னணியில் சுமார் 35 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு கதையை சோமிதரன் படம் பிடித்திருக்கிறார். அது போல இது வரையிலும் சொல்லப்படாத ஏராளம் கதைகள் ஈழத் தமிழர்களிடம் உண்டு. நாலாம் கட்ட ஈழப் போருக்கு முன்னரான யுத்த நிறுத்த காலகட்டத்தில் கொழும்பில் நடந்த மானுடத்தின் ஒன்றுகூடலில் சிங்களத் திரைப்பட இயக்குனர் பிரசன்ன விதானகே அதனை மேடையில் வைத்துச் சொன்னார். யாரும் இதுவரை கேட்டிராத கதைகள் அவர்களிடம் உண்டு என்ற பொருள்பட.

அதில் ஒரு கதையைத் தான் சோமிதரன் படமாக்கியிருக்கிறார். படத்தின் பெயர் நீளிரா அதிகம் கவித்துவமானது. தமிழ் வணிக சினிமாவுக்கு அதிகம் வாலாயப்பட்ட பார்வையாளர்களுக்கு அது நீண்ட இரவு என்பதைக் குறிக்கும் என்று பொருள் விளக்கம் தர வேண்டியுள்ளது.

சோமிதரன் வணிக ரீதியாக அதிகம் சமரசங்களைச் செய்யவில்லை. அந்த நீண்ட இரவு ஒரு போரில் முடியப் போகிறது என்ற பயத்துடன் கூடிய எதிர்பார்ப்பு பதைபதைப்பு படத்திற்கு ஒருவகை திரில்லருக்குரிய எ.ஃபெக்டைக்’’ கொடுக்கின்றன.

ஆனாலும் மையப் பாத்திரம் உணர்ச்சிகளை அதிகம் வெளிப்படுத்தாத கல்லாய் இறுகிய முகத்தோடு ஒரு துயரச் சித்திரமாக நிற்கிறது. அது எல்லா போர்க்களங்களுக்கும் பொதுவான தேற்றப்படவியலாத தாயின் துக்கத்தின் குறியீடாகக் காட்சி தருகிறது. படத்தில் வரும் மணப்பெண்ணும் அப்படித் தான். பாத்திரங்களின் ஒப்பனை காட்சியமைப்பு எல்லாவற்றிலுமே வணிகத்தனங்கள் குறைவு. குறிப்பாக பாத்திரங்கள் பேசும் ஈழத்து தமிழ் பிழையின்றி ஒலிக்கின்றது.

படத்தின் முடிவில் இந்திய அமைதி காக்கும் படைக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் நடக்கும் உரையாடல்கள் அதிகம் செயற்கையானவை. பிரச்சாரப் பண்பு மிக்கவை. போதனைப் பண்பு மிக்கவை. படத்தின் சீரியஸான ஓட்டத்தைப் பாதிக்கக்கூடிய நாடகத்தனமான உரையாடல் அது. எனினும் இறுதிக்காட்சியில் யாரும் யாரையும் சுட்டுக் கொள்ளாமல் விலகிச் செல்லும் அந்த அதிகாலை திரை மொழியில் அழகானது.

நித்திரை இல்லாத கொடுமையான ஒரு நீண்ட இரவு முடிந்து, மோதல் இல்லாத ஓர் அதிகாலை புலர்கிறது. அந்த அதிகாலையின் மங்கிய வெளிச்சத்தில், வீடும் நிலமும் மாந்தர்களும் மனதில் நிரந்தரமான ஒரு பெருமூச்சாகத் தங்கி விடுகிறார்கள்.எந்தப் ஒரு போரிலும் யாரும் இறுதி வெற்றியைப் பெறுவதில்லை என்று கூறிப் படம் முடிகிறது. அந்த நீண்ட இரவும் முடிகிறது.

ஈழத் தமிழரும் தமிழகத்தின் மருமகனும் ஆகிய சோமிதரன் பாக்கு நீரிணையால் பிரிக்கப்படுகின்ற இரண்டு தமிழ்ப் பரப்புக்கும் பொறுப்புக் கூற வேண்டிய ஒரு கதையை நிதானமாகக் கையாண்டிருக்கிறார்.

தனது மக்களின் விடுதலை வேட்கைக்கு விசுவாசமாகவும் இருக்க வேண்டும். அதேசமயம் ஒரு கூட்டுத் தயாரிப்பு என்று அடிப்படையில் கூட்டுப் பொறுப்போடும் கதையைக் கையாள வேண்டும்.நீளிரா கலைப் பெறுமதி மிக்க ஈழப் போர்ப் படம்.

இக்கட்டுரையில் நான் ஏற்கனவே கூறியது போல கிளிநொச்சியில் உருவாக்கப்பட்ட கூட்டுத் தயாரிப்புகளில் ஒன்று ஆணிவேர். அந்தப் படத்தை இயக்கியவர் ஜான் .தமிழில் சிறந்த இயக்குனர்களில் ஒருவராகிய மகேந்திரனின் மகன். விஜய் நடித்த சச்சின் படத்தை இயக்கியவர். ஒரு தனிப்பட்ட சந்திப்பின் போது ஜான் என்னிடம் சொன்னார் ஐசென்டெய்ன் கூறியது போல நான் போரை (கிளாமரைஸ்) மனோரதியப்படுத்த மாட்டேன் ”என்று.

நீளிரா ஒரு திரைப்படமாக போரில் யாரும் வெல்வதில்லை என்று கூறி முடிகிறது. படத்தின் இறுதிக் காட்சியை ஒரு மோதலாக, ஒரு ரத்தக்களரியாக இல்லாமல் பிரச்சாரப் பண்புமிக்க போதனையாக ஒரு விவாதமாக மாற்றி இரண்டு தரப்பும் ரத்தம் சிந்தாமல் விலகிச் செல்கின்றன.

இக்கட்டுரையில் நான் முன்பு சொன்ன அந்த இளம் பெண் கேட்டார் வீட்டுக்குள் வந்திருக்கும் இந்திய ராணுவத்தோடு அவர்கள் வாக்குவாதப்படுகிறார்கள். கோபமாக நடந்து கொள்கிறார்கள். சில சமயங்களில் தள்ளுமுள்ளுப்படுகிறார்கள். அப்படியெல்லாம் நடந்து கொள்ளக் கூடியதாக அந்த காலம் இருந்ததா? என்று. இறுதிக் கட்டப் போரில் சிறுமியாக அது ஒரு முழுமையான போர்க்களம் அல்ல. அது ஒரு குடும்பத்தின் வீடு. அதுவும் அடுத்த நாள் திருமணத்துக்கு தயாராகிக் கொண்டிருந்த ஒரு மணப்பெண்ணின் வீடு. அந்த இரவை ஒரு திரைக் கதையாகப் பார்ப்பது நல்லது. அங்கே சோமிதரன் உண்மையின் பகுதிகளை புனைவின் இழை கொண்டு பின்னியிருக்கிறார் என்று.

நீளிரா வெளிப்படுத்தும் அரசியல் செய்தியை நோக்கி அந்த திரைக்கதை தயாரிக்கப்பட்டிருக்கிறது. எந்தப் போரும் வெற்றியில் முடிவதில்லை என்பது தான் அந்தச் செய்தி. உலகில் வெற்றி பெற்ற அனேகமான போர்ப் படங்கள் போருக்கு எதிரானவை தான்.



# அமெரிக்கா - ஈரான் பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது ஏன்?



இது எங்களின் இறுதி மற்றும் சிறந்த முன்மொழிவு. இதை இரானியர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா என்பதைப் பொருத்திருந்து தான் பார்க்க வேண்டும். நன்றி' என்று கூறி அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் தனது செய்தியாளர் சந்திப்பை முடித்தார்.

அமெரிக்கா மற்றும் இரான் இடையே பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் 21 மணி நேரம் நடைபெற்ற பேச்சுவார்த்தை எந்த தீர்வும் எட்டப்படாமல் முடிந்தது.

இதனை செய்தியாளர் சந்திப்பில் உறுதிபடுத்திய ஜே.டி.வான்ஸ், 'அமெரிக்கா மற்றும் இரான் இடையேயான இடைவெளியைக் குறைத்து ஒரு சமரசத்தை எட்டுவதற்கு பாகிஸ்தான் தன்னால் இயன்றவரை முயன்றது' என்றும் தெரிவித்தார். 'ஆனால் கெட்ட செய்தி என்னவென்றால் எங்களால் ஒரு ஒப்பந்தத்தை எட்ட முடியவில்லை.' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தச் செய்தி இரானைப் போல அமெரிக்காவுக்கு அவ்வளவு மோசமானதல்ல எனக் கூறும் வான்ஸ் 'எந்த ஒப்பந்தமும் ஏற்படவில்லை. நாங்கள் அமெரிக்காவிற்கே திரும்பிச் செல்கிறோம்.' என்றார்.

பாகிஸ்தானின் கோரிக்கைக்கு இணங்க இரண்டு வாரகால போர்நிறுத்தத்திற்கு அமெரிக்காவும் இரானும் ஒப்புக் கொண்டன. இரு நாடுகளின் குழுக்களும் பேச்சுவார்த்தைக்காக இஸ்லாமாபாத் சென்றன. அங்குள்ள சுமார் 21 மணி நேரம் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

பேச்சுவார்த்தை முடிவில்லாமல் போனதாகக் குறிப்பிடும் வான்ஸ் ஒப்பந்தம் ஏற்படாதது இரண்டு வாரகால போர்நிறுத்தத்தின் மீது என்ன தாக்கம் செலுத்தும் என்பதை தெளிவுபடுத்தவில்லை.

வான்ஸின் செய்தியாளர் சந்திப்பைத் தொடர்ந்து பேசிய பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் இஷக்தர் அமெரிக்கா – இரான் பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தர் பணியை பாகிஸ்தான் தொடர்ந்து மேற்கொள்ளும் என்று தெரிவித்தார். இரு தரப்பும் போர் நிறுத்தத்திற்கான தங்களின் அர்ப்பணிப்பைத் தொடர்வது முக்கியம் என்றும் கூறினார்.

பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததற்கு அமெரிக்காவும் இரானும் வெவ்வேறு காரணங்களை வழங்குகின்றன.

'எங்களின் வரம்பு என்ன எதில் சமரசம் செய்துகொள்ளலாம் எதில் சமரசம் செய்ய முடியாது என்பதை தெளிவுபடுத்தி விட்டோம்' என ஜேடி.வான்ஸ் கூறியிருந்தார். 'அவர்கள் (இரான்) எங்களின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதில்லை என முடிவெடுத்து விட்டார்கள்,' என்றும் டிரம்ப் குறிப்பிட்டார். எந்தெந்த நிபந்தனைகள் நிராகரிக்கப்பட்டன என்பதை தெளிவாக குறிப்பிட வேண்டும் என செய்தியாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த வான்ஸ், 'பேச்சுவார்த்தை பற்றிய முழு தகவல்களை வழங்க முடியாது. அவர்கள் (இரான்) அணு ஆயுதங்களை உருவாக்க மாட்டார்கள் மற்றும் அந்த திறனை அடைவதற்கு தேவையான உபகரணங்களைப் பெற மாட்டார்கள் என்கிற உத்தரவாதம் எங்களுக்கு வேண்டும்.' என்றார்.

'அமெரிக்க அதிபரின் முக்கியமான இலக்கு இது தான் அதை நாங்கள் பேச்சுவார்த்தையின் மூலம் அடைய நினைத்தோம்.' இரானின் யுரேனியத்தை செறிவூட்டும் திறன் ஏற்கெனவே அழிக்கப்பட்டு விட்டதாக கூறும் வான்ஸ் 'ஆனால் எப்போதும் அணு ஆயுதங்களை உருவாக்க மாட்டோம் என்கிற விருப்பத்தை இரானிடம் நம்மால் பார்க்க முடிகிறதா? அந்த விருப்பத்தை நாங்கள் இன்னும் பார்க்கவில்லை.' என்றும் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தையின் போது ஏற்கனவே முடக்கப்பட்டுள்ள இரானின் சொத்துகளை விடுவிப்பது பற்றி விவாதிக்கப்பட்டதாக கூறும் வான்ஸ் 'எங்களின் நிபந்தனைகளை இரான் ஏற்றுக் கொள்ளும் புள்ளியை எங்களால் அடைய முடியவில்லை.' என்கிறார்.

'நாங்கள் மிகவும் நெகிழ்வுத்தன்மை உடன் நடந்து கொண்டோம் என நினைக்கிறேன். நல்லெண்ணத்துடன் இந்தப் பேச்சுவார்த்தைக்குச் சென்று ஒப்பந்தம் மேற்கொள்ள முடிந்தவரை முயற்சிக்குமாறு அதிபர் எங்களிடம் கூறியிருந்தார். நாங்கள் அதைச் செய்தோம். ஆனால் துர்திருஷ்டவசமாக எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை,' என்று அவர் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தையின் போது எத்தனை முறை டிரம்பை தொடர்பு கொண்டீர்கள் என்கிற கேள்விக்குப் பதிலளித்த வான்ஸ், 'அதிபருடன் தொடர்ந்து இணைப்பில் இருந்தோம். கடந்த 21 மணி நேரத்தில் எத்தனை முறை பேசினோம் எனத் தெரியவில்லை. பல முறை பேசியிருப்போம்.' எனத் தெரிவித்தார்.

'அமெரிக்க ராணுவத்தின் மத்திய கட்டளை மையத்தின் தளபதி அட்மிரல் கூப்பர், வெளியுறவு செயலாளர் மார்கோ ரூபியோ, பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்செத் மற்றும் ஒட்டுமொத்த தேசிய பாதுகாப்பு குழுவிடனும் தொடர்பில் இருந்தோம். நாங்கள் நல்லெண்ணத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தி வந்ததால் தொடர்ந்து இணைப்பில் இருந்தோம்,' என்றும் வான்ஸ் குறிப்பிட்டார்.

'ஒரு புரிதலை எட்ட எளிமையான முன் மொழிவை நாங்கள் ஏற்படுத்தினோம். இது தான் எங்களின் இறுதியான மற்றும் சிறந்த முன்மொழிவு. இதை இரானியர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா அல்லது இல்லையா என்பதைப் பொருத்திருந்து தான் பார்க்க வேண்டும்.' எனக் கூறி செய்தியாளர் சந்திப்பை முடித்தார் ஜே.டி.வான்ஸ் செய்தியாளர் சந்திப்பிற்குப் பிறகு ராவல்பிண்டியில் உள்ள நூர் கான் விமானப்படை தளத்திற்குச் சென்ற ஜே.டி.வான்ஸ் அங்கிருந்து அமெரிக்காவிற்கு புறப்பட்டுச் சென்றார். அவரை பாகிஸ்தான் பாதுகாப்புப் படைகளின் தலைமை தளபதி ஃபீல்ட் மார்ஷல் அசிம் முனீர், வெளியுறவு அமைச்சர் இஷக் தர் மற்றும் உள்துறை அமைச்சர் மொஹ்சின் நக்வி ஆகியோர் வழியனுப்பி வைத்தனர்.

இரானிய அரசு ஊடகங்களின்படி அமெரிக்காவின் 'நியாயமற்ற கோரிக்கைகள்' தான் போரை நிறுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை சீர்குலைத்ததற்கு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'இரான் குழுவின் பல முயற்சிகளைக் கடந்தும் அமெரிக்கா தரப்பிலிருந்து வைக்கப்பட்ட நியாயமற்ற கோரிக்கைகள் தான் பேச்சுவார்த்தை நின்று போனதற்கு காரணம். அப்படித்தான் பேச்சுவார்த்தைகள் முடிந்தன' என இரான் அரசு ஊடகமான ஐ.ஆர்.ஐ.பி டெலிகிராமில் வெளியிட்ட பதிவில் தெரிவித்துள்ளது.

இரான் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் கலிபாஃப் தலைமையிலான குழுவும் அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் தலைமையிலான குழுவும் பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் சென்றன.

இரண்டு குழுக்களும் தனித்தனியாக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப், வெளியுறவு அமைச்சர் இஷக் தர் மற்றும் ஃபீல்ட் மார்ஷல் அசிம் முனீர் உள்ளிட்ட அதிகாரிகளைச் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்புகளைத் தொடர்ந்து பாகிஸ்தான் மத்தியஸ்தராக தன்னுடைய பணியைத் தொடரும் என்றும் இந்தப் பேச்சுவார்த்தைகள் மோதலை முடிவுக்கு கொண்டு வர உதவும் என்றும் பாகிஸ்தான் அரசு அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்திருந்தனர்.

முதலில் பாகிஸ்தான் மூலமாக இரான் மற்றும் அமெரிக்க குழுக்கள் செய்திகளைப் பரிமாறிக் கொண்டதாகவும் அதன் பின்னர் பாகிஸ்தான் அதிகாரிகளின் முன்னிலையில் சுமார் இரண்டரை மணி நேரம் இரு தரப்பும் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் பாகிஸ்தான் அதிகாரிகள் பிபிசி உருதுவிடம் தெரிவித்தனர்.

அதன் பிறகு ஒரு மணி நேர இடைவேளை எடுக்கப்பட்டு இரானிய மற்றும் அமெரிக்க வல்லுநர்கள் இடையே கோரிக்கைகளின் தொழில்நுட்ப அம்சங்கள் வழங்கப்பட்டன.

பாகிஸ்தான் அதிகாரிகளின்படி தொழில்நுட்ப பிரச்னைகள் தொடர்பான செய்திகள் பரிமாற்றம் நள்ளிரவு வரை நடைபெற்றது. பேச்சுவார்த்தையில் முடிவு கிடைக்காமல் போனதற்கு அமெரிக்காவின் நிலைப்பாட்டில் நெகிழ்வுத்தன்மை இல்லாதது தான் காரணம் என இரானின் தஸ்னிம் செய்தி முகமை தெரிவிக்கிறது.

தஸ்னிம் செய்தி முகமையின்படி தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் பேச்சுவார்த்தையின் தொடக்கத்திலே உத்தரவாதத்தை அமெரிக்கா மீறியதற்கான அதிகாரப்பூர்வ எதிர்ப்பை பதிவு செய்யவும்' சபாநாயகர் கலிபாஃப் தலைமையிலான குழு பாகிஸ்தான் பாதுகாப்புப் படைகளின் தலைமைத் தளபதியை இருமுறையும் பாகிஸ்தான் பிரதமரை ஒருமுறையும் சந்தித்துள்ளது.

மேலும் அந்த செய்தியில் 'அமெரிக்க குழு உடனான பேச்சுவார்த்தை 21 மணி நேரத்துக்கும் மேல் நீடித்தது. இந்த சமயத்தில் இரான் தனது முன்மொழிவுகளை மீண்டும் வழங்கி யதார்த்தத்தின் பக்கம் அமெரிக்காவைக் கொண்டு வர முயற்சித்தது.' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஒவ்வொரு கட்டத்திலும் அமெரிக்காவின் அதிகப்படியான கோரிக்கைகள் தான் ஒரு பொதுவான வேலைதிட்டத்தை உருவாக்குவதற்கு தடையாக இருந்தது. அமெரிக்காவின் நிலைப்பாட்டில் நெகிழ்வுத்தன்மை இல்லாததால் தான் பேச்சுவார்த்தை எந்த தீர்வும் இல்லாமல் முடிந்தது.' என தஸ்லின் செய்தி முகமை தெரிவிக்கிறது.

அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்கான நேரம் இடம் மற்றும் நடைமுறை தொடர்பாக எந்த அட்டவணையும் வெளியிடப்படவில்லை என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நன்றி பிபிசி

# தமிழக காவல்நிலைய சித்திரவதைகள்! சாத்தான்குளம் வழக்கில் வரலாற்றுத் தீர்ப்பு!

கட்டுரையாளர்:
ஆர்.கே.சேதுராமன்

தமிழகத்தின் சாத்தான்குளம் பொலிஸ் நிலையத்தில் தந்தையும் மகனும் பொலிஸாரால் கொடூரமாகத் தாக்கப்பட்டு கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கில் 9 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மரண தண்டனை விதித்து மதுரை மாவட்ட நீதிமன்றம் அளித்த தீர்ப்பு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதிகாரத்தின் வரம்பு மீறிய துஷ்பிரயோகம், தொடர் சித்திரவதை மற்றும் சட்டத்தைக் காக்க வேண்டியவர்களே பொது நம்பிக்கையைத் துரோகம் செய்தமை ஆகியவற்றைச் சுட்டிக் காட்டி, இவ்வழக்கை 'அரிதினும் அரிதான வழக்கு' என நீதிபதி ஜி.முத்துக்குமரன் வகைப்படுத்தினார்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் கைதிகள் உயிரிழக்கும் பிரச்சினை பல நாடுகளில் நீடிக்கிறது.

இலங்கையில் சுமார் ஒரு வருடத்துக்கு முன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கடந்த மே மாதம் வெளியிட்ட தரவுகளின்படி 2020 முதல் 2025 வரையான 5 வருடங்களில் 49 பேர் பொலிஸ் காவலில் இருந்த நிலையில் உயிரிழந்திருந்தனர். சிறைச்சாலைகளில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை இதில் சேர்க்கப்படவில்லை. அதேகாலப் பகுதியில் மேலும் 30 பேர் என்கவுன்டர் முறையில் உயிரிழந்தனர்.

இந்தியாவின் தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகளின்படி, 1999 முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலத்தில் இந்தியாவில் 2,200- க்கும் மேற்பட்டோர் பொலிஸ் நிலையங்களில் உயிரிழந்துள்ளனர். இருப்பினும், தண்டனை வழங்கப்படுவது விதிவிலக்கான வகையில் அரிதாகவே உள்ளது. குறிப்பாக 2018 முதல் 2023 - வரை நடந்த பொலிஸ் நிலைய மரண வழக்குகளில் எவருக்கும் தண்டனை வழங்கப்பட்டதாகப் பதிவு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் சாத்தான்குளம் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் 9 பொலிஸாருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டமை பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது.

### பின்னணி

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள சாத்தான்குளம் நகரில் தொலைபேசி கடையொன்றை நடத்தி வந்த பென்னிக்ஸ் (31), அவரின் தந்தை ஜெயராஜ் (59) ஆகியோரே இவ்வாறு கொல்லப்பட்டிருந்தனர்.

2020 ஜீன் 19 ஆம் திகதி, கொரோனா ஊரடங்கு காலத்தில் அனுமதிக்கப்பட்ட நேரத்தைக் கடந்து கடையை திறந்து வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் ஜெயராஜுக்கும் பொலிஸாருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அதையடுத்து ஜெயராஜை சாத்தான்குளம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். இதை அறிந்த பென்னிக்ஸ் எதற்காக தனது தந்தையை பொலிஸார் அழைத்துச் சென்றனர் என கேட்பதற்காக பொலிஸ் நிலையத்துக்குச் சென்றார். அங்கு இருவர் மீதும் பல்வேறு குற்றச்சாட்டுகளை பதிவு செய்த பொலிஸார் இருவரையும் கொடூரமாக தாக்கினர் எனக் குற்றம் சுமத்தப்பட்டது

ஜீன் 20 ஆம் திகதி அவர்கள் இருவரும் சாத்தான்குளம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கடுமையான இரத்தப்போக்கு காரணமாக 6 தடவைகள் அணிய சாறங்கள் மாற்ற வேண்டியிருந்த போதிலும் அவர்களுக்கு மருத்துவர் ஒருவர் உடற்றிடநிலை சான்றிதழ் அளித்தார் என சட்டத்தரணி ஒருவர் கூறினார். பின்னர் ஜெராஜையும் பென்னிக்ஸையும் நீதிவான் ஒருவரிடம் பொலிஸார் அழைத்துச் சென்றனர் எனவும், அவ்விருவரின் உடல்நிலையை ஆராயாமலேயே அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்விருவரும் உடல்நிலை மோசமடைந்து கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், பென்னிக்ஸ் ஜீன் 22 ஆம் திகதியும் ஜெயராஜ் 23 ஆம் திகதியும் உயிரிழந்தனர்.





இவர்களின் மரணங்கள் தொடர்பில் எதிர்ப்புகள் கிளம்பிய நிலையில், சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை இவ்விடயத்தில் தானாகவே தலையிட்டது.

ஜீன் 24 ஆம் திகதி, அந்நீதிமன்றத்தின் நீதியரசர்கள் பி.என். பிரகாஷ், பி.புகழேந்தி ஆகியோர் அடங்கிய அமர்வு, தூத்துக்குடி காவல் கண்காணிப்பாளரை இந்த சம்பவம் குறித்து விசாரித்து ஒரு நிலை அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டதுடன், இறந்தவரின் பிரேதப் பரிசோதனையை மூன்று மருத்துவர்கள் கொண்ட குழு நடத்த வேண்டும் என்றும், அந்த முழு செயல் முறையையும் காணொளிப் பதிவு செய்ய வேண்டும் என்றும் அந் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பொலிஸ் பரிசோதகர் ஸ்ரீதர், உதவி பொலிஸ் பரிசோதகர்களான பாலகிருஷ்ணன், ரகு கணேஷ், தலைமைக் கான்ஸ்டபிள்கள் முருகன், சாமிதுரை, கான்ஸ்டபிள்களான முத்துராஜ், செல்லதுரை, தோமஸ் பிரான்சிஸ், வெயில் முத்து, சிறப்பு துணை பரிசோதகர் போல்துரை ஆகிய 10 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அவர்கள் தொடர்பில் இந்தியாவின் மத்திய புலனாய்வுப் பணியகம் (சி.பி.ஐ.) நடத்தியது. கைது செய்யப்பட்டவர்களில் போல்துரை என்பவர் கொவிட் காரணமாக உயிரிழந்த நிலையில் ஏனைய 9 பொலிஸாருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பாக சுமார் 5 வருடங்களாக மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையின் பின் 9 பொலிஸ் அதிகாரிகளும் குற்றவாளிகள் என கடந்த மார்ச் 23 ஆம் திகதி நீதிபதி ஜி.முத்துக்குமரன் தீர்ப்பளித்தார். அதன் பின் கடந்த 6ஆம் திகதி அவர்கள் 9 பேருக்கும் இரட்டை மரண தண்டனை விதித்த நீதியரசர், மொத்தமாக 1.40 கோடி இந்திய ரூபா அபராதமும் விதித்தார். நீதிபதி தனது தண்டனை குறிப்பில் தெரிவித்த கருத்துகள் கவனிக்கப்பட வேண்டியவை:

இந்த வழக்கில் ஆயுள் தண்டனை விதிப்பதா, மரண தண்டனை விதிப்பதா என கேள்வி வரும் போது, அரிதினும் அரிதான வழக்குகளில், ஆயுள் தண்டனை போதுமானதல்ல எனும் போதும், எதிரி திருந்த வாய்ப்பில்லை எனும் போதும் மரண தண்டனை விதிக்கலாம் என விதிகள் கூறுகிறது' என நீதிபதி தனது தீர்ப்புக் குறிப்பில் தெரிவித்தார்.

'லொக் அப் மரணங்களை சகித்துக் கொள்ள முடியாது என மாநில அரசும் உச்சபட்ச தண்டனை வழங்குமாறு மத்திய அரசும் அறிக்கை அளித்துள்ளது. தந்தையையும் மகனையும் சட்டவிரோதமாக அடைத்து வைத்து இரவு முழுவதும் கொடூரமாக தாக்கியுள்ளனர்.

பொலிஸார் அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளனர் .ஆனால், குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு கோரிக்கையை வைக்கின்றனர். சாதாரண நபர்கள் இதே குற்றம் செய்திருந்தால் சாதாரண தண்டனை வழங்கலாம் ஆனால், பொலிஸாரே குற்றம் செய்துள்ளனர்.

இது சாதாரண குற்றமல்ல. நிராயுதபாணியாக இருந்த இருவரையும் இரவு முழுவதும் காவல் நிலையத்தில் வைத்து பொலிஸார் தாக்கி இருக்கின்றனர். இந்தக் குற்றத்தில் ஈடுபட்டவர்கள் நல்ல அறிவு வளர்ச்சி உள்ளவர்கள் படித்தவர்கள். எனவே இதை சாதாரணமான குற்றமாக கருத முடியாது.

ஒருவேளை சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வு நேரடியாக கண் காணிக்காமல் இருந்திருந்தால், உயிரிழந்த ஜெயராஜ் மற்றும் அவரின் மகனின் உடல்கள் அடக்கம் செய்யப்படுவதற்கு முன்பே இவ்வழக்கும் புதைக்கப்பட்டிருக்கும்.

இந்த வழக்கில் இரட்டை ஆயுள் தண்டனை வழங்கப்படலாம் எனவும் 14 ஆண்டுகள் சிறைவாசத்தை அனுபவித்து விட்டு வெளியே வந்துவிடலாம் எனவும் குற்றவாளிகள் கருதியிருக்கலாம். இந்த வழக்கில் வழங்கப்படும் தண்டனை இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடுவோருக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும். எனவே குற்றவாளிகள் 9 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்படுகிறது. குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட 1.40 கோடி ரூபாவை பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு வழங்க வேண்டும். தவறும் பட்சத்தில் குற்றவாளிகளின் சொத்துகளைப் பறிமுதல் செய்து அதை வழங்க வேண்டும்' எனவும் நீதிபதி ஜி.முத்துக்குமரன் தெரிவித்துள்ளார். காவல்நிலைய மரண வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டு காவலர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டமை தமிழக வரலாற்றில் இதுவே முதல் தடவை என இவ்வழக்கில் முன்னிலையான சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்றத்தின் இத்தீர்ப்புக்கு பலர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

சட்டத்தைக் காக்க வேண்டியவர்களே அதை மீறினாலும் அவர்களுக்கு நிச்சயம் தண்டனை உண்டு என்பதை இத்தீர்ப்பு பறைசாற்றியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அதே வேளை, மரண தண்டனை விதிக்கப்படுவதற்கு எதிர்ப்புகளும் வெளியாகியுள்ளன.

பிரபல நடிகரும் இந்திய ராஜ்ய சபா உறுப்பினருமான கமல்ஹாசன், மரண தண்டனைக்கு பதிலாக, ஆயுட்காலம் வரை குற்றவாளிகள் சிறை வைக்கப்பட்டிருக்க வேண்டும் என எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட முறையில் நான் மரண தண்டனைக்கு எதிரானவன். கொடுங்குற்றம் இழைத்தவர்கள் எவ்வித சலுகையுமின்றி ஆயுட்காலம் உள்ளவரை கடும் உழைப்புடன் சிறை வைக்கப்பட வேண்டுமென்பதே என் நிலைப்பாடு.

பொலிஸாரின் கொலைவெறித் தாக்குதலுக்கு ஆளாகி படுகாயமடைந்தவர்களைப் பார்க்காமலே சான்றிதழ் அளித்த மருத்துவர், விளக்கமறியலில் (ரிமாண்ட்) வைக்க உத்தரவிட்டவர், உண்மைகளை மறைக்க முயன்ற அதிகாரிகள், இருவரும் மூச்சுத் திணறலால் இறந்தார்களென மனசாட்சி இல்லாமல் பேசிய ஆட்சியாளர்கள் ஆகியோருக்கும் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று என் மனம் ஏங்குகிறது.


அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கிறோம், நம்மை யார் என்ன செய்து விட முடியும் எனும் துணிச்சலில் குற்றமிழைப்பவர்கள் எவராயினும், அவர் எத்தகைய செல்வாக்கு படைத்தவரெனினும் சட்டத்தால் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். அதிகார மமதையில் அப்பாவி மக்களுக்கு எதிராக நிகழும் கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டும்' எனவும் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

### சர்வதேச மன்னிப்புச்சபை


இதேவேளை, ஒரு மனித உரிமை மீறலுக்கு மற்றொரு மனித உரிமை மீறல் மூலம் தண்டனை வழங்குவது வன்முறையை முடிவுக்குக் கொண்டு வராது என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்திய பிரிவுத் தலைவர் ஆகார் படேல் இத்தீர்ப்பு (18ம் பக்கம் பார்க்க)

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசிரிசி அன்பர்களே! சுபச் செலவு அதிகரிக்கும். வாகனங்கள் பயன்படுத்தும் போது கவனம் தேவை. சிலருக்கு இட மாற்றம் உண்டாகலாம். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை நீங்கும். உத்யோகத்தில் அடுத்த வரை நம்பி பொறுப்புக்களை ஒப்படைப்பதை தவிர்ப்பது நல்லது. பெண்கள் அடுத்தவருக்கு உதவி செய்யும் போது கவனம் தேவை.





ரிஷபராசி அன்பர்களே! எதையும் சாதிக்கும் திறமையும், சாமர்த்தியமும் அதிகமாகும். புதிய நண்பர்கள் கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும். மரியாதை கூடும். தன்னம்பிக்கையுடன் செயலாற்றுவீர்கள். தொழில் வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். தேவையான பண உதவியும் கிடைக்கும். கடன் தொல்லை குறையும். தொழில் போட்டிகள் நீங்கும். உததியோகத்தில் எதிர் பார்த்த பதவி உயர்வு கிடைக்கும்.





மிதுனராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். தடைகள் அனைத்தையும் தகர்ப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் இருந்த மந்த நிலை மாறும். பணவரவு நிதானமாக இருக்கும். மற்றவர்கள் உங்கள் மேல் கொண்டிருந்த கோபம் அகலும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். புதிய தொழில் ஆரம்பிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிதானம் தேவை.





கடகராசி அன்பர்களே! தேவையற்ற வீண் படபடப்பு ஏற்படும். நீண்ட நாட்களாக வாங்க வேண்டும் என்று எண்ணிய பொருட்களை வாங்குவீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பாக இருந்து வந்த குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திட்டமிட்டு காரியங்களை செய்து எதிர்பார்த்த வெற்றியை அடைவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன், மனைவிக் கிடையில் நெருக்கம் உண்டாகும்.





சிம்மராசி அன்பர்களே! வீண் மனக்கவலைகள் நீங்கும். கனவு தொல்லைகள் உண்டாகும். பணவரத்து திருப்தி தரும். நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும். ஆடம்பர செலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். தொழிலை விரிவுபடுத்துவதற்கான செயலில் ஈடுபடுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும்.




கன்னிராசி அன்பர்களே! எல்லா முயற்சிகளும், காரியங்களும் சாதகமான பலன் தரும். மனதில் இருந்த தயக்கம், பயம் நீங்கும். வெளியூர், வெளிநாடு பயணங்கள் செல்ல எடுக்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வும் கூடுதல் பொறுப்புகளும் கிடைக்கும். வர வேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும்.





துலாம் ராசி அன்பர்களே1 சுப நிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியங்களில் வேகம் பிறக்கும். வீடு, வாகனம் மூலம் செலவுகள் ஏற்படலாம். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் கூடும். தொழில் வியாபாரத்தில் புத்தி சாதூரியத்தால் முன்னேற்றம் காண்பீர்கள். உத்யோகத்தில் நிர்ப்பந்தமாக இடமாற்றம் அல்லது பணிமாற்றம் இருக்கலாம். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் குறையும்.





விருச்சிகராசி அன்பர்களே! எந்த காரியத்திலும் இருந்து வந்த தடை தாமதம் நீங்கும். வீண் பிரச்னைகள் அகலும். நண்பர்கள் உறவினர்களுடன் நீடித்து வந்த மன வருத்தம் நீங்கும். பயணங்கள் செல்ல நேரிடும். கூட்டு தொழில் அல்லது வியாபாரம் செய்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது. உத்யோகத்தில் வீண் அலைச்சல் உண்டாகும். வேலைப் பளு கூடும். குடும்பத்தில் அடுத்தவர்களால் ஏதேனும் குழப்பம் உண்டாகலாம்.








தனுசுராசி அன்பர்களே! பொருள் வரத்து அதிகரிக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்று வீர்கள். நண்பர்கள் மூலம் எதிர் பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் அனுகூலமாக நடந்து முடியும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் இருந்த சண்டைகள் நீங்கும். கணவன், மனைவிக் கிடையே இருந்த இடைவெளி குறையும்.




மகரராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் காரிய அனுகூலம் உண்டாகும். தேவையான நேரத்தில் மற்றவர்களின் உதவி கிடைக்கும். புதிய சொத்து வாங்குவதில் கவனம் செல்லும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும். திறமையான பேச்சின் மூலம் உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் சொல்வதை செய்வதன் மூலம் நன்மை கிடைக்க பெறுவர். குடும்பத்தில் அமைதி ஏற்படும்.




கும்பராசி அன்பர்களே! காரியங்களில் இருந்து வந்த தடை தாமதம் நீங்கும். புதிய வீடு வாகன சேர்க்கை உண்டாகும். மனதில் இருந்த குழப்பங்களுக்கு விடை கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், வேலை பளுவும் ஏற்படலாம். வார்த்தைகளில் நிதானம் அவசியம்.




மீனராசி அன்பர்களே! எல்லா காரியங்களிலும் அதிக முயற்சி மூலம் வெற்றி கிடைக்கும். கடன் பிரச்னை தீரும். தகராறு, வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். கவுரவம் அதிகரிக்கும். மறைமுக நோய் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் வேலைப் பளு குறையும். முயற்சிகள் காலதாமதமாக பலன் கொடுக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## செஞ்சொற்செல்வரின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி

(7ம் பக்கத் தொடர்ச்சி) இன்று போர் வியூகங்களை வகுத்து போர் புரிகிறார்கள். இவை கவலைக்குரியன....

எங்கள் மண்ணில் இன்னமும் இனப் பிரச்சினை தீரவில்லை. நிலப் பிரச்சினையும் தீரவில்லை... எப்போது தான் இந்தப் பிரச்சினை தீரும் என்ற ஏக்கமே மனதில் நிறைந்துள்ளது.

இவற்றை எல்லாம் நீள நினைந்து புத்தாண்டில் தெய்வத்தை மன்றாடுவோம். நல்லதோர் சூழல் வர வேண்டும் என கடவுளை மன்றாடுவோம். சமூக த்தில் வன்முறைகள் வேண்டாம் என்ற உணர்வு வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

போதை எதையெல்லாம் செய்யும் என்பதை எங்கள் மண்ணில் நாங்கள் தாராளமாக கண்டு விட்டோம். யாரையும் குறை கூறிக் கொண்டிருப்பதால் பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை இனிமேலாவது போதை உலகில் இருந்து எங்கள் பிள்ளைகளை காப்பாற்ற நாங்கள் அனைவரும் ஒன்று பட்டு பாடுபட வேண்டும்.

பாடசாலைகளில் அதிபர் ஆசிரியர்கள் தம் கடமைகளை நிறைவாகவும் பூரணமாகவும் நிறைவேற்றுவதற்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவோம். நல்லதோர் சமூகத்தை கட்டியெழுப்ப புத்தாண்டில் உறுதி எடுத்து பணியாற்றுவோம்.

உங்கள் அனைவருக்கும் பிறக்கவுள்ள பராபவ வருட புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கின்றேன்.

## தமிழக காவல்நிலைய சித்திரவதைகள்!

(17ம் பக்கத் தொடர்ச்சி) தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு, காவல் துறையினரின் சித்திரவதைகளுக்கு எதிரான இந்தியாவின் நீண்டகாலப் போராட்டத்தில் ஓர் அரிதான பொறுப்புக்கூறல் தருணத்தைக் குறிக்கிறது. நாட்டை உலுக்கிய ஒரு கொடூரமான குற்றத்தை இந்தத் தீர்ப்பு அங்கீகரிக்கிறது. ஆனால், இந்த மரண தண்டனை என்பது நீதி அல்ல.

இது காவல் துறையின் கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த அவசரமாகத் தேவைப்படும் ஆழமான சீர்திருத்தங்களிலிருந்து கவனத்தைத் திசைதிருப்பும் செயலாகும். ஒரு மனித உரிமை மீறலுக்கு மற்றொரு மனித உரிமை மீறல் மூலம் தண்டனை வழங்குவது வன்முறையை முடிவுக்குக் கொண்டு வராது அது வன்முறையைத் தொடரவே செய்யும்.

'நமக்குத் தேவையானது கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள். சித்திரவதைக்கு எதிரான ஐ.நா. உடன்படிக்கையை இந்தியா அங்கீகரிக்க வேண்டும். இது நீண்டகாலமாக நிலுவையில் உள்ள ஒரு நடவடிக்கையாகும். ஒரு மனித உரிமை மீறலுக்கு மற்றொரு மனித உரிமை மீறல் மூலம் தண்டனை வழங்குவது வன்முறையை முடிவுக்குக் கொண்டு வராது அது வன்முறையைத் தொடரவே செய்யும்.

'மரண தண்டனை என்பது இறுதியான கொடூரமான, மனிதாபிமானமற்ற மற்றும் இழிவான தண்டனையாகும். இது சித்திரவதையைத் தடுக்கவோ அல்லது முறையான மாற்றத்தை வழங்கவோ போவதில்லை. ஜெயராஜ், பென்னிக்ஸ் மற்றும் ஆயிரக்கணக்கான பிறருக்குக் கிடைக்கும் உண்மையான நீதி என்பது, அவர்களின் மரணத்துக்குக் காரணமான நிறுவனங்களை மாற்றுவதிலும், இது போன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் உறுதி செய்வதிலுமே உள்ளது' எனத் தெரிவித்துள்ளார்.

## ஈரானின் ஹோர்மூஸ் நீரிணை மூடல்:-

(25ம் பக்கத் தொடர்ச்சி) ஓனிக்ஸ் கேபிடல் நிர்வாக இயக்குநர் ஜார்ஜ் மான்டேபெக் கூறும் போது அமெரிக்கா தனது தடையை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் சந்தையின் நிலவரப்படி எண்ணெய் விலை பீப்பாய்க்கு 140 முதல் 150 டாலர் வரை உயரக் கூடும். ஈரானை ஒடுக்குவதில் காட்டும் தீவிரத்தால், உலக நாடுகளுக்கு தாங்கள் ஏற்படுத்தும் பாதிப்பை அமெரிக்கா உணரவில்லை. இதன் பாதிப்பு ஆசிய நாடுகளிலும், தென் பசிபிக் பிராந்தியத்திலும், எண்ணெயைச் சார்ந்துள்ள அனைத்து நாடுகளிலும் கடுமையாக எதிரொலிக்கும் என்று எச்சரித்துள்ளார். இத்தகைய சூழலில் தான் உலகம் ட்ரம்ப்பின் அடுத்த நகர்வை உற்றுநோக்கிக் கொண்டிருக்கிறது.

அதேவேளையில்.சிறிய ரக ஏவுகணைகளை ஈரானுக்கு வழங்க சீனா முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இது உறுதி செய்யப்பட்டால் சீன பொருட்களுக்கு 50 சதவீத வரி விதிக்கப்படும். சீனாவுக்கு கச்சா எண்ணெய் விற்பனை செய்ய அமெரிக்கா தயாராக இருக் கிறது. சீன கப்பல்கள் அமெரிக்கா அல்லது வெனி சுலாவுக்கு வந்து கச்சா எண்ணெய் நிரப்பிச் செல்லலாம்' என்று ட்ரம்ப் எச்சரித்துள்ளதும் கவனிக்கத்தக்கது.

## பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் விடயத்தில்

(3கூட்டம் நிகழ்நிலையில் அண்மையில் நடைபெற்றுள்ளது. இதன்போது தமிழரசுக்கட்சி உறுதியான முடிவினை தெரிவிக்காது வெறுமனே தமது கட்சியை மையப்படுத்தி தீர்மானங்களை எடுப்பதற்கு முனைவார்களாக இருந்தால் அத்துடன் அவர்களுடனான உரையாடல்களை முடிவுக்கு கொண்டு வருவதோடு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் தனியான தரப்பாக செயற்படும் என்ற அறிவிப்பை முதலிலேயே மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கான ஆதரவு தொடரும்:-

(24ம் பக்கத் தொடர்ச்சி) குறிப்பாக டிஜிட்டல் அடையாள அட்டை திட்டத்திற்காக இந்தியா ஏற்கனவே 450 மில்லியன் ரூபாய் நிதியை வழங்கியுள்ளது. இந்தியாவின் 'ஆதார்' அட்டை முறையை மாதிரியாகக் கொண்டு உருவாக்கப்படும் இத்திட்டம் இலங்கையின் பொதுச் சேவை விநியோகத்தை டிஜிட்டல் மயமாக்குவதில் பெரும் மைல்கல்லாகக் கருதப்படுகிறது. அதே போன்று தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ள இந்திய உதவித் திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய செயற்திட்டங்கள் குறித்து இதன்போது விரிவாகப் பேசப்படவுள்ளது. இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா வழங்கிய சுமார் 4 பில்லியன் டொலர் உதவித் திட்டங்களின் தொடர்ச்சியாக, தற்போது உட் கட்டமைப்பு, எரிசக்தி மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பத் துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்பட்டு வருகின்றன. அண்மையில் இரு நாடுகளுக்கும் இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்து பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகள் தீவிர மடைந்துள்ள நிலையில் துணை ஜனாதிபதியின் விஜயம் அண்டை நாட்டுக்கு முதலிடம்' என்ற இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை மேலும் பலப்படுத்தும்.

# இயக்கச்சி படையினரின் ஆக்கிரமிப்பு நில மீட்புப் போராட்டத்தில் கட்சி அரசியல்!

இயக்கச்சியில் படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள தமது நிலத்தை விடுவிக்குமாறு கோரி நில உரிமையாளர்களும் அந்தப் பகுதி மக்களும் போராட்டத்தை (2026.04.02) முன்னெடுத்திருந்தனர். இலங்கை இராணுவத்தின் 4வது படைப்பிரிவின் மின் மற்றும் இயந்திர பொறியியல் படையணி முகாம் அமைத்திருக்கும் பொது மக்களுக்கு உருத்துடைய காணிகளை அளவீடு செய்து சுவீகரிப்பதற்கு முயற்சிக்கிறது.




இதை எதிர்த்தே மக்கள் போராட்டத்தை மேற் கொண்டனர். இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக இலங்கைத் தமிழரசுக் கட்சி, சமத்துவக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகளைச் சேர்ந்தோரும் காணி ஆக்கிரமிப்புக்கு எதிரான செயற்பாட்டாளர்களும் இணைந்திருந்தனர்.

### போராட்டத்தைப் பிளவுபடுத்திப் பலவீனப்படுத்துவதற்கான முயற்சி

மக்கள் போராட்டத்தை ஆரம்பிப்பதற்குத் தயாரான வேளை, எதிர்பாராத விதமாக தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான சிவஞானம் சிறிதரன் எங்களுடைய கட்சிக்காரர் எல்லாரும் இந்தப் பக்கமாக வாருங்கள் என்று தனியாக அழைத்துச் சென்றார். அவர் அப்படிச் சொன்னதை அவரோடு அங்கே கூடிநின்ற பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் உட்பட ஏனைய பிரதேச சபை உறுப்பினர்களோ, சிறிதரனின் ஆதரவாளர்களோ கண்டிக்கவும் இல்லை. அது தவறான செயல் என்று சொல்லவும் இல்லை. அவர்கள் சிறிதரனின் சொல்லை ஏற்று அவருக்குப் பின்னால் சென்றனர்.

இது அங்கே — போராட்டக்களத்தில் கூடியிருந்த மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதை உடனேயே அங்கே கூடியிருந்த மக்களில் ஒரு தொகுதியினர் கடுமையாக ஆட்சேபித்தனர். இது அரசியற் கட்சிகளின் போராட்டமும் அல்ல. இதை உங்களுக்கான அரசியலாக ஆக்கிப் பார்க்கவும் வேண்டாம் என்று நேரடியாகவே சொன்னார்கள்.

இப்படித் தனித் தனியாகப் பிரிந்தும் பிளவுபட்டும் நின்றால், அது படையினருக்கும் அரசுக்கும் தான் ஆதாயமாகும். மக்கள் போராட்டம் என்பது ஒற்றுமையாக, ஓரணியாக நடக்க வேண்டும். மக்களாகிய நாம் அதையே எதிர்பார்க்கிறோம். இப்படி ஆளாளுக்கு பிரிந்து நிற்பது நல்லதல்ல. இது பிரித்தாளும் தந்திரத்துக்கே நம்மைப் பலியிடுவதாக அமையும் என்று சிலர் அந்த இடத்திலேயே சத்தமாகச் சொன்னார்கள். மக்களுடைய இந்தக் கருத்து சரியானது.

மக்களுடைய போராட்டத்தின்போது, அது நிகழும் களத்திலே திரண்டிருக்கும் மக்களை இப்படித் திடீரென அணிகளாகப் பிரிப்பது குழப்பத்தை உண்டாக்கும். இந்தக் குழப்பம் எதிர்த்தரப்புக்கு அதாவது ஒடுக்குமுறையாளர்களுக்கே சாதமாக அமையும். சிறிதரன் அநேகமான சந்தர்ப்பங்களில் இவ்வாறு செய்கிறார். இதனால்தான் அவரை, 'அரசுக்குச் சாதமாகச் செயற்படுகிறார்' என்று அவர் பிரதிநிதித்துவம் செய்யும் இலங்கைத் தமிழரசுக் கட்சியினரே கண்டித்து வருகின்றனர். எதிர்த்தரப்பினர் கண்டித்தால் அது அரசியல் எதிர்ப்புணர்வின் வெளிப்பாடு என்று சொல்லலாம். இது அப்படியல்ல. அவருடைய சொந்தக் கட்சியினரின் வலுவான குற்றச்சாட்டாகும்.

சிறிதரனின் இந்தக் குறைபாடும் இவ் விதமான செயற்பாடும் இயக்கச்சியில் நடந்த அந்தப் போராட்டத்தில் இது மட்டும் நிகழவில்லை. வெவ்வேறு சந்தர்ப்பங்களில், வெவ்வேறு சூழல்களிலும் நிகழ்ந்து வருகிறது. ஏன் பாராளுமன்ற விவகாரங்களிலும் நடந்து வருகிறது.

நான்கு தடவை பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கின்ற ஒருவரிடம் அரசியல் முதிர்ச்சியும் அரசியல் நாகரீகமும் விவேகமும் வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு இலக்கு வைத்தவர் சிறிதரன் அதற்குத்தேர்வு செய்யப்பட்டவர். அப்படியானவர் அரசியல் வெளியில், மக்கள் போராட்டங்களில், பொது அரங்குகளில் மிக நிதானமாகவும் பொறுப்புணர்வோடும் நடந்து கொள்வது அவசியம். பிறருக்கும் அவரைத் தொடர்வோருக்கும் தன்னுடைய சிறந்த வழிகாட்டல்களையும் நற்பண்புகளையும் செயற்பாடுகளில் வழியாகக் காட்ட வேண்டும்.

ஆனால் நடப்பது என்ன? இதைப் பற்றி இந்தக் கட்டுரையின் இறுதிப் பகுதியில் மேலும் பேசலாம்.

### மக்களின் அதிரடித் திருப்பம்

சிறிதரன் அப்படிச் சொன்னாலும் மக்கள் அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. அவர்களுக்குத் தமது போராட்டமும் தமது காணியை விட்டு இராணுவம் வெளியேறுவதுமே முக்கியமானதாகும். ஆகவே தமது சொந்த நிலத்தை விட்டு படையினரை வெளியேறுமாறு மக்கள் போராடிக் கொண்டிருந்தவேளை திடீரென, ஆக்ரோசமாகப் படையினரின் பிரதான வாசலை நோக்கி விரைந்து சென்றனர். அந்த மக்களோடு இணைந்து சமத்துவக் கட்சியின் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமாரும் சென்றார். அப்படி விரைந்து சென்ற மக்களைக் கண்டு ஒரு கணம் படையினர் தடுமாறி விட்டனர். உண்மையில் அதுவரையில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த படையினருக்கு அதொரு திடீர் அதிர்ச்சியே. (sudden shock) அது வரையிலும் படைமுகாமுக்கு எதிர்ப் பக்கமாக, வீதியோரத்தில் கூடியிருந்த மக்களை வழிப்படுத்திக் கொண்டிருந்த காவல்துறைக்கும் இது அதிர்ச்சி (shock) தான். எப்படியோ தம்மைச் சுதாகரித்துக் கொண்டு படைமுகாம் வாசலை நோக்கி ஓடிச் சென்ற காவல்துறையினர், தடுப்பு அணியாக வாசலை மறித்து நின்றனர்.

படைமுகாம் வாசலை அடைத்து நின்ற மக்களிடம் பொலிஸ் உயரதிகாரி, மக்களை அங்கிருந்து விலகிச் செல்லுமாறு கேட்டார். மக்கள் அதைப் பொருட்படுத்தவேயில்லை. அவர்கள், 'எங்கள் நிலம் எமக்கு வேண்டும்'. படையினருக்கு இங்கே என்ன வேலை? 'யுத்தம் முடிந்து 17 ஆண்டுகளாகி விட்டது. இதற்குப் பிறகும் ஏன் இராணுவம் மக்களுடைய காணிகளில் இருக்க வேண்டும்?', 'இதோ எங்களுடைய காணிக்கான உறுதிப் பத்திரம். உங்களிடம் என்ன ஆதாரம் உண்டு?' 'இது மக்களுக்கான ஆட்சியா? படைகளுக்கான அரசாங்கமா?', 'படையே வெளியேறு. எங்கள் நிலங்கள் எமக்கே வேண்டும்', 'எங்கள் காணிகளை விட்டுப் படையினரைப் போகச் சொல்லுங்கள். காணி உரித்துடைய மக்களாகிய எங்களை எப்படி நீங்கள் விரட்டலாம்? என்றெல்லாம் கேட்டுத் தொடர்ந்து குரலிட்டுக் கொண்டிருந்தனர்.

மக்களுக்கு ஆதரவாக சந்திரகுமாரும் (அவரும் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்) பொலிசாருடன் விவாதத்தில் ஈடுபட்டார். மக்களுடைய நியாயத்தையும் அவர்களுடைய உணர்வுகளையும் புரிந்து கொள்ளுங்கள். யுத்தம் முடிந்து17 ஆண்டுகளுக்குப் பிறகும், மீள் குடியேற்றம் நிகழ்ந்து முடிந்த பிறகும், மீள் குடியேற்ற அமைச்சின் பணிகள் முடிந்த பிறகும் படைகள் மக்களுடைய

கட்டுரையாளர்:
கிளிநொச்சியில் இருந்து
– கருணாகரன் –



காணிகளில் அவர்களுடைய வசிப்பிடங்களில் வாழ்வது எந்த வகையில் நியாயம்? என்று சந்திரகுமார் பொலிஸ் அதிகாரியிடம் கேள்வி எழுப்பினார்.

மக்களுடைய போராட்டத்தின் தாற்பரியத்தை அதனுடைய உண்மையான நிலவரத்தை உணர்ந்தாலும் காவல் துறையினரால் அதை அனுமதிக்க முடியவில்லை. படைமுகாம் வாசலை அடைக்காமல் ஓரமாக நின்று போடுமாறு பொலிஸ் உயர் அதிகாரி கேட்டார்.

மக்கள் போராட்டத்தை முன்னெடுப்பதே ஆக்கிரமிப்பாளருக்கும் ஒடுக்குமுறையாளருக்கும் நெருக்கடி கொடுப்பதற்கே தவிர, அவர்களுடைய வசதிகளுக்காக அல்ல. ஆகவே மக்கள் அசைய மறுத்து சில மணிநேரம் குரல் எழுப்பியபடியே நின்றனர். அந்தச் சில மணி நேரம் படை யினருக்கும் பொலிசாருக்கும் பெரிய நெருக்கடியாகவும் சங்கடமாகவும் இருந்தது.

### ஊடகவியலாளர் சந்திப்பு

போராட்டக் காட்சிகளைப் படமாக்கிய ஊடகர்கள், மக்களிடத்திலும் அரசியற் தரப்புகளிடமும் நேர்காணல்களைச் செய்தனர். அநேகமான போராட்டத்தின் போது ஊடகவியலாளர்களும் கட்சிகளின் YouTupeபர்களும் தடுமாறுவதுண்டு. பாதிப்புக்குள்ளாகிய மக்கள் தங்களுக்கான நீதிக்காக ஆக்ரோஷமாகவும் உணர்வுபூர்வமாகவும் போராடுவர்கள்.

ஏனெனில் அது அவர்களுடைய வாழ்க்கையோடும் வாழ்க்கைக்கான அடிப்படைகளோடும் நேரடியாகச் சம்மந்தப்பட்டிருப்பது. ஆகவே அவர்களுடைய ஒவ்வொரு சொல்லும் பெறுமதிகள் பலவற்றைக் கொண்டவையாக இருக்கும். ஒவ்வொரு குரலுக்கும் வலு உச்சம். போராட்டத்தில் அதிரடியான முடிவுகளை எடுப்பார்கள். 'அரகலய' போராட்டம் இதற்கு உதாரணம். திடீரென ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டு, அதற்குள் மக்கள். நுழைந்த காட்சிகள் உங்கள் நினைவுக்கு வரும்.

ஆனால் அரசியல்வாதிகள் எப்போதும் தங்களுடைய முகங்களைக் காட்டவும் குரல்களை அடையாளப்படுத்தவும் கட்சி நலன்களை முதன்மைப்படுத்தவுமே முயற்சிப்பதுண்டு. அவர்களுக்கு மக்களும் மக்களுடைய பிரச்சினைகளும் தமது அரசியலுக்கான மூலதாரம் என்ற எண்ணமே இருக்கும். போராட்டமும் அதனுடைய அரசியல் முக்கியத்துவமும் அந்தப் போராட்டத்தின் நியாயத் தன்மையும் (21ம் பக்கம் பார்க்க)

# எழுதத் தெரியாத பிள்ளையானும் படிக்கத் தெரியாத சாணக்கியனும்

கட்டுரையாளர்:
- அழகு.குணசீலன் -



இலங்கையின் ஜனநாயக அரசியலில் மையமாக கருதப்படுகின்ற பாராளுமன்றத்தின் நிறைவேற்று சட்டவாக்க அதிகாரம், நீதி, நிர்வாகம் என்ற மூன்று தூண்களும் பொய்களினாலும், புனைகதைகளினாலும் கட்டி எழுப்பப்பட்ட கட்சி அரசியல் சார்பு, காழ்ப்புணர்ச்சியாக காட்சிப்படுத்தப்படுகிறது.

தனிநபர் தாக்குதல்களும், தரவுகள், விபரங்கள் பற்றாக்குறையும் கூட இதற்கு ஒரு காரணமாக இருக்க முடியும். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமையை பயன்படுத்தி எதையும் பேசிவிட்டு போகலாம் என்ற அரசியல் வறுமை எமது பாராளுமன்ற உறுப்பினர்களிடையே மலிந்து விட்டது. பாராளுமன்ற ஜனநாயகத்தை மலினப்படுத்துகிறது.

அண்மையில் பாராளுமன்றத்தில் ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து 12 வது முறையாகவும் விவாதிக்கப்பட்டது. அந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மட்டக்களப்பு, தமிழரசுக்கட்சி எம்.பி. சாணக்கியன் தனது விவாதத்திற்கு சில சான்றுகளை முன்வைக்க முயன்று மூக்குடைபட்ட கதையாகவும் இது இருக்கலாம். ஈஸ்டர் தாக்குதல்களின் எட்டு குண்டுதாரிகளும் யார் என்பதும், குழுத்தலைவர் யார் என்பதும் வெளிப்படையானது. ஆனால் அதற்கு பின்னால் உள்ள சூத்திரதாரியை தேடும் படலமே இன்றைய இலங்கை அரசியலாகி விட்டது. தாக்குதல்கள் நடந்த போது பாதுகாப்பு அமைச்சராகவும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் இருந்த மைத்திரி பால சிறிசேன அந்த சக்தி வாய்ந்த சூத்திரதாரியை இலங்கையால் எதிர் கொள்ள முடியாது என்று கையை விரித்து பல ஆண்டுகள் கடந்து விட்டன. கம்மன்பெலவின் புத்தக வெளியீட்டில் சூத்திரதாரிகள் முன் வரிசையில் அமர்ந்திருக்க கண்டதாக அரசாங்க, எதிர்தரப்பினர் கூறுகின்றனர். அப்படியானால் இன்னும் இவர்கள் யாரைத் தேடுகிறார்கள்?

விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் ஆனந்த விஜயபாலவின் கருத்து பிள்ளையான் என்ற சிவநேசதுரை சந்திரகாந்தன் பேராசிரியர் ரவீந்திரநாத் கடத்தல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என்பதை உறுதிப்படுத்துவதுடன் பிள்ளையான் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக சில தகவல்களை அறிந்திருந்தார் என்று கூறியிருக்கிறார். இந்த தகவல்களை பிள்ளையான் தனது ஈஸ்டர் படுகொலை: இன-மத நல்லிணக்கம் அறிதலும் புரிதலும் என்ற நூலில் குறிப்பிடாதவையா? என்பது அமைச்சருக்கே வெளிச்சம்.

இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மட்டக்களப்பு எம்.பி. இ.சாணக்கியன் எழுதத் தெரியாத பிள்ளையான் எப்படி புத்தகம் எழுத முடியும் என்று பாராளுமன்றத்தில் கேட்டிருக்கிறார். எழுதத் தெரியாதவர்கள் எழுதியிருந்தால் கேட்க வேண்டிய கேள்விதான். ஆனால் சாணக்கியன் போன்ற வாசிக்கத் தெரியாதவர்கள் இந்த கேள்வியை எழுப்புவது தான் வேடிக்கை.

பாராளுமன்ற சிறப்புரிமையை துஷ்பிரயோகம் செய்து இரண்டு உண்மையற்ற, குழப்பமான தகவல்களை சாணக்கியன் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

1. பிள்ளையான் சிறை அனுபவங்களையும், தனது சுயசரிதையையும் கலந்து எழுதிய வேட்கை என்ற நூலை வேட்டை என்று குறிப்பிட்டு தனது வாசிப்பு பலவீனத்தை வெளிப்படுத்தியுள்ளார் சாணக்கியன். இந்த நூல் ஈஸ்டர் படுகொலைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் 2017, செப்டம்பர், 9ம் திகதி மட்டக்களப்பு செல்வநாயகம் மண்டபத்தில் வெளியிடப்பட்டது. வேட்கை நூலுக்கும் ஈஸ்டர் படுகொலைகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. சாணக்கியனின் கருத்துப்படி அவர் உச்சரிப்பு பிழையாக சொல்லும் வேட்டை 2021- 2022 இல் வெளியிடப்பட்டதாக கூறுவதில் உண்மை இல்லை.

2. ஈஸ்டர் படுகொலை குறித்து பிள்ளையான் எழுதிய நூல் பிள்ளையானின் இரண்டாவது நூல். இதுவே ஈஸ்டர் படுகொலை இன-மத நல்லிணக்கம் அறிதலும் புரிதலும் இந்த புத்தகம் 2024 மார்ச் 23 ம் நாள் மட்டக்களப்பு அஞ்சனா மண்டபத்தில் வெளியிடப்பட்டது. சாணக்கியனுக்கு இது விடயத்தில் தெளிவில்லை. இதனால் பிள்ளையானின் இரண்டு வெவ்வேறு படைப்புக்களை ஒன்றாகப் போட்டு குழப்பியுள்ளார். இதற்கு பெயர் கலங்கிய குளத்தில் மீன் பிடிக்கும் கட்சி காழ்ப்புணர்ச்சி சந்தர்ப்பவாத அரசியல் கண்களை மூடிக் கொண்டு வலையை வீசலாம். ஏதும் பட்டாலும் படும். படாவிட்டாலும் சேதாரம் இல்லை. இந்த நூலை சாணக்கியன் கருதியிருந்தால், 2021- 2022 என்பது அவரின் தவறான தகவல். இவை சிறப்புரிமையை பயன்படுத்தி எம்.பி.க்கள் பாராளுமன்றத்தை பயன்படுத்தி தவறான தரவுகளை சமூகமயமாக்க வழி வகுக்கிறார்கள் என்பதற்கு சிறந்த உதாரணங்கள்.

சாணக்கியனின் கூற்றுப்படி வேட்டை நூலை பிள்ளையான் எழுதவில்லை என்றும், எழுதத் தெரியாதவர் எப்படி எழுத முடியும் என்றும் கேள்வி எழுப்புகிறார். பிள்ளையானுக்கு இது போன்ற சாணக்கியனின் நிலப்பிரபுத்துவ மேட்டுக்குடி தடிப்பு உளவியல் ஒன்றும் புதிதல்ல. ஏற்கனவே சமூக நாகரிகத்திற்கு மாறாக அநாகரிகமாக படிக்காதவன், மாடு மேய்த்தவன், வேடன் போன்ற பல சமூக அநீதியான வார்த்தைகளை சாணக்கியன் பயன்படுத்தி இருக்கிறார் என்பது பலருக்கும் தெரிந்த விடயம். ஆனால் இவை அனைத்தும் கொண்ட பிள்ளையானின் மக்கள் அரசியலை விடவும் மேலான அரசியலை, சாணக்கியனாலும், தமிழரசு கட்சியினாலும் மட்டக்களப்பு மக்களுக்கு மாகாணசபை ஊடாகவும், எம்.பி.பதவி ஊடாகவும் வழங்க முடியாமல் இருப்பதும் ஈஸ்டர் தாக்குதல் போன்ற ஒரு பெரும் துயரம் தான்.

பிள்ளையானின் வேட்கை சாணக்கியனின் தமிழ் வாசிப்பில் வேட்டை'' உண்மையில் சாணக்கியன் சொல்ல வருவது பிள்ளையான் எழுதிய ஈஸ்டர் படுகொலை தொடர்பான நூலைத் தான் என்று கொள்ள வேண்டியுள்ளது. இந்த நூலை பிள்ளையான் எழுதவில்லை என்று கூறும் சாணக்கியன், அதை எழுதியவர் ஹோஹான் குணரட்ன என்றும், அவர் தொழில் நுட்பத்தில் பாதுகாப்பு ஆய்வுகள் பேராசிரியராக இருக்கிறார் என்றும் கூறுகிறார்.

இவை அனைத்தும் தவறுகள் நிறைந்த தரவுகள் என்றாலும் பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி ஒப்புவிக்கப்பட்டவை. சாணக்கியன் பொதுவெளியில்- பாராளுமன்றத்திற்கு வெளியில் ஹோஹான் குணரட்ன தான் இந்த நூலை எழுதியவர் என்பதை நிரூபிப்பதே அரசியல் நேர்மையாக அமையும். அவர் இன்னொரு விசாரணைக்குழுவை கோர வேண்டியதில்லை. இருப்பதிலேயே சுயவிருப்பில் ஆஜராகலாம்.

பாராளுமன்றத்திற்குள் எம்.பி.க்கள் வெளியிடும் தவறான கருத்துக்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பாராளுமன்ற சிறப்புரிமை தடுக்கிறது. அவர்களை பாதுகாக்கிறது. இதனால் சிறப்புரிமையை துஷ்பிரயோகம் செய்து பொய் சொல்லுவதற்கான முழு வாய்ப்பையும் இது வழங்குகிறது. இதற்கு காரணம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் அறம் தவறாமல், நேர்மையாக, உண்மைகளையே பேசுவார்கள் என்ற எடுகோளின் அடிப்படையிலான ஜனநாயக விழுமியம். இதற்கு மாறாக இருதரப்பு அரசியல் வாதிகளும் இந்த துஷ்பிரயோகத்தில் ஈடுபடுகின்றனர். சட்டவாக்க சபையின் உறுப்பினர்களாக சட்டங்களை உருவாக்கும் இவர்களாலேயே அவர்கள் உருவாக்கிய சட்டங்களின் ஒழுக்கத்தை கடைப்பிடிக்க முடியவில்லை என்றால் இந்த சட்டவாக்க நடைமுறையும், சட்டங்களும் அப்பாவி மக்களுக்கு மட்டும் தானா?

ஈஸ்டர் படுகொலை விவகாரம் ஏழு ஆண்டுகளாகியும் இன்னும் இருட்டில் இருக்கிறது. அமைச்சர் ஆனந்த விஜயபால பாராளுமன்றத்தில் ஒன்பதாம் திகதி ஆற்றிய உரையில், கம்மன்பெலவின் நூல் பேசுகின்ற சில விடயங்களை பேசுவதன் மூலம் சில சந்தர்ப்பங்களில் இணங்கிப் போகிறார். இணங்கிப் போகாத விடயங்களும் உண்டு. ஆனாலும் 20த்திரதாரியை தேடுதல் படலம் அரசாங்க, எதிர்த் தரப்புகளில் இன்னும் தெளிவாக இல்லை. இருதரப்பு கட்சி அரசியல் நலனுக்குள் மக்களின் துயர் அடிபட்டுப் போகிறது.

மைத்திரிபால சிறிசேனவின் "அந்த மாபெரும் சக்தி அரசாங்க∴ எதிர்த் தரப்புக்கள் பேசுகின்ற கம்மன்பெலவின் புத்தக வெளியீட்டில் முன் வரிசையில் அமர்ந்து இருந்த பிரதான சூத்திரதாரிகள் அன்று சாரா இந்தியாவுக்கு தப்பி சென்று விட்டார் என்று கூறிய இன்றைய ஜே.வி.பி. அமைச்சர், மற்றும் சஜீத் கட்சியில் உள்ள முஜிபுர் ரஹ்மான் போன்ற அரசியல்வாதிகளின் இந்தியாவை நோக்கிய மறைமுக சுட்டு விரல் இவற்றிற்குள் தான் பிரதான சூத்திரதாரி மறைந்திருக்கிறார் என்றால், ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகள் சுரேஷ் சாலேயின் கைதுக்கும் அப்பால் நகர்வது சாத்திய மற்றது.

அநுர அரசாங்கத்தால் மட்டும் அல்ல எந்த அரசாங்கமும் இதைச் சாதிக்க வாய்ப்பில்லை. மேற் குறிப்பிட்ட மூன்று தரப்பு தேங்காய்களும் ஒரு கல்லில் சந்திக்கும் போது பிராந்திய பூகோள அரசியல் வெடித்துச் சிதறும். அவ்வளவு தான்...!

# இயக்கச்சி படையினரின் ஆக்கிரமிப்பு நில மீட்புப் போராட்டத்தில் கட்சி அரசியல்!

(19ம் பக்கத் தொடர்ச்சீ0 இரண்டாம் பட்சமானவை. ஆகவே இடைவெளிகளோடு நிற்கும் இந்த இரண்டு தரப்பையும் எப்படிச் சமன் செய்வது? அல்லது இந்த இரண்டு தரப்பையும் எப்படி Media coverage பண்ணிக் கொள்வது என்று ஊடகர்கள் தடுமாறிக் கொள்வர். இன்னொன்றும் நிகழ்வதுண்டு. அரசு அல்லது படைகள் அல்லது ஒடுக்கும் தரப்பினுடைய எதிர்வினைகள்(Reactions of the oppressor) எப்படி உள்ளது என்பதையும் coverage பண்ணிக் கொள்ளும் தேவை.

இயக்கச்சியில் நிகழ்ந்ததும் இது தான். போராடும் மக்களைச் சில ஊடகர்கள் கவனப்படுத்த முயற்சித்தனர். அவர்களுடைய நோக்கம், போராட்டத்துக்கு, மக்களுடைய நியாயமான கோரிக்கைக்கு, அவர்களுடைய உணர்வுகளுக்கு முன்னுரிமையளிப்பதாகவே இருந்தது. பதிலாக தம்மைக் கவனப்படுத்திக் கொள்வதற்குச் சில அரசியற் தரப்பினர் முயற்சித்தனர். அதற்காக ஊடகர்களை அழைத்துக் கொண்டேயிருந்தனர். இதற்காக அரசியல் பிரதிநிதிகளுக்கு நெருக்கமான ஆதரவாளர்களும் கட்சிகளின் உறுப்பினர்களும் ஊடகர்களைத் தமது தலைவர்களிடம் அழைத்துச் செல்வதற்கு முற்பட்டனர் பெரும்பாடுபட்டனர். சிலர், தங்கள் முகங்களை பலவந்தமாகக் கமராவுக்குள் நுழைக்க முயன்றனர். இந்த மாதிரியான மதிப்பிறக்கச் செயல்கள் ஒரு நியாயமான போராட்டத்தின் வீரியத்தையும் அதனுடைய நியாயத் தன்மையையும் வியாபார நிலைக்கு மாற்றுவதோடு, இது மக்களுடைய போராட்டமல்ல. அரசியல் தரப்புகளின் போராட்டம் என்று திசை மாற்றத்தையும் உருவாக்கி விடுகின்றன.

கேப்பாப்பிலவில் அரசியல் தரப்பினரை வெளி எல்லையில் தள்ளி நிறுத்தி வைத்து விட்டு, மக்கள் ஓரணியாக நின்று போராடியதால் தான் அவர்கள் இன்று குடியிருக்கும் நிலப்பகுதியை மீட்டெடுத்தனர். அங்கே சென்ற அரசியல்வாதிகளும் கட்சிகளும் ஓரமாக நின்றனரே தவிர, அரசியற் படமெடுப்பதற்கும் அரசியற் படங்காட்டுவதற்கும் அனுமதிக்கப்படவில்லை. என்றபடியால் தான் அந்த மக்களுடைய போராட்டம் வெற்றியடைந்தது. அப்படித்தான் இரணைதீவை மக்கள் மீட்டெடுத்ததும் நடந்தது.

அரசியற் கட்சிகளோ அரசியல்வாதிகளோ மக்களுக்காகப் போராடாமல் விடலாம். அதனால் ஒன்றும் குறைந்து விடுவதில்லை. ஆனால், மக்களுடைய போராட்டத்தைச் சிதைக்கக் கூடாது. அந்த உரிமை யாருக்கும் இல்லை. மக்களுடைய போராட்டங்களில் தமக்கான அரசியல் நலனைத் தேடினால், அது அந்த மக்களைக் கண்ணீரில் தள்ளுவதாகவே அமையும்.

இந்தப் போராட்டத்தில் 20 ஆண்டுகளுக்கு மேலாக காணிகளை இழந்து நிற்கும் அவலத்தையும் துயரத்தையும் மனதிற் கொள்ள வேண்டும். போர் முடிந்த பிறகும் மக்களுடைய காணிகளில் அத்துமீறிப் படையை அமைத்துள்ள அரசைக் கண்டிக்க வேண்டும். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள், ஆளுநரின் சந்திப்புகள் மற்றும் பாராளுமன்றத்தில், ஜனாதிபதி கலந்து கொள்ளும் மேடைகளில் என சாத்தியமான எல்லா இடங்களிலும் இந்த மாதிரிப் பிரச்சினைகள் தொடர்ந்து பேசப்பட வேண்டும். ஆனால், அங்கும் அரசியல் தான் நடக்குமே தவிர, மக்களுக்கான நீதி கோரல்கள் அல்ல என்பது நிரூபணமாகும். இதற்கும் ஓர் உதாரணம் உண்டு.

இயக்கச்சிப் போராட்டத்துக்கு மக்கள் சேரக் கூடாது என்று தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், இரண்டு நாட்களுக்கு முன்பாக ஓர் ஊடக அறிவிப்பை வெளியிட்டிருந்தார். அதில் படைகளுக்கான நிலத்தை அளவீடு செய்யும் நடவடிக்கையைத் தான் இடைநிறுத்தியுள்ளதாகத் தெரிவித்திருந்தார். இளங்குமரனின் அறிவிப்பை எவரும் பொருட்படுத்தவில்லை. வேண்டுமானால், படைகளை விலக்கிக் காட்டுங்கள். அது தான் எங்களுக்கு வேணும். நீங்கள் ஆட்சியில் இருப்பதால் அதைச் செய்வது சுலபம். இப்படித் தற்காலிகத் தடை என்று சொல்வதெல்லாம் ஏமாற்றாகவே இருக்கும். மக்களுடைய போராட்டத்தைத் திசை திருப்புவதாக தளர்ச்சியடையச் செய்வதாகவே இருக்கும் என்று மக்களால் கூறப்பட்டது.

இதேவேளை இந்தப் போராட்டத்தின் போது பிரதேச செயலகத்திலிருந்து காணிப்பகுதி உத்தியோகத்தர்கள் வருகை தந்திருந்தனர். அவர்கள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரின் (மாவட்டச் செயலர்) தகவல் ஒன்றை மக்களுக்கு அறிவித்தனர். அதில் தற்காலிகமாக காணி அளவீடு செய்வது இடைநிறுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பைச் செய்வதற்கு வந்திருந்த பிரதேச செயலக உத்தியோகத்தர்களை, மறித்து, பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் தவிசாளர் சுரேன், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடம் அழைத்துச் செல்வதற்குக் கடுமையாக முயற்சித்தார். அதைப் படம் எடுத்துக் கொள்வதற்கும் தமது அணியைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தார். ஆனால். பிரதேச செயலக உத்தியோகத்தர்களோ, நாம் மக்களுக்கே தகவல் சொல்ல வேண்டும். அதற்காகவே வந்தோம் என்று மக்களுக்கு முன்னிலையில் தெரிவித்தனர். இப்படி ஏராளம் இழுபறிகள், திசைமாற்ற முயற்சிகளுக்கு மத்தியில் ஒரு சிறிய மக்கள் போராட்டம் நடந்து முடிந்திருக்கிறது.

ஆனால், முடியாமல் காதுகளிலும் நம்முடைய மூளையின் நரம்புகளிலும் இன்னும் ஒலித்துக் கொண்டிருப்பது அந்த மக்களுடைய குரல் தான். அதிலும் அந்தப் படைமுகாமில் தன்னுடைய ஐந்து தலைமுறையின் காணியை இழந்து நிற்கும் ஒரு முதிய பெண்ணின் குரலுக்கு இந்தப் பூமியில் பதிலே இல்லை.

ஆம், அந்த முதிய தாய் சொன்னார், ஒரு காலத்தில் இங்க தான் நாங்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடி பொங்கிச் சந்தோசமாகச் சாப்பிட்டம். இப்ப இந்தக் காம்புக்குப் பின்னால் வேலியில் ஒளித்து நின்று அந்த இடத்தைப் பார்க்க வேண்டியிருக்கு. ஆமி வந்தால் ஓடி மறையிறம்.

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- Vistation
- Funeral & Memorial Service
- Reception
- Burial • Cremation


Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை


Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# உசேன்போல்ட்டின் சாதனையை முறியடித்த 18வயது கவுட்







18 வயதான கவுட் கவுட், 200 மீட்டர் தூரத்தை வெறும் 19.67 வினாடிகளில் கடந்து புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

சிட்னியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆஸ்திரேலிய தடகள சாம்பியன் ஷிப் போட்டியின் 200 மீட்டர் இறுதிப் போட்டியிலேயே அவர் இந்த சாதனையை படைத்துள்ளார்.

இதன் மூலம், 20 வயதிற்குட்பட்டோருக்கான (Under-20) உலக சாதனையை அவர் முறியடித்துள்ளார்.

ஜமைக்காவின் உசைன் போல்ட் தனது 18 ஆவது வயதில் 200 மீட்டரை 19.93 வினாடிகளில் கடந்ததே சாதனையாக இருந்தது.

தற்போது கவுட் கவுட் 19.67 வினாடிகளில் கடந்து, அதே வயதில் போல்ட்டை விட அதிவேகமான வீரராக உருவெடுத்துள்ளார். தென் சூடான் வம்சாவளியைச் சேர்ந்த இவர், சிட்னி ஒலிம்பிக் பூங்காவில் இந்த மைல் கல்லை எட்டியதன் மூலம், 20 வினாடிகளுக்குக் குறைவாக 200 மீட்டரைக் கடந்த முதல் அவுஸ்திரேலியர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

# 1 பில்லியன் டொலரும் அழகான பெண்ணும் வேண்டுமென துருக்கிக்கு உகண்டா இராணுவத் தளபதி கோரிக்கை!




சர்வதேச அரசியல் அரங்கில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள வினோதமான கோரிக்கை ஒன்று வெளியாகியுள்ளது. உகாண்டா இராணுவத் தளபதி முஹஜீசி கைனருகபா, துருக்கி நாடு தமக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலரும், அந்த நாட்டிலேயே மிகவும் அழகான பெண்ணையும் திருமணம் செய்து தர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

முஹஜீசி கைனருகபா, உகாண்டா ஜனாதிபதி யோவேரி முசெவேனியின் மகனாக இருப்பதுடன் எதிர்கால ஜனாதிபதியாகவும் கருதப்படுகிறார். இந்த சர்ச்சைக்குரிய கருத்துகளை அவர் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

சோமாலியாவில் உகாண்டா இராணுவம் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நிலையில், துருக்கி பொருளாதார பலன்களைப் பெறுகிறது. இதற்கான இழப்பீடாகவே இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

30நாட்களுக்குள் கோரிக்கை நிறைவேற்றப்படா விட்டால், துருக்கியுடனான தூதரக உறவுகள் துண்டிக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளார்.


மேலும் துருக்கி ஏர்லைன்ஸ் விமானங்களுக்கு உகாண்டா வான் வெளியில் தடை விதிக்கப்படலாம் என்றும், கம்பாலாவில் உள்ள துருக்கிய தூதரகம் மூடப்படலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

இது முதல் முறையல்ல. 2022ஆம் ஆண்டு, இத்தாலி பிரதமர் ஜோர்ஜியா மெலோனியை திருமணம் செய்ய 100 மாடுகளை வழங்க முன்வந்ததோடு, மறுத்தால் ரோம் நகரை கைப்பற்றுவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த வினோதமான கோரிக்கை தற்போது சர்வதேச அளவில் கடும் விமர்சனங்களையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கு
இந்த மாதம் உணவளிக்க
முன் வாருங்கள்!
தொடர்புகளுக்கு 416 841 9600


# 30வது ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் உயர்திரு**
**கிருஸ்ணபிள்ளை சதாசிவம்**

மலர்வு 10.12.1926 உதிர்வு 19.04.1996

நாரந்தனை ஊர்காவற்றுறையைச் சேர்ந்த
திரு கிருஷ்ணபிள்ளை சதாசிவம் அவர்களது
30வது ஆண்டுநினைவஞ்சலி

முப்பது ஆண்டுகள் என்ன? எம் மூச்சு உள்ளவரை மறையாது
உங்கள் நினைவுகள் தந்தையே!
தந்தையாய் உமை நாம் பெற்றது தரணியில் நாம் பெற்ற பெரும்பேறே!
உழைப்பின் உயரம் நீங்கள்! ஊக்கத்தின் ஊன்றுகோல் நீங்கள்!
கண்டிப்பாய் மட்டுமல்ல கண்ணியமாய் எமை வளர்த்தீர்கள்!
கல்வி தந்தீர்கள் எமக்கு! வாழ்வின் முறைதனை
உங்களைப் பார்த்துக் கற்றுக் கொண்டோம்!
இடர் சூழ்ந்த எம் நாட்டில் கண்ணிமை போல் எமைக் காத்தீர்கள்
கடல் கடந்து சேர்ந்து விட்டோம் காலமும் கடந்து சென்றது
அப்பப்பா அங்கு ஒன்றாய் இங்கு ஒன்றாய் ஐயா எம் நினைவுகள் சுடும்!
உணவு உண்ணும் போதும் உடை உடுத்தும் போதும் ஊர் நினைவுகள் வரும் போதும் ஐயா உங்கள் நினைவுகள் உறுத்தும்! உங்கள் பேரப்பிள்ளைகள் அசைவில் பெருமிதமாய் சொல்வோம் ஐயா போலென்று!
ஐயா உன் நினைவு வரும் வேளை அருமையான
உம் வாழ்வு தந்த பெருமையுடன் வாழ்கின்றோம்!
நிம்மதியாய் உறங்குங்கள் தந்தையே!

உங்கள் ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் பூட்டப் பிள்ளைகள்

தகவல்:- ராகவன் 416 531 2122 சொரூபன் 011 33 612794949 (பிரான்ஸ்)
காலஞ்சென்ற சாரங்கன் (ஜேர்மனி) நிலா 41788506539
(சுவிஸ்) குமுதா 416 882 6694 தர்சி 647 764 7438



VENNILA ENTERTAINERS
பெருமையுடன் வழங்கும்
APRIL 25
SATURDAY@ 5:30PM
The Theatre at GREAT CANADIAN TORONTO
1133 Queen's Plate Dr, Toronto, ON M9W 0G4
(Free Parking)
TRAVEL PARTNER
VMS TRAVEL
Tel: 416.293.5800
Get Your Tickets at ticketmaster.ca starting from $45
NEW PROMOTERS AUTO CENTRE
T:416.285.8608 / 416.752.9797
THANKS TO
east FM 102.7
TITLE SPONSOR
Effective. Responsive. Caring
HIMPRO
POWERED BY
TCS Top Choice Solutions
"For all your transportation needs"
DOVE SQUARE PROPERTY MANAGEMENT INC.
T: 416-335-3683
Tisant Rajaratnam
RE/MAX
THIVANESH
SUSANTHICA
SREEHARI
SHIVANI
S P CHARAN
CHINNU SENTHAMILAN
SAPESAN
PAVITRA
Sa Re Ga Ma Pa 2026
தென்னிந்திய இசைக் கலைஞர்கள்
ROUGE BAKERY
MEDIA PARTNERS
ஈழநாடு
மகிழ்ச்சி MAKILCHI
CATERING PARTNER
SOUTHERN AROMA
Tel: 416-837-7454
VENUE PARTNER
ARYLIA Productions
GOLD SPONSORS
LIFT 24/7 TOWING SERVICE
LIFT-Towing & Auto Services
416-473-3855 | 416-879-5267
INSURANCE FOR THE HIGH-NET-WORTH
Prem Arasaratnam
INSURANCE BROKER
BIG
416 845 3000
NEW PROMOTERS AUTO CENTRE
Complete Automotive Service & Repairs
773 Warden Ave. Unit 8 Scarborough ON M1L 4C3
T:416.285.8608 / 416.752.9797
GOLD SPONSORS
Platinum CAR & TRUCK RENTAL
416-613-1811
Netwyn.Place
MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
inter-citi LOGISTICS
PHOTO FAST WORLDWIDE SHIPPING CENTRE
416-230-3733
JUDE ANTHONYPILLAI
தொடர்புகளுக்கு: 647-612-4166 | 647-655-9531 | 647-621-7889 | VIP|VVIP 647-594-9573



Secure. Grow. Protect.
Your Future, Your Terms - Protect What Matters
KRISHNA SABARATNAM
Insurance & Investments
I'm here to help! Call now
416-846-2685
Krishna.gsabaratnam@gmail.com
10 Thornmount Drive, Scarborough, ON, M1B 3J4.

# அவசரகாலப் பிரகடனம் நீடிப்பு:- வாக்கெடுப்பில் பங்கேற்காத எதிரணி உறுப்பினர்கள் வெளியே எதிர்ப்பை வெளிப்படுத்தி என்ன பயன்?

அவசரகால பிரகடனத்தைத் தொடர்ந்து நீடிப்பது குறித்து கடந்த வாரம் பாராளுமன்றத்தில் கோரப்பட்ட வாக்கெடுப்பில் அதற்கு எதிராக 27 வாக்குகள் மாத்திரமே அளிக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 66 ஆக இருக்கையில், வெறுமனே 27 பேர் மாத்திரமே அதற்கு எதிராக வாக்களித்திருக்கிறார்கள். அவ்வாறெனில் இந்த முக்கிய வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அவசரகாலப் பிரகடனம் குறித்து பாராளுமன்றத்துக்கு வெளியே எதிர்ப்பை வெளிக்காட்டுவதால் என்ன பயன்? என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

'தித்வா' சூறாவளியினால் ஏற்பட்ட பேரனர்த்தத்தை அடுத்து ஜனாதிபதி



அநுரகுமார திசாநாயக்கவினால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் தொடர்ந்து நீடிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழான அவசரகால அமுலாக்கத்தை நீடிக்கும் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு கடந்த வாரம் 10 ஏப்ரல் 2026 வியாழக்கிழமை 110 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.


இது குறித்து கடும் கண்டனம் வெளியிட்ட சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன், 'தித்வா' சூறாவளி போன்ற இயற்கைப் பேரனர்த்த சூழ்நிலையில் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியமில்லை எனச் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக கடந்தகால அரசாங்கங்கள் நியாயமற்ற காரணங்களைக்கூறி, மக்கள் மீது ஒடுக்குமுறைகளைப் பிரயோகிக்கும் வகையில் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்திய சம்பவங்களை நினைவுகூர்ந்த அவர், கட்டமைப்பு ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்துவதாக வாக்குறுதியளித்து ஆட்சிபீடமேறிய தற்போதைய அரசாங்கமும் முன்னைய அரசாங்கங்களின் பாதையிலேயே பயணிப்பதாக விசனம் வெளியிட்டார்.

அதேபோன்று 'ஊடகங்களில் வெளியான செய்திகளின் பிரகாரம் அவசரகால பிரகடனத்தைத் தொடர்ந்து நீடிப்பது குறித்து கடந்த வாரம் பாராளுமன்றத்தில் கோரப்பட்ட வாக்கெடுப்பில், அதற்கு எதிராக 27 வாக்குகள் மாத்திரமே அளிக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 66 ஆக இருக்கையில், வெறுமனே 27 பேர் மாத்திரமே அதற்கு எதிராக வாக்களித்திருக்கிறார்கள்.

அவ்வாறெனில் இந்த முக்கிய வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள், அவசரகாலப் பிரகடனம் குறித்து பாராளுமன்றத்துக்கு வெளியே எதிர்ப்பை வெளிக்காட்டுவதால் என்ன பயன்?' என்றும் அம்பிகா சற்குணநாதன் கேள்வி எழுப்பினார். மேலும் அவசரகாலச்சட்டத்தை பொதுமக்களின் உரிமைகளை ஒடுக்குவதற்கான ஆயுதமாக ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது என்பதை அரசாங்கம் மனதிலிருத்திச் செயற்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

# இலங்கைக்கான ஆதரவு தொடரும்:- ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் உறுதி



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஊடாக இலங்கைக்கு தொடர்ச்சியான ஆதரவு வழங்கப்படும் என உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் ஐ.நாவுக்கான இலங்கையின் தூதுவரும் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியுமான சுமித் தஸநாயக்கவிடம் உறுதியளித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபைக்கான அலுவலகத்தின் ஊடாக இலங்கைக்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதாகவும் உறுதியளித்தார். இலங்கையின் தூதுவரும் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியுமான சுமித் தஸநாயக்க 13 ஏப்ரல் 2026 திங்கட்கிழமை ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கை சந்தித்துக் கலந்துரையாடினார். இச்சந்திப்பின் போது இலங்கையின் அண்மைய கால முன்னேற்றங்கள் தொடர்பில் உயர்ஸ்தானிகருக்கு விளக்கமளித்த நிரந்தர வதிவிடப் பிரதிநிதி தஸநாயக்க, இருதரப்பு நலன் சார்ந்த பல்வேறு விடயங்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடினார்.

அதேபோன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் ஆகியவற்றுடன் இலங்கை தொடர்ந்து பேணிவரும் ஒத்துழைப்பு மற்றும் ஆக்கபூர்வமான ஈடுபாட்டையும் தஸநாயக்க மீள உறுதிப்படுத்தினார். அதேவேளை இலங்கையின் ஒத்துழைப்பு தொடர்பில் பாராட்டை வெளிப்படுத்திய உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க், தமது அலுவலகத்தின் ஊடாக இலங்கைக்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

இதேவேளை இந்திய துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஷ்ணன் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு செல்லவுள்ளார். இலங்கையில் புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர், இந்திய உயர்மட்டத் தலைவர் ஒருவர் மேற்கொள்ளும் மிக முக்கியமான விஜய மாக இதுவாகும்.

இந்த விஜயத்தின் போது துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஷ்ணன் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரைச் சந்தித்து இருதரப்பு நலன்கள் குறித்து விரிவான கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

முன்னதாக, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி பிரபாத் சந்திரகீர்த்தி மற்றும் இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி சத்யாஞ்சல் பாண்டே ஆகியோருக்கு இடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில், இந்த விஜயத்திற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சி நிரல்கள் இறுதி செய்யப்பட்டன. இந்த விஜயத்தின் முக்கிய அம்சமாக, இந்தியாவின் நிதியுதவியுடன் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தனித்துவமான திட்டங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது.(18ம் பக்கம் பார்க்க)

# ஈரானின் ஹோர்மூஸ் நீரிணை மூடல்:- அமெரிக்க வியூகமும் தாக்கமும் ஒரு பார்வை

இரண்டு வார கால போர்நிறுத்தம் என்ற அமெரிக்கா - ஈரானின் அறிவிப்பு உலகம் முழுவதும் மிகப் பெரிய நிம்மதியைக் கடத்தியது. அடுத்ததாக அமைதிப் பேச்சுவார்த்தை என்ற அறிவிப்பு, கூடுதல் நம்பிக்கையை ஏற்படுத்தியது. ஆனால், பாகிஸ்தான் மத்தியஸ்தம் செய்த பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது.

இனி, ஈரான் பேச்சுவார்த்தைக்கு வந்தாலும், வராவிட்டாலும் எனக்குக் கவலையில்லை நான் ஹார்முஸ் நீரிணையையை மூடப் போகிறேன் என்று டொனால்டு ட்ரம்ப் ஐ டோண்ட் கேர் மனநிலைக்குள் சென்றுவிட்டார்.

இந்நிலையில், ஈரான் - அமெரிக்க, இஸ்ரேல் போர் இனி என்னவாகும், ட்ரம்ப்பின் புதிய எச்சரிக்கை என்ன மாதிரியான தாக்கத்தை அமெரிக்காவிலும், உலகளவிலும் ஏற்படுத்தக்கூடும், இந்தப் போரை நீட்டிப்பதிலும், நிறுத்துவதிலும் ட்ரம்ப் முன்னால் இருக்கும் வாய்ப்புகள் என்னென்ன என்பன குறித்து சற்று தெளிவாகப் பார்ப்போம்.

அமெரிக்க ராணுவத்தின் சென்ட்ரல் கமான்ட் (US CENTCOM), ஹார்முஸ் நீரிணையை மூடும் என்று ட்ரம்ப் அறிவித்துவிட்டாலும், அது எப்படி சாத்தி யம், இந்த சென்ட்காம் என்பது என்ன போன்ற சந்தேகங்கள் நிலவுகின்றன.

முதலில் சென்ட்காம் பற்றி அறிவோம். சென்ட்ரல் கமாண்ட் என்பதன் சுருக்கமே சென்ட்காம். 1983-ல் நிறுவப்பட்ட இது, மத்திய கிழக்கு, மத்திய ஆசியா மற்றும் தெற்காசியாவின் சில பகுதிகள் உட்பட 21 நாடுகளில் அமெரிக்க ராணுவ நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் ஒரு முக்கிய அமைப்பாகும். இப்பகுதியில் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துதல், மோதல்களைத் தடுத்தல் மற்றும் பிராந்திய நிலைத்தன்மையை உறுதி செய்தல் போன்ற பணிகளைச் சென்ட்காம் செய்கிறது. இதன் தலைமையகம் ஃப்ளோரிடாவில் உள்ளது.

ட்ரம்ப் விடுத்த ஹார்முஸ் மூடல் குறித்து இந்த அமைப்பு, ஈரான் நேரப்படி மாலை 5.30 மணியளவில் (இந்திய நேரப்படி இன்று மாலை 7.30 மணி) சென்ட்காம் ஹார்முஸ் முடக்கத்தை அமல்படுத்தும். அப்போது தொடங்கி, பாரசீக வளைகுடா, ஓமன் வளைகுடா வழியாக ஈரான் துறைமுகங்களுக்குள் நுழைய முற்படும் அனைத்து கப்பல்களும் தடுத்து நிறுத்தப்படும். ஆனால், இவையல்லாது பிற துறைமுகங்கள் இடையே பயணிக்கும் கப்பல்கள் ஹார்முஸ் நீரிணையை வழியாக அனுமதிக்கப்படும். இதனை அமெரிக்க போர்க் கப்பல்கள் உறுதி செய்யும். ஈரான், ஹார்முஸுக்கு அடியில் புதைத்து வைத்திருப்பதாகச் சொல்லும் கண்ணிவெடிகளையும் சமாளிக்கும் என்று விளக்கியுள்ளது.



இதனிடையே, 'அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மீண்டும் தாக்குதல் நடத்த உத்தரவிட்டால், அடுத்த நொடியே ஈரான் மீது மிகப் பெரிய தாக்குதல்களை நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். ஈரானின் ஏவுகணை தாக்குதல்களை முறியடிக்க தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்து வருகிறோம்' என்று இஸ்ரேல் ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளதும் கவனிக்கத்தக்கது.

இந்த அறிவிப்பு வெளியானதிலிருந்தே ஹார்முஸில் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. தற்காலிக போர் நிறுத்தத்துக்குப் பின்னர் அன்றாடம் 40 வர்த்தக கப்பல்கள் பயணித்து வந்த நிலையில் அந்த எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது. மேற்காசிய பதற்றத்துக்கு முன்னால் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக நாள் ஒன்றுக்கு 100 முதல் 135 கப்பல்கள் பயணித்தன என்பது சுட்டிக்



காட்டத்தக்கது.

உலகளாவிய எண்ணெய் விநியோகத்தில் 20வீதம் ஹார்முஸ் வழித்தடத்தையே சார்ந்துள்ளது. இப்போது இதை முடக்கினால், ஏற்கனவே சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை தள்ளாடும் சூழலில் அது மேலும் உயரக் கூடும். அதன் நீட்சியாக பணவீக்கமும் அதிகரிக்கும்.

ஹார்முஸை சென்ட்காம் முடக்குவது சர்வதேச அளவில் அமெரிக்கா மீதான நம்பகத்தன்மையைக் குறைக்கும் என்று நிபுணர்கள் கணிக்கின்றனர். அதேபோல் இந்த போர் காரணமாக உள்நாட்டில் ஏற்படக் கூடிய பொருளாதார தாக்கங்களையும் சமாளிக்க வேண்டிய நிர்பந்தம் அமெரிக்காவுக்கு ஏற்படும் என்று கூறுகின்றனர்.

அதே போல் ட்ரம்ப்பின் அறிவிப்பு ஈரான் மீதான கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்தும் என்று கணிக்கப்படுகிறது. அமெரிக்கா ஹார்முஸை முடக்கினால், பாரசீக - ஓமன் வளைகுடாக்களில் எந்தவொரு துறைமுகமும் பாதுகாப்பானதாக இருக்காது என்று ஈரான் எச்சரித்திருந்தாலும், ஈரான் கடுமையான பாதிப்புகளை சந்திக்கும் என்று கணிக்கப்படுகிறது.

போர் தொடங்கிய பின்னரும் கூட ஹார்முஸ் மீதுள்ள ஆதிக்கத்தால், பல மில்லியன் பீப்பாய் எண்ணெய்யை ஏற்றுமதி செய்துள்ள ஈரான் மீது அழுத்தத்தை அதிகரிக்கும் நோக்கில் இந்த முற்றுகையை அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஈரான் மீது பல ஆண்டுகளாகவே பல்வேறு பொருளாதார தடைகளை அமெரிக்கா, மேற்கத்திய நாடுகள் விதித்துள்ள நிலையில், இப்போது ஹார்முஸை முடக்கினால் ஈரான் எண்ணெய் ஏற்றுமதியின் பெரும்பகுதியை, 'மறைமுக வழித்தடங்கள்' மூலம் கொண்டு செல்ல நேரிடும். இதனால் ஹார்முஸ் மீதான ஈரானின் ஆதிக்கம் குறையும் என்று அமெரிக்கா கணக்கிடுகிறது.

ஈரானுக்கு மட்டுமல்ல, சர்வதேச அளவில் எரிபொருள் விநியோகத்தில் இது மிகப் பெரிய நெருக்கடியை ஏற்படுத்தக் கூடும். கடந்த பிப்ரவரி 28-ம் தேதி ஈரான் மீதான் போர் தொடங்கிய நாளில் கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்று 70 டாலருக்கு விற்பனையானது. இப்போது ஒரு பீப்பாய் 102.29 டாலருக்கு விற்பனையாகிறது. தற்காலிக போர் நிறுத்தம் ஏப்ரல் 22-ம் தேதியுடன் முடிவடையும் நிலையில், அமெரிக்காவின் ஹார்முஸ் முடக்கம் அமலானால் அடுத்தது என்னவென்ற பீதி உலகம் முழுவதும் பீடித்திருக்கிறது.

இந்நிலையில், சர்வதேச சமூகத்தின் நலன் கருதி ஹார்முஸ் ஜலசந்தியில் அமைதி மற்றும் கட்டுப்பாட்டைக் கடைபிடிக்குமாறு சீனா வேண்டியுள்ளது.

தெற்காசிய கூட்டமைப்பான ஆசியான் அமைப்பு போர் நிறுத்தத்தை முழுமையாக தீவிரமாக கடைப்பிடித்து, சர்வதேச கப்பல் போக்குவரத்துக்கு உரிய பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டின் அதிபர் இமானுவேல் மேக்ரான், பிரான்ஸூம், பிரிட்டனும் இணைந்து ஹார்முஸில் அமைதியை நிலை நாட்டுவது தொடர்பான ஆலோசனைகளை மேற்கொள்வோம் எனத் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா இது போல் அந்நிய நாட்டின் கப்பல் போக்குவரத்தை முடக்குவது முதன்முறை அல்ல. கியூபாவிலும், வெனிசுலாவிலும் கூட அண்மையில் நடத்தியது.

இப்போது ஈரானிலும் அதை செயல்படுத்தும் முனைப்பில் உள்ளது. முடக்கத்தை எப்படி செயல்படுத்தப் போகிறது என்பதை விட அஹன் தாக்கங்கள் என்னவென்பதே கவனத்தை ஈர்க்கிறது.

வளைகுடா நாடுகள் சர்வதேச எரிபொருள் விநியோகப் புள்ளியாக உள்ளது. அதுதவிர ஹைட்ரோகார்பன்கள் இருப்பிடமாகவும் இருக்கின்றது. இந்தப் போரும், ஹார்முஸ் முடக்கம் போன்ற நடவடிக்கைகளும் இன்னும் சில வாரங்கள் நீடித்தால் பெட்ரோல், டீசல் விலை உயர்வு தாண்டி பல படிநிலைகளில் பல்வேறு மோசமான பாதிப்புகள் ஏற்படக் கூடும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

ஏற்கெனவே இந்தியாவில் எல்பிஜி தட்டுப்பாட்டால் பல்வேறு தொழில்களும் பாதிக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாது மறைமுகமாக பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில் ஹார்முஸ் முடக்கம் எச்சரிக்கையால், இன்று பங்குச் சந்தைகள் சரிந்ததோடு, ரூபாய் மதிப்பும் குறைந்தது. இந்தியாவை விட அதிகமாகவே சீனாவும் பாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது. (18ம் பக்கம் பார்க்க)